உதயன்

சுடர் 30 | கதிர் 314 | வள்ளுவர் ஆண்டு 2046 | புரட்டாதி 19, செவ்வாய்க்கிழமை 06.10.2015

## புலமைப்பரிசில் பெறுபேறுகள் 12ஆம் திகதி

கொழும்பு, ஒக்.6
கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் திட்டமிட்டபடி எதிர்வரும் 12ஆம் திகதி வெளியிடப்படும் எனப் பரீட்சைகள் பக்கம் 24

# 3 ஆண்டுகளில் இலங்கை சிறந்த விவசாய நாடாகும்

### கிளிநொச்சியில் கூறினார் மைத்திரிபால



கிளிநொச்சி, ஒக். 6
இலங்கையை தன்னிறைவுள்ள விவசாய உற்பத்தி உள்ள நாடாக மாற்றுவதே தனது நோக்கம் எனவும், இன்னும் மூன்று ஆண்டுகளில் இலங்கையைச் சிறந்த விவசாய நாடாக மாற்ற வேண்டும் எனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்

கிளிநொச்சி கோவிந்தன் கடைச்சந்தி மருதநகர்ப் பகுதியில் நேற்று இடம்பெற்ற தேசிய உணவு உற்பத்தி வேலைத் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நான் கிளிநொச்சிக்கு புறப்பட்டபோது மகிழ்ச்சியுடன் இருந்தேன். இங்கு வந்ததும் இன்னும் சந்தோசமாக உள்ளேன்.

இந்தத் தேசிய உணவு உற்பத்தி செயற் பாட்டில் முக்கிய காரணம் அல்லது நோக்கம் ஏழ்மை வறுமை போன்ற வற்றை இல்லாது செய்வதே ஆகும். எமது நாட்டில் வறுமை நிலை வருவதற்கு பொருள்களை நாங்கள் இறக்குமதி செய்வதே முக்கிய காரணமாகும். உதாரணத்துக்கு சொல்லப்போனால் இலங்கையில் இறக்குமதிக்காக அதிகமா பக்கம் 24

# வடக்கு மாகாண சபையுடன் ஒத்துப்போகாத அதிகாரிகள்

### கிளிநொச்சியில் ஜனாதிபதி கவலை

யாழ்ப்பாணம், ஒக். 6
பிரதேச செயலாளர்கள் மற்றும் மத்திய அரசின் உத்தியோகத்தர்கள், வடக்கு மாகாண சபையுடன் ஒத்துழைத்துச் செயற்படாமை கவலைக்குரிய விடயம் என்று தெரிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இது தொடர்பில் கவனத்தில் எடுத்துக் கொள்வதாக வடக்கு முதலமைச்சரிடம் உறுதியளித்துள்ளார்.

இரணைமடுவில் நேற்று இடம்பெற்ற தேசிய உணவு உற்பத்தி ஆரம்ப நிகழ்வில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பங்கெடுத்திருந்தார். இந்த நிகழ்வில், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனும் கலந்து கொண்டிருந்தார். இதன்போதே, மேற்படி விடயங்களை பக்கம் 24

# இலங்கையை அவதானிக்க சர்வதேசச் சட்டவாளர் குழு

### அமைக்கிறது நாடு கடந்த தமிழீழ அரசு

கொழும்பு, ஒக்.6
ஐ. நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் பரிந்துரைக்கப்பட்டவை நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பது குறித்துக் கண்காணிக்கப்பட உள்ளதாக நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் வீ.உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நீதிபதிகள், விசாரணையாளர்கள், சட்டத்தரணிகளை உள்ளடக்கிய சர்வதேசக் குழுவை நியமித்து இந்தக் கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ள உள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இவ்வாறு கொழும்பு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.
இது தொடர்பில் பக்கம் 24

## இடியுடன் கூடிய மழை பெய்யும்

யாழ்ப்பாணம், ஒக் .6
பருவப் பெயர்ச்சிக் காற்று ஆரம்பித்துள்ளதால் பிற்பகலிலும், இரவு நேரங்களிலும் இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும் என வளிமண்டலத் திணைக்களப் பொறுப்பதிகாரி ரீ. பிரதீபன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,
நேற்று முன்தினம் 50.8 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், நேற்று 31.7 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளது. இது வரை இந்த வருடத்தில் யாழ். மாவட்டத்தில் 529 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி பக்கம் 24

# தனித்து வாழவே தமிழர் விருப்பம்

### ஜனாதிபதி முன்னிலையில் கூறினார் வடக்கு முதல்வர்



யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 6
எமது மக்கள் கொடிகளாகப் பெரும்பான்மையினருடன் இணைந்து வாழ் வதை விரும்பவில்லை. பெரும்பான்மையினர்கள் தனி மரங்களாக வாழ்வதைப் போன்று தாமும் தனி மரங்களாக வாழ்வதையே எமது மக்கள் விரும்புகின்றனர்.

இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்பாக, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

பெரும்பான்மையின மக்கள் மரமாகவும் சிறுபான்மையின மக்கள் கொடியாகவும் இணைந்து வாழ்வதே தேசிய ஒருமைப்பாடு என்ற எண்ணம் இந்த நாட்டில் பலர் மத்தியிலும் இருந்து வந்திருக்கின்றது. வடக்கு - கிழக்கு மாகாண மக்கள் அதை ஏற்கவில்லை, ஏற்கவும் முடியாது. காரணம் பக்கம் 24

## நாணய நிதியத்திடம் நிதி கோருகிறது இலங்கை

கொழும்பு, ஒக்.6
இலங்கைக்கான உதவிகளை அதிகரிக்குமாறு சர்வதேச நாணய நிதியத்திடம் கோரப்படவுள்ளதாக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

பெரு நாட்டின் லீமா நகரில் எதிர்வரும் 9ஆம் திகதி முதல் 11ஆம் திகதிவரையில் நடைபெறவுள்ள உலக வங்கிக் குழு மற்றும் சர்வதேச நாணய நிதிய வருடாந்தக் கூட்டத்தில் அமைச்சர் கருணாநாயக்க பங்கேற்க உள்ளார்.

நிதி அமைச்சருடன் மத்திய வங்கியின் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன், நிதி அமைச்சின் செயலாளர் ஆர்.எச்.எஸ். சமரதுங்க ஆகியோரும் பெருவுக்குப் பயணம் செய்யவுள்ளனர். உலக வங்கியின் வருடாந்தக் கூட்டம் நாடுகளின் நிதி அமைச்சர்கள் மற்றும் மத்திய வங்கியின் ஆளுநர்களின் பங்களிப்புடன் நடத்தப்பட உள்ளது.
இலங்கைக் பக்கம் 24

## கிரிதல முகாம் சோதனையில் 11 படையினர் கைது

கொழும்பு, ஒக்.6
ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தல் சம்பவம் தொடர்பில் கிரிதல படை முகாமை சோதனை செய்த போது சந்தேகத்தின் பேரில் 11 படையினரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸ் தலைமையகம் அறிவித் பக்கம் 24

# ராணுவம் வைத்திருந்த காணிகளை மக்களிடம் கையளித்தார் மைத்திரி

கிளிநொச்சி, ஒக். 6
கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இராணுவத்தினரால் கையகப் படுத்தப்பட்டிருந்த 576 ஏக்கர் பரப்பளவு கொண்ட பொதுமக்களின் காணிகள் நேற்று ஜனாதிபதியினால் உரியவர்களிடம் கையளிக்கப்பட்டன.

கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற உணவு உற்பத்தி தேசிய வேலைத் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வின்போதே ஜனாதிபதியால் குறித்த காணிகளுக்கான பத்திரங்கள் பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டன.

கிளிநொச்சி – பரவிப்பாஞ்சான் உள்ளிட்ட சில பிரதேசங்களில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இரு ந்த 437 ஏக்கர் காணிகள், முல்லைத்தீவு மாவட்டத்தில் 139 ஏக்கர் காணிகள் ஆகியவற்றுக்கான பத்திரங்களையே ஜனாதிபதி மக்களிடம் வழங்கினார்.

நேற்று மேடையில் வைத்து இருவருக்கான காணிப் பத்திரங்கள் மாத்திரமே வழங்கப்பட்டன. ஏனையவை மாவட்ட செயலகத்தினூடாக வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

நேற்று இடம்பெற்ற குறித்த நிகழ்வில் இயந்திரத்தின் உதவியுடன் நாற்று நடுதல் ... நிகழ்வுகள் இடம்பெற்றன. ஜனாதிபதி பக்கம் 24

## உள்ளக விசாரணைக்கு ஜப்பான் ஆதரவு

டோக்கியோ, ஒக்.6
இலங்கையின் உள்ளக விசாரணைப் பொறிமுறைக்கு ஆதரவளிக்கப்படும் என ஜப்பான் அரசு அறிவித்துள்ளது.
பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் புமியோ கிஸிடாவை நேற்றுச் சந்தித்தார். இந்தச் சந்திப்பு தொடர்பில் பிரதமர் அலுவலகம் வெளி பக்கம் 24

# உள்நாட்டு நீதித்துறை சீராக்கப்படவேண்டும்

### அதன் பின்பே ஐ.நா. தீர்மானத்தை நிறைவேற்றலாம் என்கிறார் ஆசிய மனித உரிமைகள் பணிப்பாளர்



கொழும்பு, ஒக்.6
ஐ. நா. மனித உரிமைகள் சபையின் இலங்கை குறித்த தீர்மானங்களை நிறைவேற்ற, உள்நாட்டு நீதித்துறையில் நிலவி வரும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படவேண்டியது மிகவும் அவசியமானது என ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கொள்கை மற்றும் திட்டப் பணிப்பாளர் டெஸ்மன் டி சில்வா தெரிவித்துள்ளார். பக்கம் 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இராணுவத்திடமிருந்து டிராக்டரை தயவு செய்து மீட்டுத் தாருங்கள்

## வடக்கு முதலமைச்சரிடம் நேற்று விவசாயி ஒருவர் கண்ணீருடன் மனு

யாழ்ப்பாணம், ஒக்.6

இறுதிப் போரில் முள்ளிவாய்க்காலில் விட்டு வந்த எனது உழவு இயந்திரத்தை படையினர் பயன்படுத்துகின்றனர். அதனை மீட்டுத் தாருங்கள் என கிளிநொச்சி விவசாயி கண்ணீர் மல்க வடமாகாண முதலமைச்சர் ஊடாக ஜனாதிபதிக்கு மனுக் கையளித்தார்.

தேசிய உணவு உற்பத்தி வேலைத் திட்ட நிகழ்வுகள் நேற்று கிளிநொச்சி வட்டக்கச்சிப் பிரதேசத்தில் இடம்பெற்றது. இதில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இதன்போதே ஒரு விவசாயி இந்தத் தேசிய உணவு உற்பத்தி வேலைத்திட்ட நிகழ்வின் ஊடாக வேனும் எனது விவசாய பொறியான உழவு இயந்திரத்தைப் படையினரிடம் இருந்து மீட்டுத் தாருங்கள் என கோரிக்கை விடுத்த தோடு இது தொடர்பான மனு ஒன்றையும் கையளித்தார்.

குறித்த மனு தொடர்பாக குறித்த விவசாயி தெரிவித்ததாவது:-

2009ஆம் ஆண்டு இறுதிப் போர்க் காலத்தில் எனது உழவு இயந்திரத்துடனேயே நான் இடம் பெயர்ந்தேன். எனது நிரந்தரத் தொழிலே விவசாயம்தான். அந்த உழவு இயந்திரமே எனது குடும் பத்தை வாழவைத்தது. இறுதிப் போரின் பின்பு செட்டிக்குளம் மெனிக்பாமில் இருந்து மீள்குடி யேறியவுடன் முள்ளிவாய்க்கால் சென்று எனது உழவு இயந்திரத் தைத் தேடினேன். அங்கு காணவில்லை. மனவேதனையுடன் தொழில் செய்ய முடியாது கூலி வேலையே இன்றுவரை செய்து வருகின்றேன்.

இந்த நிலையில் 2011ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் கிளிநொச்சியில் உள்ள ஓர் இராணுவ முகாமில் எனது உழவு இயந்திரத்தைக் கண்டேன். அதனை என்னிடம் ஒப்படைக்குமாறு பலதடவை கோரிக்கை விடுத்தபோதும் ஒப்படைக்கவில்லை. அதுமட்டுமன்றி எனது உழவு இயந்திரத்தின் இலக்கத் தகட்டையும் அகற்றிவிட்டே தமது பாவனையில் வைத்துள்ளனர். இன்றைய இந்தத் தேசியஉணவு உற்பத்தி வேலைத்திட்ட நாளின் மூலமாவது எனது குடும்பத்தின் வாழ்வாதார உற்பத்திக்கும் நாட் டின் ஜனாதிபதி உதவவேண்டும்-என்றார்(ற-103)



## சுதுமலையில் வாள்வெட்டு; ஒருவர் படுகாயம்

வலி.வடக்கு, ஒக்.6

சுதுமலையில் இடம் பெற்ற வாள்வெட்டு சம்பவத்தில் ஒரு இளைஞர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு சுதுமலை அம்மன் கோவில் பகுதியில் இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த நான்கு பேர் இந்த வாள் வெட்டை மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

சுதுமலை வடக்கைச் சேர்ந்த ஸ்ரீகிருஸ்ணகுமார் (வயது-26) என்ற இளைஞரே வெட்டுக்கு இலக்காகியுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற-86)

## நெடுந்தீவுச் சிறுமி கொலை வழக்கு:

# மரபணுச் சோதனை அறிக்கை 3 ஆண்டுகள் கடந்தும் இல்லை

யாழ்ப்பாணம், ஒக். 6

நெடுந்தீவில் 13 வயதுச் சிறுமி ஒருவர் வன்புணர்வின் பின்னர் கொலை செய்யப்பட்ட வழக்கில் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டிருந்த நிலையில், அவர் தொடர்பான மரபணுப் பரிசோதனை அறிக்கையைப் பொலிஸார் நீதிமன்றில் இன்னும் சமர்ப்பிக்கவில்லை. அதனால் அந்த வழக்கு விசாரணையும் நிறைவடையாது உள்ளது.

2012 ஆம் ஆண்டு மார்ச் 3 ஆம் திகதி குறித்த சிறுமி வெற்றுக் காணி ஒன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டிருந்தார். நெடுந்தீவு 8 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ஜேசுதாசன் லக்சினி என்ற சிறுமியே வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் தலையில் கல்லால் தாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டிருந் தார்.

நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் 8 ஆம் தரத்தில் பயிலும் குறித்த மாணவி, சம்பவதினம் மீன் வாங்குவதற்காக வீட்டிலிருந்து புறப்பட்டுச் சந்தைக்குச் சென்றிருந்தார். சந்தையில் அந்தச் சிறுமியை அவரது உறவினர்களும் கண்டிருந்தனர். ஆனால் அந்தச் சிறுமி பின்னர் வீடு திரும்பவில்லை. சிறுமியைக் காணாது பெற்றோர் தேடி அலைந்துள்ளனர். அதன்போது அதே வட்டாரத்திலுள்ள பிள்ளையார் கோயிலுக்கு அருகாக வெற்றுக் காணி ஒன்றிலிருந்து அவர் சடலமாகக் கண்டுபிடிக்கப்பட்டார்

மாணவியின் ஆடைகள் களையப்பட்டிருந்ததோடு அவரது உடலில் கல்லால் தாக்கப்பட்ட காயங்களும் காணப்பட்டன. சடலத்துக்கு அருகில் சைக்கிளும் மதுப் போத்தல் ஒன்றும் இருந்து பொலிஸாரால் மீட்கப்பட்டிருந்தது.

பொலிஸார் சம்பவ இடத்தில் விசாரணை மேற்கொண்டனர். ஊர்காவற்றுறை நீதிவான் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணை மேற்கொண்டு சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுச் சடலம் பின்னர் புதைக்கப்பட்டது.

சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கந்தசாமி ஜெகதீஸ்வரன் (வயது -31) என்பவர் கைது செய்யப்பட்டார். அவர் பூரண உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார். சில வருடங்களின் பின்னர் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார். ஆனாலும் அவரைப் பிணை எடுக்க எவருமே முன்வரவில்லை. அதனால் அவர் 3 வருடங்களுக்கு மேலாக இன்னும் சிறையிலேயே உள்ளார். அவர் ஈ.பி.டி.பியின் முன்னாள் உறுப்பினர் என்று அவர் கைது செய்யப்பட்டபோது அங்குள்ள மக்களும் கூறியிருந்தனர். அவர் இது போன்ற சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டவர் என்றும் அந்தப் பகுதி மக்கள் கூறியிருந்தனர்.

அவர் கைது செய்யப்பட்ட பின்னர் பரிசோதனைக்காக அவரது ரத்த மாதிரி பெறப்பட்டு மரபணுப் பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டது. 3 வருடங்கள் கடந்துவிட்டபோதும் அந்த மரபணுப் பரிசோதனை அறிக்கையைப் பொலிஸார் இன்றுவரை ஊர்காவற்றுறை நீதிமன்றில் சமர்ப்பிக்கவில்லை. அந்த அறிக்கையைப் பொலிஸாரே சமர்ப்பிக்க வேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதனால் அந்த மாணவியின் வழக்கு விசாரணை இன்னும் முடிவுறாமலேயே இருந்து வருகிறது. சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டு வருகின்றன. இத்தகைய வழக்குகள் பின்னர் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுப் பின்னர் விசாரணைக்காக [illegible]. மேல்நீதிமன்றுக்குப் பாரப் படுத்தப் படுவது வழமை. இந்த வழக்கு எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவில் குறித்த சிறுமி வன்புணர்வின் பின்னர் கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து அங்கு பொது மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ற-4)

# காளான் உற்பத்தியாளருக்கு மேலதிக வசதி வாய்ப்புக்கள்

## விவ்சாயத் திணைக்களம் தெரிவிப்பு

அச்சுவேலி, ஒக். 6

யாழ். மாவட்டத்தில் காளான் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள முயற்சியாளர்களுக்கு மேலதிக வாய்ப்புக்கள், வசதிகள் வழங்கப்படவுள்ளன. இதுவரை யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களத்தில் பதிவு செய்யாத காளான் செய்கையாளர்களை விவசாயத் திணைக்களத்தில் பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் காளான் உணவுப் பாவனை அதிகரித்து வருகிறது. மருத்துவ குணம் உள்ளது. காளான் ஏனைய மரக்கறி வகை போன்று கிருமி நாசினி மற்றும் செயற்கையான உரப்பசளை பாவனை இன்றி இயற்கையாக வளர்வது. அந்த வகையில் பாவனை அளவு அதிகரித்து வருகின்றது. காளான் செய்கை மூலம் குறைந்த முதலீட்டுடன் கூடிய வருமானத்தை பெறக்கூடியதாக உள்ளது. காளான் செய்கையில் புதிதாக ஈடுபடுவர்களுக்கு செயல்முறையுடன் கூடிய பயிற்சி விவசாயத் திணைக்களத்தால் வழங்கப்பட்டு வருகின்றது.

இது தொடர்பாக யாழ். மாவட்ட விவசாயப் பணிப்பாளர் கி.ஸ்ரீ.பாலசுந்தரம் தெரிவித்ததாவது:-

காளான் செய்கையாளர்களுக்கு மேலதிகமான உதவிகளை வழங்குவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன. இதுவரை பதிவு செய்யாதவர்கள் பதிவு செய்யலாம். – என்றார்.(ற-11)

# கொழும்பு மாநகரில் 380 யாசகர்கள்

## விவரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன என்கிறார் அமைச்சர் சம்பிக்க

கொழும்பு, ஒக்.6

கொழும்பு நகரில் மாத்திரம் 380 யாசகர்கள் உள்ளனர் என்று மதிப்பீடு ஒன்றின் மூலம் தெரியவந் துள்ளது. – இவ்வாறு மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக ரணவக்க தெரிவித்துள் ளார்.

இவ்வாறு அடையாளம் காணப்பட்ட யாசகர்களின் விவரப்பட்டியல் தயாரிக்கப்படவுள்ளது என்றும் அவர்களில் சிலரை அரச செலவில் பராமரிப்பதற்கும் ஒரு சிலருக்கு தொழிற்பயிற்சிகளை வழங்குவதற்கும் நடவடிக்கைப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

யாசகர்கள் மற்றும் வறுமையில் வாழும் மக்களுக்கு புனர் வாழ்வளிக்காமல் கொழும்பு நகரை மட்டுமல்ல எந்தவொரு நகரை[illegible] அபிவிருத்தி நகரமாக மா[illegible] முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ற)



## கிளி பிடிக்க முயன்ற சிறுவனை பொந்திலிருந்த நாகபாம்பு தீண்டியது

வலி.வடக்கு, ஒக்.6

தென்னை மரத்தில் ஏறி கிளி பிடிக்க முற்பட்ட பாடசாலை மாணவனை நாகபாம்பு தீண்டியது. இந்தச் சம்பவம் சுன்னாகம் ஐயனார் கோவிலடிப் பகுதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை நடந்துள்ளது. மல்லாகம் மகா வித்தியாலத்தில் தரம் 10இல் கல்வி கற்கும் மாணவனான ரவி மோகனதாஸ் என்ற சிறுவன் தனது நண்பர்களுடன் பட்ட தென்னைமரத்தில் உள்ள பொந்தில் கிளி பிடிக்கும் முகமாக கையை மரப் பொந்தினுள் விட்டுள்ளார்.

இந் நிலையில் பொந்தில் இருந்த நாகபாம்பு அவரை தீண்டியுள்ளது. அதனை அறியாது வீட்டுக்கு சென்ற சிறுவன் தனக்கு கையில் ஏதோ கடித்துவிட்டது என்று கூறியுள்ளார். ஆயினும் சிறுவனின் கை மிகவும் வீங்கியதைத் தொடர்ந்து பெற்றோர்கள் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். அங்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. தற்போது சிறுவன் நலமடைந்து வருகின்றான் என்று வைத்திய சாலைத் தகவல்கள் தெரிவித்தன. (ற-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புங்குடுதீவு மாணவி மற்றும் கொட்டதெனியாவ சிறுமி கொலைக் குற்றவாளிகளுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கக் கோரி இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்கள் நேற்று திங்கட்கிழமை நடைபயணம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர். யாழ். மத்திய பஸ் நிலையத்தில் இருந்து காலை 7.30 மணியளவில் இந்த நடைபயணம் ஆரம்பமாகியது. இலங்கை போக்குவரத்து சபையின் வடமாகாண ஊழியர்கள் ஒன்றிணைந்து இந்த நடைபயணத்தினை ஏற்பாடு செய்துள்ளனர்.

இந்த நடைபயணம் எதிர்வரும் 12 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்படவுள்ளது. நடைபயணம் கொழும்பை சென்றடைந்ததுடன், ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதிக்கு இரு கொலைகள் குறித்தும் உரிய நடவடிக்கை மேற்கொண்டு தூக்குத் தண்டனை விதிக்க கோரும் மனு ஒன்று கையளிக்கப்படவுள்ளது. இந்த நடைபயணத்தில் கூட்டு வன்புணர்விற்குட்படுத்தப்பட்ட படுகொலை செய்யப்பட்ட மாணவி வித்தியாவின் தாயாரும் இணைந்துள்ளார். (ற-106,9)

# எல்லை தாண்டும் இந்தியப் படகுகளை உடன் கைப்பற்றுக

## மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவுச் சங்க சமாசம் கோரிக்கை

மன்னார், ஒக்.6

இலங்கை கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர் கதையாகிச் செல்கின்றது. எமது இறைமையை மீறும் இந்திய இழுவைப் படகுகளை உடன் கைப்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இலங்கைக் கடற்படையினரைக் கோருகின்றோம். – இவ்வாறு மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவுச் சங்க சமாசம் கோரிக்கை விடுத்துள்ளது.

மன்னார் மாவட்ட மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று திங்கட்கிழமை மீனவ கூட்டுறவுச்சங்க சமாசத்தில் நடைபெற்றது. அதிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது சமாசம் வெளியிட்ட



அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

இந்திய மீனவர்களால் அழிக்கப்படும் கடல் வளம் வருடமொன்றுக்கு 5.293 மில்லியன் ரூபாவாகும். இது வடபகுதி மீனவர்களின் ஒரு தனிநபருக்கான வருவாயில் 29.015 ரூபா இழப்பாகும். இந்திய மீனவர்களால் எமது இறைமை வருடமொன்றிற்கு 36 ஆயிரம் தடவை மீறப்படுகின்றது. நாம் இவ் இந்திய மீனவர்களின் வருகை மற்றும் அவர்களின் தொழில் முறைக்கு எதிராக பல போராட்டங்கள், மாநாடுகள், பாதயாத்திரைகள், சந்திப்புக்கள் நடத்தியும் இலங்கை மற்றும் இந்திய அரசுகள் கவனம் செலுத்துவதாக இல்லை.

இனியும் நாம் பொறுமை காப்போம் என்றால் எமது எதிர்கால சந்ததியினர் மீன்பிடித்தொழிலை கைவிட்டு. கூலித்தொழிலாளிகளாக மாறிவிடுவர் அல்லது வேலைக்காக வெளிநாடு செல்ல நேரிடும்.

எமது இறமையை பாதுகாக்கும்படி எமது கடற்படையினரிடம் கேட்டுக் கொள்கின்றோம். எமது இற மையை மீறும் இந்திய இழுவைப் படகுகளை உடன் கைப்பற்றுமாறு கோருகின்றோம்.– என்றுள்ளது. (ற-56)

# வாள்களுடன் இளைஞர் குழு பொலிஸாரால் மடக்கிப் பிடிப்பு

## ஏழாலை, மயிலணிப் பகுதியில்

வலி.வடக்கு, ஒக்.6

வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் ஐவர் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளர். அவர்களில் ஒருவர் கடந்தாண்டு மல்லாகம் நீதிமன்றத்தின் முன்பாக நீதி மன்றத்துக்குச் சென்று விட்டு வெளியில் திரும்பி வந்த வேளையில் இடம் பெற்ற வாள் வெட்டு சம்பவத்துடன் தொடர்புடையவர் என்று கூறப்படுகின்றது.

சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துஸ்மந்த தலைமையிலான பொலிஸ் குழுவே இவர்களை வளைத்துப் பிடித்துள்ளது.

நேற்று ஏழாலை மயிலணிப் பகுதியில் உள்ள வீடொன்றுக்கு ஆட்டோவிலும் மோட்டார் சைக்கிளிலும் சென்ற குழுவொன்று அங்கு வாள்கள், பொல்லுகளுடன் இளைஞர் ஒருவரைத் தேடியுள்ளது. வீட்டில் இருந்த பெண்கள் சத்தமிட்டதை அடுத்து அந்தப் பகுதி மக்கள் ஒன்று கூடியுள்ளனர். அதையடுத்து குறித்த குழு தப்பியோடியுள்ளது. இதுகுறித்து சுன்னாகம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

தமக்குக் கிடைத்த தகவலை அடுத்து சுன்னாகம் பொலிஸ் பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழுவினர் சம்பவ இடத்துக்குச் சென்று கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர். இந்தநிலையில் சிறிது நேரத்தின் பின்னர் குறித்த இளைஞர் குழு மீண்டும் அந்த இடத்துக்கு வந்துள்ளது.

அதையடுத்து அவர்கள் பொலிஸாரால் வளைத்துப் பிடித்துக் கைது செய்யப்பட்டுள்ளனர். ஐவர் சிக்க ஒருவர் தப்பியோடியுள்ளார். அவர் களிடம் இருந்து வாள்கள், கத்திகள் என்பனவும் ஓட்டோ, மோட்டார் சைக் கிள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித் தனர். இதுகுறித்த மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.(ற-86)

## புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறு திங்கள் வெளிவரும்

கொழும்பு, ஒக். 6

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் எதிர்வரும் 12 ஆம் திகதி வெளியிடப்படவுள்ளன என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் புஸ்பகுமார தெரிவித்தார். கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற இந்தப் பரீட்சையின் விடைத்தாள் திருத்தம்கடந்தசெப்டெம்பர்மாதம் 9 ஆம் திகதி தொடக்கம் 14 ஆம் திகதி வரை நடைபெற்றது. விடைத்தாள்கள் திருத்தப்பட்டு பெறுபேறுகளை வெளியிடுவதற் கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. அதனை வெளியிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற-4)

# இழப்பீடு ரூ.2 லட்சத்தை ஏப்பமிட்டார் சட்டத்தரணி

## ஒருவருடத்தின் பின்னர் வெளிவந்தது விடயம் யாழ்ப்பாணத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக். 6

விவாகரத்து வழக்கொன்றில் கணவரால் சட்டத்தரணி ஊடாக மனைவிக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகையான 2 லட்சம் ரூபாவை மனைவிக்கு வழங்காமல் அவரது சட்டத்தரணி ஏப்பமிட்டுள்ளார். இந்தச் சம்பவம் ஒரு வருடங்களுக்குப் பின்னர் தெரியவந்துள்ளது.

அச்செழு நீர்வேலியைச் சேர்ந்த பெண்ணொருவரை சாவகச்சேரியைச் சேர்ந்த கனடாவில் வசிக்கும் இளைஞரொருவர் 2012 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கைக்கு வந்து திருமணம் முடித்தார். திருமணம் முடித்து இரண்டு நாள்களில் கனடாவுக்குச் சென்ற இளைஞர் படிப்படியாகப் பெண்ணுடனான தொடர்பைத் துண்டித்ததுடன், அவருடன் சேர்ந்து வாழவும் மறுத்துவிட்டார். அதையடுத்துக் குறித்த பெண்ணால் கணவனுக்கு எதிராக யாழ். நீதிமன்றில் தாபரிப்பு வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டது.

அதனை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிமன்று, வெளிநாட்டிலுள்ள குறித்த சந்தேகநபர் இலங்கைக்கு வந்தால் நாட்டைவிட்டு வெளியேற முடியாத வகையில் பயணத் தடைக் கட்டளை விதித்திருந்தது. அதேவேளை கனடாவிலிருந்த குறித்த கணவனும் மனைவிக்கெதிராக விவாகரத்து வழக்கொன்றைச் சட்டத்தரணி ஊடாகத் தாக்கல் செய்திருந்தார். அதனடிப்படையில் நீதிமன்றால் விவாகரத்தும் வழங்கப்பட்டது.

அதன்போது மனைவிக்கு இழப்பீடாகச் செலுத்துவதற்காகக் கணவனின் சட்டத்தரணியால் மனைவியின் சட்டத்தரணியிடம் 2 லட்சம் ரூபா பணம் வழங்கப்பட்டிருந்தது. அதனைப்பெற்றுக் கொண்ட அந்தச் சட்டத்தரணி அந்தப் பணத்தை ஒரு வருடமாகியும் மனைவிக்கு கொடுக்கவில்லை. மனைவியின் சட்டத்தரணி அந்தப் பணத்தை வழங்காதது கணவனுக்கும் தெரியவில்லை.

இந்தநிலையில் விவாகரத்துப் பெற்ற பின்னர் இலங்கைக்கு வந்திருந்த இளைஞர் மீண்டும் கனடாவுக்குச் செல்வதற்காக விமான நிலையத்துக்குச் சென்றபோது குடிவரவு குடியகல்வு அதிகாரிகள் அவரது பயணத்துக்குத் தடை விதித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். யாழ்.நீதிமன்றால் விடுக்கப்பட்ட பயணத்தடை இருந்ததால் அவரை வெளியேற அதிகாரிகள் அனுமதிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனால் அவர் அந்த விடயம் தொடர்பில் சட்டத்தரணி ஊடாக மீண்டும் யாழ்.நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்தார். அதன்போது தனது பயணத்தடையை நீக்குமாறும் சட்டத்தரணியின் ஊடாக நீதிமன்றில் விண்ணப்பித்திருந்தார். அதனையடுத்து குறித்த பெண்ணை நீதிமன்றுக்கு வருமாறு நீதிமன்றம் அழைப்புக் கட்டளை அனுப்பியது. அவர் யாழ். நீதிமன்றத்துக்கு வந்த பின்னரே இழப்பீட்டுப் பணம் அவருக்கு வழங்கப்படவில்லையென்ற விடயம் வெளிச்சத்துக்கு வந்தது.

அதையடுத்து இழப்பீடாக வழங்கப்பட்டிருந்த 2 லட்சம் பணமும் சட்டத்தரணியால் குறித்த பெண்ணிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை என்பதும் தெரியவந்தது. எனினும் மனைவியின் சட்டத்தரணி நீதிமன்றுக்கு வந்திருக்கவில்லை. அதனையடுத்து குறித்த பெண்ணை அவருடைய சட்டத்தரணியிடம் தொடர்பு கொண்டு, இழப்பீட்டைப் பெறுமாறு ஆலோசனை வழங்கிய நீதிமன்றம் இளைஞரின் பயணத்தடையை நீக்கி வழக்கைத் தள்ளுபடி செய்தது. (ற-4,103)

# வடக்கு மாவட்டங்கள் அனைத்திலும் விரைவில் பிரதான பஸ் நிலையங்கள்

## எதிர்வரும் வரவு–செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்படும் என போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.6

இந்த ஆண்டு இறுதியில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ள நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் வடக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும் பிரதான பஸ் நிலையங்கள் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது என்று போக்குவரத்து அமைச் சர் நிமல் சிறிபால டி சில்வா தெரி வித்துள்ளார்.

கடந்தசனிக்கிழமைவடக்குக்குவந்திருந்த அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, யாழ். ரயில் நிலையம், இலங்கை போக்குவரத்துத் திணைக்களத்தின் யாழ். அலுவலகம் என்பவற்றுக்குச் சென்றிருந்தார். அங்கு போக்குவரத்துத்துறை தொடர்பான பல விடயங்களை ஆராய்ந்து அதற்கான தீர்வுகள் உரியகால எல்லைக்குள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்திருந்தார்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி மாவட்டத்துக்குச் சென்றிருந்த அமைச்சர் வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரனைச் சந்தித்தார். இதன்போது வவுனியா மாவட்டத்தில் அமையப்பெற்றது போன்று அனைத்து மாவட்டங்களுக்கும் பிரதான பஸ் நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும், வடமாகாணத்தில் நிலவிவரும் தனியார் மற்றும் இலங்கை போக்குவரத்து சபையினருக்கிடையிலான பிரச்சினை கள் தீர்க்கப்படல் மற்றும் நேர அட்டவணை ஒழுங்கு படுத்தல் ஆகியன தொடர்பான கோரிக்கை களை வடக்கு அமைச்சர் முன் வைத்தார். இதற்கு பதிலளித்த போக்குவரத்து அமைச்சர்:–

வவுனியா மாவட்டத்தில் அமையப்பெற்றது போன்று ஏனைய [illegible] மாவட்டங்களிலும் மக்களது போக்குவரத்து சிரமங்களை வெகுவாக குறைக்கும் வண்ணம், சிறந்த பேருந்து நிலையங்கள் அமைக்கப்படும். வருட இறுதியில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ள நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் வடமாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும் பிரதான பஸ் நிலையங்கள் அமைப்பதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது. குறித்த பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்கான நிதி ஒதுக்கித் தரப்படும்– என்றார்.

நான்கு மாவட்ட செயலாளர்களையும் நகரத்திட்டமிடல் திட்டத்துக்கு அமைவாக பஸ் நிலையத்துக்கான காணிகளை விரைவாக ஒதுக்கீடு செய்து, ஆரம்பப் பணிகளை தொடங்குமாறும் புதிய நேர சூசிகள் அமையும் வரை தற்போதுள்ள அடிப்படையில் சகல பஸ் சேவை [illegible] போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன் தெரிவித்தார். (ற-ரி5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6 நாள்களாக தொடர்கிறது உணவு தவிர்ப்புப் போராட்டம்

## கோரிக்கை நிறைவேற்றப்பட வேண்டும் என்கின்றனர் அம்பாறை மாவட்ட வேலையில்லாப் பட்டதாரிகள்

அம்பாறை, ஒக்.6

அம்பாறை மாவட்டத்தை சேர்ந்த வேலையற்ற தமிழ் பட்டதாரிகளால் வேலை வாய்ப்பு உள்ளிட்ட 3 அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து கிழக்கு மாகாண சபைக்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டு வரும் உணவு தவிர்ப்புப் போராட்டம் நேற்று 6ஆவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது.

சுழற்சி முறையிலான இந்த உணவு தவிர்ப்புப்போராட்டம் காரணமாக இதுவரை 10 பேர் வரை உடல் சோர்வு மற்றும் மயக்கம் காரணமாக திருகோணமலை அரச வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வெளியேறியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமது சுய விருப்பத்தின் பேரிலே வைத்தியசாலையிலிருந்து வெளியேறிய இவர்கள் மீண்டும் போராட்டத்தில் இணைந்துள்ளனர் என்று அம்பாறை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் தலைவரான எம். திலீபன் தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்று வரும் இந்த போராட்டத்தில் அந்த மாவட்டத்தைச் சேர்ந்த பெரும் எண்ணிக்கையிலான வேலையற்ற பட்டதாரிகள் கலந்து கொண்டுள்ளார்கள்.

மாகாண சேவையில் சகல பட்டதாரிகளுக்கும் தொழில் வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.

2013ம் ஆண்டில் அபிவிருத்தி அலுவலர் போட்டிப் பரீட்சையில் தெரிவாகும் தகுதியை பெற்றிருந்த பட்டதாரிகளுக்கும் நியமனம் வேண்டும்.

அம்பாறை மாவட்ட தமிழ் பட்டதாரிகள் வேலை வாய்ப்புக்களில் புறக்கணிக்கப்படுவது நிறுத்தப்பட வேண்டும் ஆகிய கோரிக்கை களை முன் வைத்தே இந்த உண்ணாவிரத போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

தற்போது உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள பட்டதாரிகளை கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் 3ஆவது நாள் சந்தித்து பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டிருந்தார்.

அவர் சில உறுதிமொழிகளையும் உத்தரவாதங்களையும் வழங்கி உண்ணாவிரதத்தை கைவிடுமாறு கோரியிருந்த போதிலும் அதனை பட்டதாரிகள் நிராகரித்து தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். (ற)

## தேசிய உணவு உற்பத்தி வார நிகழ்வுகள்

அம்பாறை, ஒக்.6

தேசிய உணவு உற்பத்தி வார நிகழ்வுகள் நேற்றுத் திங்கட்கிழமை கிண்ணியா பனிச்சம் குளம் கிராமத்தில் நடைபெற்றன.

கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.ஏ.அனஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.எம்.மஹ்ரூப், திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் என்.ஏ.புஸ்ப குமார, கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சர் ஆரியவதி கலப்பதி, மாகாண சபை உறுப்பினர் டொக்டர் அருண சிறிசேன , மாகாண விவசாயப் பணிப்பாளர் எஸ்.எம். ஹுசைன், திருகோணமலை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி பரமேஸ்வரன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

மரக் கன்றுகள், விதைகள் என்பன விவசாயிகளுக்கு வழங்கப் பட்டன. அத்துடன் நெற் செய்கை தவிர்ந்த ஏனைய உணவு உற்பத்தி தொடர்பாகவும் விளக்கமளிக்கப் பட்டன. (ற)



*சாவகச்சேரி சங்கத்தானை இத்தியடிப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் உள்ள வீடொன்றில் வேப்பமரத்தில் இருந்து பால் வடிகின்றது. அதைப் பெருமளவு மக்கள் பார்வையிடுவதோடு, பாலைப் போத்தல்களில் எடுத்தும் செல்கின்றனர். கடந்த வருடம் இந்தப் பகுதியில் உள்ள வேறொருவரின் வீட்டிலும் இவ்வாறு வேப்ப மரத்திலிருந்து 15 தினங்களுக்கு மேலாக பால்வடிந்தது. மருத்துவ நிவாரணியான வேப்பம் பாலை மக்கள் ஆர்வத்துடன் எடுத்துச் செல்கின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-9)*

# ஆசிரியர்களது குறைகளை தீர்ப்பதற்கு முயற்சி செய்க

## ஆசிரியர் தினத்தையொட்டிய வாழ்த்தில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 6

சிறந்த சமூகத்தை ஆக்குகின்ற பணி ஆசிரியருக்கு மட்டுமே உரித்தானது. அதற்கு எவரும் உரிமை கோரிவிட முடியாது. அத்தகைய ஆசிரியர்களுக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம் என்று தெரிவித்துள்ள இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் எமது நாட்டில் வாழும் ஆசிரியர்கள் மனமகிழ்வு இல்லாதவர்களாகவே வாழ்கின்றார்கள். மாறுகின்ற கல்விக் கொள்கைகளும், மாறாமல் இருக்கின்ற சட்டங்களும் அவர்களுக்கு சுமையாகவே இருக்கின்றன. இந்த நிலை நீக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.

சர்வதேச ஆசிரியர் தினம் தொடர்பில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தந்தை, தாய் உறவினர்கள் எல்லோருக்கும் அப்பால்சென்று மூளைவளத்தைப் பெருக்கி முழு மனிதனாக ஆக்குபவர் ஆசிரியர் மட்டுமே. இதனை கற்றறிவுள்ள அனைவரும் ஏற்றுக்கொள்வர்.

அத்தகைய ஆசிரியர்களை நினைத்து, மதித்து வருடத்தில் ஒருமுறை வணங்கும் நாளே உலக ஆசிரிய தினமாகும். அத்தகைய நாளில் எமது தமிழ் பேசும் அனைத்து ஆசிரியர்களுக்கும் எமது உளம் நிறைந்த வாழ்த்துக்கள் என்றும் உரித்தாகட்டும்.

அரசால் அறிவிக்கப்பட்ட சம்பள அதிகரிப்போஅன்றி பதவிஉயர்வோ இன்னும் வழங்கப்படவில்லை. ஒரு ஆசிரியர் பெறுகின்ற சம்பளம் அவருடைய வாழ்கைக்கே போதுமானதாக இல்லை. இந்த நிலையில் புதிதாக அறிவிக்கப்பட்ட பதவியுயர்வு, சம்பள அதிகரிப்பு ஆகியவற்றை இந்த வருட இறுதிக்குள் வழங்கி ஆசிரியர்களின் பணி சிறக்க உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஆசிரியர்களின் பதவியுயர்வு தொடர்பாக அவர்களின் நலன்கள் தொடர்பாக அக்கறை கொள்ளவில்லையெனில் எமது சமூகம் அழிவுப்பாதையை நோக்கிச் செல்வதை எவரும் தடுத்துவிட முடியாது. எந்தவொரு தமிழ்பேசும் ஆசிரியரும் வேதனத்துக்காக வேலை செய்பவரல்ல. ஆனாலும் அவர்களின் வாழ்வு சிறக்கவில்லை என்றால் அவர்களின் கடமைகளில் தொய்வு நிலை ஏற்படும். ஆகையால் ஆசிரியர்கள் சார்ந்த விடயங்களில் உலக நாடுகளில் உள்ள அணுகுமுறைகளைப் பின்பற்றி நடந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**ஆசிரியர்கள் சார்ந்த விடயங்களில் உலக நாடுகளில் உள்ள அணுகுமுறைகளைப் பின்பற்றி நடந்துகொள்ள வேண்டும்.**

எதிர்வரும் 10 ஆம் திகதி ஆசிரியர்களுக்கான அதிபர் போட்டிப் பரீட்சை நடைபெறவுள்ளது. அனேக ஆசிரியர்கள் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணியில் உள்ளனர். பலர் பிற மாவட்டங்களில் கடமையில் உள்ளனர். இவர்களின் பணி வரும் 9 ஆம் திகதியே நிறைவடைகின்றது. மறுநாள் அவர்களுக்கான பரீட்சை நடக்கவுள்ளது. இந்த நிலையில் எவ்வாறு அவர்கள் பரீட்சை எழுதுவது? இதுதொடர்பில் நாம் மத்திய கல்வி அமைச்சுடன் தொடர்புகொண்டபோதும் அவர்கள் சாதகமான பதில் எதனையும் தரவில்லை. மாறாக குறித்த ஆசிரியர்களை பரீட்சைக் கடமையில் இருந்து இரண்டு நாள்கள் முன்னதாக அறிவித்துவிட்டு விலகிச்செல்லுமாறு அறிவுறுத்துகின்றனர். இதுகூட கல்விக் கொள்கைகளுக்கு மாறான விடயம். இவை எல்லாம் ஆரோக்கியமான கல்விக்கு வித்திடுமா என்ற கேள்வியையும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கேட்டு நிற்கின்றது.- என்றுள்ளது. (ற-4)

# சிறுவன், சிறுமி துஷ்பிரயோகம்: சந்தேகநபர்களுக்கு பிணை மறுப்பு

யாழ்ப்பாணம், ஒக்.6

சிறுமிக்குப் பாலியல் தொல்லை கொடுத்தமை மற்றும் சிறுவனைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியமை ஆகிய குற்றச் சாட்டுகளில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் மூன்று சந்தேக நபர்களை பிணையில் விடுவிக்குமாறு கோரப்பட்டபோதும் அதனை நிராகரித்த யாழ். நீதிமன்று அவர்களின் விளக்கமறியலை நீடித்து உத்தரவிட்டது.

யாழ்.பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வசிக்கும் சிறுமியொருவருக்குக் குடும்பஸ்தர் ஒருவர் பாலியல் தொல்லை கொடுத்துள்ளார் என்று குற்றம் சாட்டப்பட் டுள்ளது. அவ்வாறே யாழ். பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மற்றொரு பகுதியில் வசிக்கும் சிறுவனைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினர் என்று இரண்டு இளைஞர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் குறித்த மூவரும் யாழ்ப்பாணப் பொலிஸார் கைது செய்து யாழ்.நீதிமன்றில் முற்படுத்தப்பட்டிருந்தனர். அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டிருந்தது.

அவர்கள் அவ்வாறு விளக்கமறியலில் இருக்கும் நிலையில், அந்தச் சந்தேக நபர்கள் சார்பில் நீதிமன்றில் முன்னிலையான சட்டத்தரணிகள் குறித்த சந்தேக நபர்களைப் பிணையில் விடுவிக்குமாறு கோரி நீதிமன்றில் பிணை விண்ணப்பம் செய்தனர். எனினும் சந்தேக நபர்களைப் பிணையில் விடுவிப்பதற்குப் பொலிஸார் ஆட்சேபனை தெரிவித்தனர்.

தற்போது நாட்டில் பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான வன்புணர்வுகள், பாலியல் தொல்லைகள், பாலியல் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. இந் நிலையில் இந்த வழக்குடன் தொடர்புடைய சந்தேக நபர்களைப் பிணையில் விடுவித்தால், அவர்களும் இவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபடுவதற்கு வாய்ப்புக்கள் உள்ளதால் அது பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையைப் பாதிக்கும் என்று பொலிஸார் ஆட்சேபனைக்கான காரணத்தையும் தெரிவித்தனர்.

இருதரப்பு வாதங்களையும் கவனத்தில் கொண்ட நீதிவான் பெ.சிவகுமார், பிணை தொடர்பான கட்டளையில் பொலிஸாரின் ஆட்சேபனையைச் சுட்டிக்காட்டிச் சந் தேக நபர்களின் பிணை விண்ணப்பத்தை நிராகரித்துச் சந்தேக நபர் களை எதிர்வரும் 13 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ற-4,103)

# கூட்டுறவு இணக்க சபையால் பணியாளர்களுக்குப் பயன்

## கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.6

கூட்டுறவுப் பணியாளர்களின் வசதி கருதி அமைக்கப்பட்ட இணக்க சபைக்குக் கூட்டுறவுப் பணியாளர்கள் தமக்குரிய பிரச்சினைகள் குறித்து விரிவான முறைப்பாடுகளை சமர்ப்பித்து வருகின்றனர் என கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.கணேஷ் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடமாகாணக் கூட்டுறவு அமைச்சின் நூறுநாள் வேலைத்திட்டத்தில் இந்த இணக்கசபை அமைக்கப் பட்டது. இந்த இணக்கசபை வீரசிங்கம் மண்டபத்தில் செயற்பட்டு வருகின்றது.

கூட்டுறவுப் பணியாளர்கள் சிலர் தமது சங்கங்களில் தமக்கு ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு உரிய தீர்வைப் பெற்றுத் தருமாறு கோரி விண்ணப்பித்துள்ளனர். இந்த விண்ணப்பங்களை இணக்க சபை உள்வாங்கி ஆராயும் பணியில் ஈடுபட்டு வருகின்றது.

தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் விண்ணப்பங்களில் பணியாளர்கள் அழைக்கப்பட்டு விசாரணை முன்னெடுக்கவும் நடவடிக்கை மேற கொள்ளப்பட்டுள்ளது. - என் றார்.

அதேவேளை இந்த இணக்கசபை மூலம் இதுவரைக்கும் எதுவித பயனையும் கூட்டுறவாளர் பெறவில்லை என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. இரு சாராரையும் இணங்க வைத்தாலும் கூட்டுறவுச் சட்டம் அதற்கு மறுபுறத்தில் தடையாக உள்ளது என்றும் கூட்டுறவாளர் ஒருவர் தெரிவித்தார். (ற-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2015 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையின் இசற் புள்ளி விவரம்

| பாட விவரம் | யாழ்ப்பாணம் | முல்லைத்தீவு | மன்னார் | திருகோணமலை | கிளிநொச்சி | வவுனியா | மட்டக்களப்பு | கொழும்பு |
|---|---|---|---|---|---|---|---|---|
| AGRIC BUSINESS MANAGEMENT | 1.0593 | 0.7812 | 0.6471 | 1.1807 | 0.5375 | 0.6473 | 1.1558 | 1.1996 |
| AGRICULTURAL RESOURCE MANAGEMENT & TECHNOLOGY | 0.9552 | 0.8721 | 0.8763 | 0.7933 | 0.5434 | 0.7255 | 1.0471 | 1.1600 |
| AGRICULTURAL TECHNOLOGY & MANAGEMENT | 1.6055 | 1.2669 | 1.2468 | 1.4521 | 1.2277 | 1.2618 | 1.4835 | 1.5550 |
| AGRICULTURE | 0.9653 | 0.6393 | 0.7771 | 0.8363 | 0.9926 | 0.7536 | 0.8042 | 1.0064 |
| ANIMAL SCIENCE # | 0.7117 | 0.0734 | 0.4048 | 0.4953 | -0.0965 | 0.5754 | 0.4424 | 0.7178 |
| ANIMAL SCIENCE & FISHERIES (University of Peradeniya) | 1.4008 | 0.4196 | 0.8993 | 1.0465 | 0.3840 | 0.9189 | 1.1724 | 1.3173 |
| APPLIED SCIENCES (PHY.SC) | 0.9303 | 0.2082 | 0.1454 | 0.3705 | 0.4366 | 0.9595 | 0.8163 | 1.0169 |
| APPLIED SCIENCES (BIO.SC) | 0.8006 | 0.3369 | 0.6913 | 0.8164 | 0.6072 | 0.9120 | 0.6610 | 1.2133 |
| AQUATIC RESOURCES TECHNOLOGY # | 0.7848 | NQC | 0.2727 | 0.4412 | 0.0560 | 0.7204 | 0.3521 | 0.7150 |
| ARABIC LANGUAGE * | 0.4001 | 0.4001 | 0.4001 | 0.4001 | 0.4001 | 0.4001 | 0.4001 | 0.4001 |
| ARCHITECTURE # | 1.1114 | NQC | 0.9044 | 0.6739 | NQC | 1.2715 | 1.2017 | 1.1540 |
| ART & DESIGN # (Ramanathan Academy of Fine Arts) | 0.8412 | 0.0039 | NQC | 0.7414 | 0.3865 | 1.1674 | 0.5987 | NQC |
| ARTS (SP) / MASS MEDIA* # | 1.2249 | 1.2249 | 1.2249 | 1.2249 | 1.2249 | 1.2249 | 1.2249 | 1.2249 |
| ARTS (SAB) - A * | 1.3466 | 1.3466 | 1.3466 | 1.3466 | 1.3466 | 1.3466 | 1.3466 | 1.3466 |
| ARTS (SAB) - B * | 1.4586 | 1.4586 | 1.4586 | 1.4586 | 1.4586 | 1.4586 | 1.4586 | 1.4586 |
| ARTS (SP) / PERFORMING ARTS * # | 1.0613 | 1.0613 | 1.0613 | 1.0613 | 1.0613 | 1.0613 | 1.0613 | 1.0613 |
| ARTS * | 1.3442 | 1.2284 | 1.1289 | 1.3468 | 1.2122 | 1.3468 | 1.3427 | 1.3468 |
| AYURVEDIC MEDICINE & SURGERY | 0.8189 | 0.4302 | 1.1367 | 1.1406 | 0.5380 | 0.8871 | 1.2550 | 1.2247 |
| BIOLOGICAL SCIENCE | 0.8523 | 0.3710 | 0.6550 | 0.7094 | 0.6213 | 0.4532 | 0.6879 | 1.3736 |
| BUSINESS INFORMATION SYSTEMS (SPECIAL) | 1.7097 | 1.4850 | 1.3874 | 1.4675 | 1.5109 | 1.7172 | 1.6971 | 1.7076 |
| COMMERCE | 1.2790 | 1.1807 | 1.1786 | 1.1765 | 1.2708 | 1.2821 | 1.2740 | 1.5522 |
| COMMUNICATION STUDIES * | 1.3267 | 1.3267 | 1.3267 | 1.3267 | 1.3267 | 1.3267 | 1.3267 | 1.3267 |
| COMPUTATION & MANAGEMENT | 1.5583 | 1.2055 | 1.5164 | 1.5982 | 1.2641 | 1.6511 | 1.6780 | 1.6574 |
| COMPUTER SCIENCE | 1.5557 | 0.3824 | 0.3991 | 0.8226 | 0.9744 | 1.1540 | 1.2304 | 1.6399 |
| COMPUTER SCIENCE & TECHNOLOGY # | 1.2639 | 0.4360 | 0.7376 | 0.6430 | 0.7572 | 1.0003 | 0.8745 | 1.1438 |
| COMPUTING & INFORMATION SYSTEMS | 1.3709 | NQC | NQC | 0.7565 | 0.7200 | 1.1193 | 1.1514 | 1.1172 |
| DANCE # (Ramanathan Academy of Fine Arts) | 0.8393 | 0.4163 | 0.7383 | 0.6662 | -0.3929 | 0.7181 | 0.0042 | 0.2471 |
| DANCE # (Swami Vipulananda Institute) | 0.7407 | 0.7091 | 0.3340 | -0.2275 | 0.5685 | 0.6192 | 0.7029 | 0.4356 |
| DANCE # (University of the Visual & Performing Arts) | NQC | NQC | NQC | 0.5345 | NQC | 1.2776 | NQC | 1.1833 |
| DENTAL SURGERY | 1.8939 | 1.3937 | 1.4434 | 1.7288 | 1.6941 | 1.8381 | 1.7167 | 1.8926 |
| DESIGN # | 1.2841 | NQC | NQC | NQC | NQC | 0.9819 | NQC | 0.1424 |
| DRAMA & THEATRE # (Swami Vipulananda Institute) | 1.1022 | 0.9219 | 1.0675 | 1.1269 | 1.0324 | 1.0080 | 1.0916 | NQC |
| DRAMA & THEATRE # (University of the Visual & Performing Arts) | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | 0.8624 |
| ENGINEERING | 1.8778 | 1.0005 | 1.1181 | 1.2851 | 1.6012 | 1.5881 | 1.4513 | 1.9232 |
| ENGINEERING (EM) | 1.8525 | 0.7336 | 0.9253 | 1.2479 | 1.3445 | 1.5452 | 1.3789 | 1.8724 |
| ENGINEERING (TM) | 1.8337 | 0.5471 | 0.7509 | 1.1990 | 1.1009 | 1.4713 | 1.2889 | 1.8776 |
| ENTREPRENEURSHIP & MANAGEMENT # | 1.2507 | NQC | 1.0859 | 1.1359 | 1.0716 | 1.2725 | 1.1469 | 1.3938 |
| ENVIRONMENTAL CONSERVATION & MANAGEMENT | 1.4362 | 0.4413 | 1.0724 | 1.2675 | 0.5846 | 0.7899 | 1.3042 | 1.3724 |
| ESTATE MANAGEMENT & VALUATION | 1.4931 | 1.6228 | 1.5410 | 1.6199 | 1.6370 | 1.6315 | 1.6924 | 1.6466 |
| EXPORT AGRICULTURE # | 0.8182 | -0.2044 | 0.4383 | 0.5747 | -0.1420 | 0.2776 | 0.6403 | 0.9094 |
| FACILITIES MANAGEMENT | 1.4948 | 1.0614 | 1.3172 | 1.5052 | 1.2518 | 1.6856 | 1.6665 | 1.6903 |
| FASHION DESIGN & PRODUCT DEVELOPMENT # | 1.1096 | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | 1.3715 |
| FILM & TELEVISION STUDIES # | NQC | NQC | NQC | 1.0509 | NQC | NQC | NQC | 1.2813 |
| FISHERIES & MARINE SCIENCES (University of Ruhuna) | 1.1385 | 0.4518 | 0.8471 | 0.9698 | 0.5233 | 0.5820 | 0.9184 | 1.2748 |
| FOOD PRODUCTION & TECHNOLOGY MANAGEMENT | 1.4571 | 0.9287 | 0.9736 | 1.4560 | 0.7065 | 1.0436 | 1.4488 | 1.4341 |
| FOOD SCIENCE & NUTRITION | 1.5664 | 1.0221 | 1.3089 | 1.5623 | 1.1744 | 1.5338 | 1.5080 | 1.5122 |
| FOOD SCIENCE & TECHNOLOGY | 1.7059 | 1.0874 | 1.1778 | 1.5475 | 1.2771 | 1.1352 | 1.5101 | 1.7390 |
| GREEN TECHNOLOGY | 1.3249 | 0.6788 | 1.0381 | 1.2596 | 0.3640 | 0.7439 | 1.1828 | 1.3154 |
| HEALTH PROMOTION | 1.2396 | 0.6043 | 0.8970 | 1.2450 | 0.9237 | 1.0729 | 1.1207 | 1.1751 |
| HOSPITALITY, TOURISM AND EVENTS MANAGEMENT # (UvaWellassa University) | 1.2662 | 0.9008 | 1.1548 | 1.1757 | 1.1197 | 1.2351 | 1.1318 | 1.3300 |
| INDUSTRIAL INFORMATION TECHNOLOGY # | 1.2274 | 1.0644 | 1.1348 | 1.0074 | -0.1659 | 1.0912 | 1.0659 | 1.2819 |
| INDUSTRIAL STATISTICS & MATHEMATICAL FINANCE | 1.5515 | 0.4274 | 0.5141 | 1.0941 | 1.2765 | 1.2680 | 1.2044 | 1.5694 |
| INFORMATION & COMMUNICATION TECHNOLOGY # | 0.7918 | NQC | 0.0685 | 0.4271 | NQC | 0.7717 | 0.6225 | 0.5216 |
| INFORMATION SYSTEMS # (University of Colombo School of Computing) | 1.3968 | NQC | 1.0792 | 1.0246 | NQC | 0.6408 | 0.9245 | 1.4115 |
| INFORMATION TECHNOLOGY (University of Moratuwa) | 1.7106 | 0.8957 | 1.1631 | 1.3834 | 1.3603 | 1.5801 | 1.4032 | 1.7352 |
| INFORMATION TECHNOLOGY & MANAGEMENT | 1.7551 | 0.9968 | 1.4844 | 1.5278 | 1.2220 | 1.8089 | 1.6476 | 1.7678 |
| ISLAMIC STUDIES * | 1.1489 | 1.1489 | 1.1489 | 1.1489 | 1.1489 | 1.1489 | 1.1489 | 1.1489 |
| LANDSCAPE ARCHITECTURE # | 0.3784 | NQC | NQC | NQC | NQC | NQC | -0.0797 | 0.0134 |
| LAW | 1.7935 | 1.4589 | 1.9446 | 1.9730 | 1.6284 | 1.6254 | 1.7573 | 1.9029 |
| MANAGEMENT | 1.3459 | 1.1924 | 1.2036 | 1.1953 | 1.2874 | 1.2965 | 1.3221 | 1.5601 |
| MANAGEMENT & INFORMATION TECHNOLOGY # (University of Kelaniya) NQC | 1.5956 | NQC | 0.8031 | 0.1374 | NQC | 1.3182 | NQC | 1.6014 |
| MANAGEMENT & INFORMATION TECHNOLOGY (SEUSL) | 1.5279 | 1.3167 | 1.4343 | 1.5180 | 1.2047 | 1.3600 | 1.5316 | 1.4931 |
| MANAGEMENT STUDIES (TV) - A | 1.3159 | 1.1702 | 1.1757 | 1.1733 | 1.2656 | 1.3975 | 1.2683 | 1.4633 |
| MANAGEMENT STUDIES (TV) - B | 1.3389 | 1.1938 | 1.1574 | 1.4538 | 1.2133 | 1.5325 | 1.5910 | 1.4313 |
| MEDICAL LABORATORY SCIENCES | 1.6926 | 1.2916 | 1.3028 | 1.6124 | 1.3571 | 1.5806 | 1.6807 | 1.7008 |
| MEDICINE | 1.9096 | 1.4961 | 1.5124 | 1.7313 | 1.7227 | 1.8603 | 1.7242 | 1.9370 |
| MINERAL RESOURCES & TECHNOLOGY # | 0.8506 | NQC | 0.2284 | 0.6426 | NQC | 0.7596 | 0.5052 | 0.8305 |
| MOLECULAR BIOLOGY & BIOCHEMISTRY | 1.8482 | 1.1223 | 1.4153 | 1.6262 | 1.5299 | 1.6677 | 1.6938 | 1.8547 |
| MUSIC # (Swami Vipulananda Institute) | 0.8074 | 0.8794 | 0.6685 | 0.6703 | 0.8895 | 0.9408 | 0.7842 | -0.3138 |
| MUSIC # (University of the Visual & Performing Arts) | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | -0.4096 |
| MUSIC # (Ramanathan Academy of Fine Arts) | 0.4067 | 0.4719 | 0.2038 | -0.1637 | 1.0170 | -0.1152 | -0.6725 | 0.7917 |
| NURSING | 1.1283 | 0.9162 | 1.0052 | 1.0507 | 0.9563 | 1.0080 | 1.0503 | 1.0900 |
| PALM & LATEX TECHNOLOGY AND VALUE ADDITION # | 0.6675 | NQC | -0.1208 | 0.2310 | NQC | 0.2388 | 0.3195 | 0.7492 |
| PEACE & CONFLICT RESOLUTION * | 1.7037 | 1.7037 | 1.7037 | 1.7037 | 1.7037 | 1.7037 | 1.7037 | 1.7037 |
| PHARMACY | 1.6350 | 1.0877 | 1.1038 | 1.6238 | 1.4569 | 1.6202 | 1.5862 | 1.6011 |
| PHYSICAL EDUCATION # | 0.8571 | NQC | NQC | -0.7130 | NQC | 0.5899 | NQC | -0.3045 |
| PHYSICAL SCIENCE | 0.9732 | 0.0110 | 0.1039 | 0.2900 | 0.4413 | 0.6804 | 0.3894 | 1.1328 |
| PHYSIOTHERAPY | 1.8037 | 1.3935 | 1.4414 | 1.5829 | 1.5901 | 1.6954 | 1.6717 | 1.8148 |
| PROJECT MANAGEMENT | 1.3566 | 1.1642 | 1.4066 | 1.4700 | 1.2123 | 1.4400 | 1.4210 | 1.4286 |
| PUBLIC MANAGEMENT (SPECIAL) | 1.6746 | 1.6877 | 1.7635 | 1.7465 | 1.7688 | 1.7771 | 1.6736 | 1.7256 |
| QUANTITY SURVEYING | 1.8023 | 0.4784 | 1.0985 | 1.1725 | 1.5892 | 1.4997 | 1.4158 | 1.7809 |
| RADIOGRAPHY | 1.6148 | 1.0241 | 1.2697 | 1.5704 | 1.2769 | 1.0921 | 1.5859 | 1.5629 |
| SCIENCE & TECHNOLOGY # | 1.0827 | NQC | 0.4199 | 0.8110 | 0.2093 | 0.2573 | 0.7306 | 0.9186 |
| SIDDHA MEDICINE | 0.8482 | 0.7989 | 0.7353 | 0.8390 | 0.5453 | 0.7387 | 0.8017 | 0.4520 |
| SOFTWARE ENGINEERING | 1.7639 | 0.9512 | 0.7472 | 1.1248 | 1.2193 | 1.5035 | 1.3712 | 1.7441 |
| SPEECH & HEARING SCIENCES | 1.3585 | 1.0888 | 1.3487 | 1.7631 | 1.2110 | 1.3311 | 1.3728 | 1.7236 |
| SPORTS SCIENCE & MANAGEMENT # | 0.2458 | NQC | NQC | 0.6068 | NQC | -0.2693 | -0.3734 | -0.0934 |
| STATISTICS & OPERATIONS RESEARCH | 1.5434 | 0.3735 | 0.3369 | 0.8142 | 0.9514 | 1.1922 | 1.2448 | 1.5391 |
| SURVEYING SCIENCE | 1.5624 | 0.5358 | 0.4262 | 1.1353 | 0.9639 | 1.4649 | 1.3368 | 1.5214 |
| TEA TECHNOLOGY & VALUE ADDITION # | 0.8866 | NQC | NQC | 0.2585 | -0.4272 | 0.3376 | 0.6464 | 0.8273 |
| TOURISM & HOSPITALITY MANAGEMENT | 1.3413 | 1.1496 | 1.1709 | 1.2932 | 1.2113 | 1.4713 | 1.4426 | 1.5417 |
| TOWN & COUNTRY PLANNING | 1.7212 | 1.1082 | 1.1969 | 1.8099 | 1.2024 | 1.3301 | 1.4916 | 1.7692 |
| TRANSLATION STUDIES # (Kelaniya&Sabaragamuwa) | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | NQC | 1.3381 |
| TRANSLATION STUDIES # (University of Jaffna) | 1.3257 | 0.9516 | 1.3793 | 1.3875 | 1.1521 | 1.2764 | 1.2203 | 1.2999 |
| TRANSPORT & LOGISTICS MANAGEMENT | 1.7252 | 0.5203 | 0.5607 | 1.1695 | 1.0000 | 1.4026 | 1.3251 | 1.7970 |
| UNANI MEDICINE & SURGERY | 1.3370 | 0.1943 | 1.1611 | 1.3386 | 0.4068 | 0.7482 | 1.2287 | 1.1505 |
| VETERINARY SCIENCE | 1.7831 | 1.1029 | 1.4268 | 1.6315 | 1.6498 | 1.7411 | 1.6632 | 1.7944 |
| VISUAL & TECHNOLOGICAL ARTS # (Swami Vipulananda Institute) | 0.2347 | -0.3488 | NQC | 0.7175 | NQC | 1.0134 | 0.6092 | NQC |
| VISUAL ARTS # (University of the Visual & Performing Arts) | NQC | NQC | NQC | 0.3297 | NQC | NQC | NQC | 0.8568 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** அன்றாட வேலைகளில் உற்சாகத்துடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் தடை நீங்கி இலாபம் அதிகரிக்கும். பணியாளர்களுக்குச் சலுகை, எளிய முயற்சியால் வந்து சேரும். பெண்கள், பிள்ளைகளின் நலனில் அக்கறை கொள்வர்.

**இடபம்:** விழிப்புடன் செயற்பட்டால் பிரச்சினை உண்டாகாது. தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் வெளியூர் செல்வர். உடல் நலத்துக்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம்.

**மிதுனம்:** திட்டமிட்டபடி பணிகள் எளிதாக நிறைவேறும். மனம், உடலில் புத்துணர்வு அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் பன்மடங்கு உயரும். உறவினர் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்.

**கடகம்:** அறிமுகம் இல்லாதவர்களிடம் நெருக்கம் வேண்டாம். தொழில், வியாபாரத்தில் வருமானம் படிப் படியாக உயரும். வெளியூர்ப் பயணம் பயன் அறிந்து மேற்கொள்வது நல்லது. மாணவர்கள் திட்டமிட்டுப் படித்து முன்னேறுவர்.

**சிங்கம்:** உயர்வு, தாழ்வு கருதாமல் அனைவரிடமும் பழகுவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமையில் இருந்து விடுபடுவர். பெண்கள் உறவினர்களுடன் நெருக்கமாகப் பழகுவர்.

**கன்னி:** எதிரி தானாக விலகிச் செல்லும் சூழல் உருவாகும். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். பணக்கடனில் ஒருபகுதியைச் செலுத்துவீர்கள். அரசியல் வாதிகளுக்கு எதிர்பார்த்த பதவி கிடைக்கும்.

**துலாம்:** நண்பரின் ஆலோசனை வளர்ச்சிக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில் முதலீட்டை அதிகப்படுத்துவீர்கள். உறவினர் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும். பிள்ளைகள் கல்வியில் சிறந்து விளங்குவர்.

**விருச்சிகம்:** எதிர்கால வளர்ச்சி குறித்துச் சிந்திப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் உயரும். ஆரோக்கிய விடயத்தில் அக்கறை கொள்வீர்கள். மாணவர்கள் திறம்படப் படித்து முன்னேறுவர்.

**தனுசு:** மனதில் உற்சாகமும், செயலில் நேர்த்தியும் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் வியத்தகு முன்னேற்றம் ஏற்படும். விரைவில் சுப நிகழ்ச்சி நடத்தத் திட்ட மிடுவீர்கள். அரசியல்வாதிகளுக்குப் பதவி கிடைக்க வாய்ப்புண்டு.

**மகரம்:** அந்தஸ்து மிக்கவர்களின் அறிமுகம் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் மிதமான ஆதாயம் கிடைக்கும். குடும்பத்துடன் விருந்து விழாவில் பங்கேற்பீர்கள். பெண்கள் மனம் போல ஆடை, ஆபரணங்கள் வாங்குவர்.

**கும்பம்:** குடும்ப விடயத்தைப் பிறரிடம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் நிர்வாகச் செலவு அதிகரிக்கும். உடல்நலனில் அக்கறை காட்டத் தொடங்குவீர்கள். மனைவி வகையில் திடீர் செலவு ஏற்படலாம்.

**மீனம்:** நண்பரின் அலட்சியத்தைப் பொருட்படுத்த வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். பெண்கள், பிள்ளைகளின் நலனுக்காகப் பாடுபடுவர். மாணவர்கள் திட்டமிட்டுப் படித்து முன்னேறுவர்.




## ரஜினியுடன் கைகோர்க்கும் அர்னால்ட்



ரஜினி நடிக்கவிருக்கும் எந்திரன் – 2 படத்தில் முக்கிய பாத்திரத்தில் நடிக்க ஹாலிவுட் நடிகர் அர்னால்டிடம் பேச்சுவார்த்தை நடத்தி இருக்கிறார்கள் என்றும் தற்போது பேச்சுவார்த்தை அளவில் இதற்கான முயற்சிகள் ஆரம்பித்திருப்பதாகவும் இரண்டாம் பாகத்துக்கான படக்குழுவினர் தெரிவித்துள்ளனர். கபாலி படத்தைத் தொடர்ந்து ஷங்கர்இயக்கத்தில் எந்திரன்2 படத்தில் நடிக்க திகதி ஒதுக்கி இருக்கிறார் ரஜினி. இந்தப் படத்தை லைக்கா நிறுவனம் தயாரிக்க இருக்கிறது. நாயகியாக நடிப்பதற்கு தீபிகா படுகோனிடம் பேச்சுவார்த்தை நடத்தி இருக்கிறார் ஷங்கர். இந்த நிலையில் படத்தில் ரஜினிக்கு எதிராக முக்கிய பாத்திரத்தில் நடிக்க பல்வேறு முன்னணி நடிகர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார் இயக்குனர்.

300 கோடிக்கும் அதிகமான பட்ஜெட் என்பதால், பெரிய நடிகர் நடித்தால் மட்டுமே அனைத்து மொழிகளிலும் வெளியிட்டுப் பணத்தை திருப்ப எடுக்க முடியும் என்று நினைக்கிறது லைக்கா நிறுவனம். ரஜினிக்கு எதிராக முக்கிய பாத்திரம் குறித்து தயாரிப்பு நிறுவனத்தினர் அர்னால்டிடம் படக்குழு சார்பில் பேச்சு வார்த்தை நடத்தியது உண்மை. விரைவில் அவர் ஒப்பந்தம் செய்யப்படலாம். ஆனால் பலரிடம் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு இருப்பதால் தெரிவாவது யார் என்பதை இப்போது தெரிவிக்க முடியாது. இந்தமாத இறுதிக்குள் படக்குழுவினர் ஒப்பந்தம் முழுவதும் முடிந்துவிடும் என்று தெரிவித்துள் ளனராம்.

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மல்லாகம் டிப்போவை பார்வையிட்டார் போக்குவரத்து அமைச்சர் நிமால்



வலி வடக்கு,ஒக்.06

யாழ்ப்பாணத்துக்கு கடந்த சனிக்கிழமை பயணம் மேற்கொண்ட போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா மல்லாகத்தில் அமைந்துள்ள இலங்கை போக்குவரத்து சபையின் டிப்போவையும் பார்வையிட் டார்.

அங்கு பழுதடைந்த நிலையில் காணப்படும் பஸ் வண்டிகளையும் மற்றும் திருத்தம் செய்யப்படும் பஸ் வண்டிகளையும் பார்வையிட்டதுடன், தேவைகள் சம்பந்தமாகவும் தன்னுடன் வந்த அதிகாரிகள் மற்றும் சாலை ஊழியர்களுடன் கலந்துரையாடினார். யாழ்ப்பாணத்தில் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் சேவைகளை மேம்பாடடைய நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவிகளை வழங்குவதாகவும் அவர் இந்தச் சந்திப்பின் போது தெரிவித்தார்.

அவருடன் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் உட்பட, அமைச்சின் அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (ஐ–86)

## அரியாலை கிழக்கில் தொடரும் மணல் அகழ்வு

யாழ்ப்பாணம்,ஒக்.06

அரியாலை கிழக்குப் பிரதேசத்தில் சட்டவிரோதமாக மணல் அகழும் பணிகள் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றன.

குறித்த பகுதியில் தற்போதும் இரவு வேளைகளில் சிலர் உழவு இயந்திரங் களைப் பயன்படுத்தி மணல் அகழ்ந்து வருகின்றனர். கடந்த வியாழக்கிழமை சட்டவிரோதமாக மணலை அகழ்ந்து சென்றவர்களைப் பொலிஸார் மடக்கிப் பிடித்தனர். இவ்வாறு அரியாலை கிழக் குப் பிரதேசத்தில் இடம்பெற்று வரும் இந்தச் சட்டவிரோத மணல் அகழ் வால் அனேகமான இடங்கள்தாழ்வாகிப் போய்க்காணப்படுகின்றன. (ஐ–17)


**அறிவித்தல்**

**வலிகாமம் தென்மேற்கு பிரதேசபை மானிப்பாய் உப அலுவலகம் ஆனைக்கோட்டை ஆதனப் பெயர் மாற்றம்**

வட்டாரம்-11
புதிய இலக்கம்-21/75
கொத்துக்கட்டி வீதி,
கிராம அலுவலர்பிரிவு - ஜே/ 136

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட மானிப்பாய் கிராம உப அலுவலகம் வட்டாரம்-11 கொத்துக்கட்டி வீதியில் புதிய ஆதனம் பதியப்படுகின்றது.

யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் தென்மேற்கு பகுதி மானிப்பாய் கோவிற்பற்று நவாலி இறை "குருநாதவளவு" நிலப்பரப்பு 01 குளி 2.34 கொண்ட இவ்வாதனம் மானிப்பாயைச் சேர்ந்த காந்தரூபன் பெண் விஜிதா ஆகிய இவர்களால் நவாலியைச்சேர்ந்த குணசேகரன் பெண் ஆனந்திக்கு அறுதியாக வழங்கப்பட்டது என்றும் பிரசித்த நொத்தாரிசு மாணிக்கம் தியாகராசா அவர்களால் எழுதப்பட்ட 12788 ஆம் இலக்க 2010. 12. 22 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது (மானிப்பாய்) கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார்."குருநாதவளவு" நிலப்பரப்பு 01 குளி 2.34 கொண்ட குறித்த ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது குணசேகரன் பெண் ஆனந்தி என்பவரிற்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

செயலாளர்
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை , மானிப்பாய்



**முதலாம் வருட நினைவஞ்சலி**

எங்கள் அன்புத் தெய்வம்
அமரர்
**பாக்கியம் சண்முகநாதன் (சண்முகநாதன்மில்)**

திதி : அபரபக்க நவமி

ஆண்டொன்று ஆகியது ஆனாலும்
அழுது கொண்டு இருக்கின்றோம்
அம்மா உன் அன்பு முகம்
மறக்கவில்லை.தூண்டா மணி
விளக்காய் ஒளி வீசி பிரகாசித்தீர்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.



குடும்பத்தினர்.
52, இராஜ வீதி
நல்லூர் யாழ்ப்பாணம்
021 222 7212

பிறப்பு 10.12.1928 இறப்பு 17.10.2014


## நெடுந்தீவில் சிறப்பாக நடைபெற்ற இலவச மருத்துவ முகாம்

*500 இற்கும் அதிகமானவர்கள் பங்கேற்பு*



யாழ்ப்பாணம், ஒக்.06

லண்டனில் இருந்து வந்து இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் இலவச மருத்துவ முகாம்களை நடத்திவரும் மருத்துவக் குழுவினால் கடந்த சனிக்கிழமை இலவச மருத்துவ முகாமில் வைத்து சிறப்பு மருத்துவப் பரிசோதனைக்ள் நடத்தப்பட்டன. நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் நடைபெற்ற இந்த மருத்துவ முகாமில் சுமார் ஐநூறுக்கும் அதிகமான பொதுமக்கள் மருத்துவப் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். இருதயம், குடல், சிறுநீரடைப்பு, கண் பரிசோதனைகள் உட்பட பல்வேறு நோய்கள் தொடர்பாக சத்திர சிகிச்சை நிபுணர்கள் பரிசோதனை களை மேற்கொண்டனர். கூடுதலாக கண் சிகிச்சைக்கே மக்கள் சமுகமளித்திருந்தனர் என இதற்குப் பொறுப்பானவைத்தியகலாநிதிஎஸ்.சதானந்தன் தெரிவித்தார். லண்டனைச் சேர்ந்த சுமார் பத்து வைத்திய நிபுணர்கள் இதில் கலந்து கொண்டனர். இந்த மருத்துவ முகாமில் மூன்று சிறுவர்களுக்கு இருதயத் தில் துவாரம் இருப்பது தெரியவந்துள்ளது. முக்கிய தேவையுடைய நோயாளர்களுக்கு இலவச சிகிச்சைகளைப் பெறக்கூடிய ஒழுங்குகள் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளும் மேற் கொள்ளப்பட்டுள்ளன. கண்பார்வை தொடர்பில் பிரச்சினை உள்ளவர்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டதுடன், இலவச மருந்து வகைகளும் நோயாளர்களுக்கு வழங்கப்பட்டன.

சிகிச்சைக்குச் சமுகமளித்தவர்களுக்கான பரிசோதனைக்கான வசதிகள் அனைத்தையும் நெடுந்தீவு பிரதேச செயலர் எஸ். ஜெயகாந் உரிய முறையில் செய்திருந்ததுடன் மருத்துவக் குழுவுக்குத் தேவையான வசதிகள் அனைத்தையும் ஒழுங்கமைத்திருந்தார். (ஐ–7)


**காணி வீடு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், சுண்டுக்குளிக்கு அருகில்
நில.பர. 2 குளி 0.25 விஸ்தீரணம்
6 அறைகள் கொண்ட வீட்டுடன்
கிணறும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு :
077 0229 762, 076 535 6714



**தென்னம்பிள்ளை விற்பனைக்கு**

எம்மிடம் நல்லினத் தென்னம்
பிள்ளைகளும் குறைந்த காலத்தில்
பயன்தரக்கூடிய தென்னம்
பிள்ளைகளும் விற்பனைக்குண்டு.
தொடர்பு : 077 659 2044



**தேவை**

ஊர்சேவல் ஊர்பேடு வான்கோழி
கல்பேட் என்பன கூடிய விலையில்
பெற்றுக்கொள்ளப்படும்.
தொடர்பு : தாசன் பாம் 158/2
கோயில் வீதி யாழ்ப்பாணம்.



**அறிவித்தல்**

**மன்/ சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி,மன்னார் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்-2015**

எமது பாடசாலையின் பழைய மாணவர் சங்க
பொதுக்கூட்டம் எதிர்வரும் 18.10.2015
ஞாயிற்றுக்கிழமை பி.ப 04.30 மணியளவில்
கல்லூரியின் பிரதான மண்டபத்தில்
நடைபெறவுள்ளது. அனைத்து பழைய
மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு
கேட்டுக்கொள்கின்றேன்

அதிபர்



**உரும்பிராய் கிட்ஸ் பார்க்**
**URUMPIRAI KIDS PARK**

**ஆங்கில ஆசிரியர் தேவை**

தகைமைகள்
* G.C.E. O/L ஆங்கில திறமைச்சித்தி
* ஆங்கிலத்தில் மேலதிக தகைமை
* தகுதியுடையோர் ஆவணங்களுடன் நேர்முகப் பரீட்சை க்கு 12.10. 2015 திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு உரும்பிராய் கிட்ஸ் பார்க்குக்கு சமுகம் தரவும்

TPNO: 077 6565 258
021 205 4654

[illegible] கோயில் வீதி,
கோப்பாய் வீதி,
உரும்பிராய்.



**மரண அறிவித்தல்**

**சின்னதுரை பரதன்(கண்ணன்)**



அன்னை மடியில்: 11. 06.1971
இறைவன் அடியில்: 25.09.2015

யாழ். கந்தர்மடம் அரசடி வீதியைப் பிறப்பிடமாகவும் ,லண்டன் Stan more ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சின்னதுரை பரதன் (25.09.2015) வெள்ளிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மட்டுவிலை சேர்ந்த சின்னத்தம்பி-ராசம்மா தம்பதிகள் மற்றும் காலஞ் சென்றவர்களான கந்தர்மடத்தை சேர்ந்த மயில்வாகனம் - கண்மணியம்மாள் தம்பதிகளின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற மட்டுவில் சாவகச் சேரியை சேர்ந்த சின்னதுரை, கந்தர்மடத்தை சேர்ந்த புவனேஸ்வரி (ராசாத்தி- ஆஸ்திரேலியா) தம்பதியரின் சிரேஷ்ட புத்திரரும் தர்ஷி (ஆஸ் திரேலியா) அவர்களின் அருமைச் சகோதரரும் சக்தி (ஆஸ்திரேலியா) அவர்களின் அன்பு மைத்துனரும் வேதிகா (ஆஸ்திரேலியா), பிரீத்தி(ஆஸ்திரேலியா) ஆகியோரின் ஆசை மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (08.10.2015) வியாழக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்: கதிர்காமத்தம்பி
பொன்மணி
தர்ஷி -ஆஸ்திரேலியா
தொடர்பு: +612 965 681 95
பிரித்தானியா
525,பிரதானவீதி தொடர்பு : + 442 089 092 275


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிராமங்கள் மேம்படுத்தல் திட்டத்தில் நெடுந்தீவில் அபிவிருத்திப் பணிகள்

யாழ்ப்பாணம், ஒக்.06
சமுர்த்தி வீடமைப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில், கிராமங்கள் மேம்படுத்தல் திட்டத்தின் கீழ், நெடுந்தீவு பிரதேச செயலகப் பிரிவில் பதினேழு திட் டங்கள் அடையாளம் காணப்பட்டு, 6 மில்லியன் ரூபா செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளதாக நெடுந்தீவு பிரதேச செயலர் செ.ஜெயகாந்த் தெரிவித்தார். தற்போது 8 வீதிகள் புனரமைக்கப்பட்டுள்ளன. இரண்டு பாடசாலைகளுக்கான வகுப்பறைத் திருத்தம், கடற்கரையை வசதிப்படுத்தல், அழகுபடுத்தல் உட்பட நிலாஜோதி மன்றப் புனரமைப்புப் பணிகளும் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (ஜ-7)

# சிறுவர் துஷ்பிரயோக வழக்குகள் தொடர்பில் அரசுக்குச் சில முன்மொழிவுகள் சமர்ப்பிப்பு

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை நடவடிக்கை

கொழும்பு,ஒக்.06
சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்களுடன் சம்பந்தப்பட்டுள்ள வழக்குகளைத் துரிதகதியில் விசாரணை செய்வதற்கு மேல் நீதிமன்றங்கள் மட்டத்திலான நீதிமன்றங்கள் செயற்பாடொன்றை நடைமுறைப்படுத்துவது, குவிந்துள்ள வழக்குகளின் விசாரணைகளை முடிவுக்குக் கொண்டு வருவது, மாகாணங்கள் மட்டத்தில் மேலதிக மேல்நீதிமன்றங்களை ஏற்படுத்துவது உள்ளிட்ட சில முன்மொழிவுகள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் அரசிடம் முன்வைக்கப்பட்டுள்ளன. விசேடமாக 1995, இலக்கம் 22 ஐக் கொண்டுள்ள தண்டனைச் சட்டக்கோவை திருத்தச் சட்டத்தின் பிரகாரம் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் சம்பந்தமாகப் பரிந் துரைக்கப்பட்டுள்ள கட்டாயமான குறைந்தபட்ச தண்டனையே விதிக்கப்பட்டிருப்பது உறுதிப்படுத்தப்பட வேண்டியுள்ளதோடு, சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் சம்பந்தமாகத் தீர்வுகளைப் பெற்றுத்தரும் கொள்கையை மீளாய்வுக்கு உள் ளாக்க அவசியமான வழிகாட்டல்கள் கட்டமைக்கப்பட வேண்டியுள்ளதாகவும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவியான சட்டத்தரணி திருமதி நடராசா பாலேந்திரா தெரிவித்துள் ளார். அதேபோன்று பொலிஸ் துறை நன்நடத்தைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களம், சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் நீதிமன்றங்கள் உள்ளிட்ட சிறுவர்கள் சம்பந்தமாகச் செயற் படும் அனைத்து நிறுவனங்களிலும் அரசியல் தலையீடுகள் இல்லாதவாறான, சிறுவர்கள் குறித்து முழுமையான கவனத்தைச் செலுத்திச் செயற்படும் நிபுணத்துவ அறிவைக் கொண்டுள்ள, சுயாதீனமான பிரிவுகள் நிறுவப்பட வேண்டியுள்ளன எனவும் அவர் யோசனைகளை முன்மொழிந்துள்ளார். தற்போது, சிறுவர் பாலியல் வன்முறை தொடர்பாக விதிக்கக்கூடிய சிறைத் தண்டனைகளின் காலம் 10. வருடங்களுக்கும், 20 வருடங்களுக்கும் இடைப்பட்டதே என்பதால், குறைந்தபட்சமாகத் தற்போதைய மேற்குறித்த தண்டனைகளாவது விரைந்து வழங்கப்படுமானால் சிறுவர் துஷ்பிரயோகங்களை ஓரளவுக்காவது கட்டுப்படுத்திக்கொள்ள முடியும் எனத் தாம் நம்புவதாகவும் அவர் குறிப் பிட்டுள்ளார். சிறைத்தண்டனைகள் அல்லது சாவுத்தண்டனைகளை வழங்குவது மாத்திரம் இத் தகைய சம்பவங்கள் இடம் பெறாது தடுத்து நிறுத்திவிடும் முழுமையான தீர்வொன்றாகி விட மாட்டாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (22)













## சிறுவர் தினத்தை முன்னிட்டு நடமாடும் மருத்துவப் பரிசோதனை

முல்லைத்தீவு,ஒக்.06
சிறுவர் தினத்தை முன்னிட்டு கற்சிலைமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் முல்லைத்தீவு சுகாதாரப் பிரிவினரால் நடமாடும் மருத்துவப் பரிசோதனைகள் இடம்பெற்றன.
சுகாதாரப் பணிமனையால் நடத்தப்பட்ட நடமாடும் வைத்திய சேவை மூலம் ஆசிரியர்கள், மாணவர்கள் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். இதனால் தமது உடலின் நிலை பற்றியும், தமக்கு இருக்கும் நோய்கள் பற்றியும் அறிந்து சிகிச்சை பெறுவதற்கு உறுதுணையாக இருந்ததாக ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் தெரிவித்தனர். உயரம், நிறை கணிக்கப்பட்டு குருதி, சிறுநீர் என்பன பரிசோதிக்கப்பட்டன. (ஜ-500)

## நவராத்திரி விழா

சாவகச்சேரி,ஒக்.06
சாவகச்சேரி சரசாலை ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலயத்தில் நவராத்திரி விழா எதிர்வரும் 13 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது. பத்து தினங்களும் 108 சங்காபிஷேகமும், எதிர்வரும் 21 ஆம் திகதி ஸ்ரீ சக்கர யந்திர பூசையும் விஷேட ஹோமமும் இடம்பெற்று, மறுநாள் காலை 7 மணிக்கு வித்தியாரம்பமும், மாலை 6.00 மணிக்கு மானம்பூ நிகழ்வும் நடைபெறவுள்ளன. (ஜ-9)







## ஆசிரியர் தினவிழா

சாவகச்சேரி,ஒக்.06
தென்மராட்சி கல்வி வலயத்தின் ஆசிரியர் தினவிழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வில் வலயப் பாடசாலைகளில் பணியாற்றி, கடந்த ஒரு வருட காலத்தில் ஓய்வு பெற்றுச் சென்ற ஆசிரியர்கள், அதிபர்கள், அதிகாரிகள் எனப் பலரும் கௌரவிக்கப்பட வுள்ளனர். (ஜ-9)

***

யாழ்ப்பாணம், ஒக்.06
தொண்டமானாறு வீரகத்திப் பிள்ளை மகா வித்தியாலய ஆசிரியர் விழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.
வித்தியாலய உயர்தர மாணவர் ஒன்றியத் தலைவர் ர.ரவீந்திரன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு நிலை கணித ஆசிரியர் சு.சக்திவடிவேல் கலந்து கொள்வார். (ஜ-108)

## இறுவட்டு வெளியீடு

சாவகச்சேரி,ஒக்.06
தென்மராட்சி கல்வி வலய மாணவர்களால் உருவாக்கப்பட்ட 'அன்பாசான்' இறுவட்டு வெளியீடு உலக ஆசிரியர் தினமான இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி அருணாசலம் மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.
வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜாவும், சிறப்பு விருந்தினர்களாக வட மாகாண கல்வித் திணைக்கள மேலதிக கல்விப் பணிப்பாளர் மு.இராதாகிருஷ்ணன், ஓய்வுநிலை மாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொள்வர். இந்த நிகழ்வில் இறுவட்டை உருவாக்கிய கலைஞர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர். (ஜ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாபகார்த்த மண்டபத் திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக்.06

கொக்குவில் இந்துக் கல்லூரியின் 70 ஆவது ஆண்டு சாரணர் நினைவு நாளை முன்னிட்டு ஜெயக்குமார் கீர்த்திகன் ஞாபகார்த்த மண்டபத் திறப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகனும், சிறப்பு விருந்தினர்களாக கல்லூரியின் முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கமும், சாரண மாவட்ட ஆணையாளர் செ.தேவரஞ்சனும், கௌரவ விருந்தினர்களாக யாழ்ப்பாண பிரதி கோட்டக்கல்வி பணிப்பாளர் கோ.வரதராஜமூர்த்தியும், பழைய மாணவன் ஜெயந்திரனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ஐ–21)

# அனுமதி அட்டையை பெற்றுக் கொள்ளவும்

யாழ்ப்பாணம், ஒக்.06

கொக்குவில் இந்துக் கல்லூரியில் இந்த வருடம் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள், தமக்குரிய செய்முறைப் பாடங்களுக்கான அனுமதி அட்டைகளைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டையுடன் வருகை தருமாறு கல்லூரி அதிபர் வே.ஞானகாந்தன் கேட்டுள்ளார். நாளை புதன்கிழமை தொடக்கம் அதனைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அவர் மாணவர்களுக்கு அறியத் தந்துள்ளார்.

(ஐ–4)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2015.10.06 செவ்வாய்க்கிழமை கொழும்பு
பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு
மண்டபத்தில் இலங்கை ஜனாதிபதி அதிமேதகு
மைத்திரிபாலசிறிசேன அவர்களினால்
ஆசிரியர்களிற்கான உயர் விருதாகிய
"பிரதீபா பிரபா"
விருதினை இரண்டாவது
முறையாகவும் பெற்றுக்கொள்ளும்
**சி.ஸ்ரீராகவன்**
(பிரதி அதிபர், யா/ புத்தகலட்டி ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயம்)
அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: திரு.திருமதி. சுபாகரன் உதயநிலா குடும்பத்தினர்.
திரு.திருமதி. ஜீவகன் சுபரஞ்சினி குடும்பத்தினர்.
(19176) (14,16)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/ கந்தரோடை தமிழ் கந்தையா
வித்தியாசாலையின் வாழ்த்துக்கள்
சிறந்த கல்விப்பணிக்காக
அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன
அவர்களின் தலைமையில் 06.10.2015 அன்று
கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த
சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்
கௌரவிப்பு நிகழ்வில்
"பிரதீபா பிரபா– 2015"
விருதினைக் கல்வி அமைச்சினூடாகப்
பெறும்எமது பாடசாலையின் உபஅதிபர்
**திருமதி தமயந்தி நடேசன்**
அவர்களைப் பாராட்டுவதோடு மேலும் பல
சிறப்புக்களைப் பெற வாழ்த்துகின்றோம்.
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை
அபிவிருத்திக்குழு, பழையமாணவர் சங்கம்.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



உலக ஆசிரியர் தினமான இன்று
06.10.2015 செவ்வாய்க்கிழமை
கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச
மாநாட்டு மண்டபத்தில்
நடைபெறும் நல்லாசிரியருக்கான
ஆசிரியர் பிரதீபா பிரபா
விருதினைப் பெறும் எமது கல்லூரி
ஆசிரியரான
**திருமதி சோதிமலர் ஏகாம்பரநாதன்**
அவர்களை பாராட்டுவதுடன் மேலும்
சிறப்புடன் வாழ வேம்படி விநாயகரை
வேண்டுவதுடன் அக மகிழ்ந்தும்
வாழ்த்துகின்றோம்.
கல்லூரி சமூகம்
யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி.
(60608)(12.16)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



2015 ஆம் ஆண்டின்
நல்லாசிரியர் தெரிவில் இன்று
06.10.2015
"பிரதீபா பிரபா"
என்ற ஜனாதிபதி
விருதினைப்பெறுகின்ற எமது
பாடசாலையின் சிரேஸ்ட
இசைத்துறை ஆசிரியை
திருமதி
**திலகவதி ரவிச்சந்திரன் SLTS - I**
அவர்களை நெஞ்சாரப் புகழ்ந்து
வாயார வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்
ஆசிரியர் நலபுரிச்சங்கம்.
யா/ உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
உசன், மிருசுவில்.
(60612) (14,16)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று 06.10.2015 சிறந்த அதிபருக்கான
"பிரதீபா பிரபா"
Best Wishes விருது பெறும் எமது
பாடசாலை அதிபர்
**பொன்னம்பலம் தயானந்தன்**
அவர்களை பாராட்டி வாழ்த்துவதில்
மகிழ்வடைகின்றோம்.
யா/சங்கானை கிழக்கு விக்னேஸ்வரா வித்தியாசாலை
ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலைச்சமூகம்.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**உயர் திரு. தனபாலசிங்கம் ரவீந்திரன் S.L.P.S.2**
(அதிபர் - யா/ வட இந்து ஆரம்ப பாடசாலை)
இன்று செவ்வாய்க்கிழமை பண்டாரநாயக்கா ஞாபகார்த்த
சர்வதேச மாநாட்டு மண்டபத்தில்
"பிரதீபா பிரபா"
விருது பெறும் எமது அதிபரைப் பாராட்டி வாழ்த்துவதில்
பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.
தம்பசிட்டி வீதி,
பருத்தித்துறை
ஆசிரியர் நலன்புரி சங்கம்,பாடசாலை
அபிவிருத்திக்குழு, பழையமாணவர் சங்கம்
(19174) (14,16,17)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்




திருமதி மி.விமலநாதன்
அதிபர்




திருமதி சோ.பிருகதீஸ்வரன்
ஆசிரியை

06.10.2015 அன்று பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு
மண்டபத்தில் "*பிரதீபா பிரபா*" விருதினைப்பெறும் எமது கல்லூரி
அதிபர் திருமதி மிமலாதேவி விமலநாதன் அவர்களையும் எமது கல்லூரி
ஆசிரியை திருமதி சோபனா பிருகதீஸ்வரன் அவர்களையும் மனமார
பாராட்டி வாழ்த்துகின்றோம்.
கல்லூரிச் சமூகம்
யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி.
(19178)(11,16)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மு/ சிவநகர் தமிழ் வித்தியாலய அதிபர்
**சிவகுரு சின்ராசா (SLPS -2 II)**
அவர்கள் கல்வி அமைச்சினால்
பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு
மண்டபத்தில் இன்று 06.10.2015 இல்
நடைபெறும்
"குரு பிரதீபா பிரபா"
விருதைப் பெறுவதையிட்டு மனம
வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்
மு/ சிவநகர் தமிழ் வித்தியாலயம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.
ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள்.
(19183) (14,16)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி
**நிர்மலா சுதர்சன்**



திருமதி
**லுசின்டா தர்மினி பாலேந்திரன்**

உலக ஆசிரியர் தினத்திற்கு இணையாகக் கல்வி அமைச்சு நடாத்தும்
"ஆசிரியர் பிரதீபா பிரபா– 2015" விருது பெறும்
எமது பாடசாலை ஆசிரியப் பெருந்தகைகளான திருமதி நிர்மலா சுதர்சன்.
திருமதி லுசின்டா தர்மினி பாலேந்திரன் ஆகியோர்களை வாழ்த்துவதில்
பெருமகிழ்வடைகின்றோம்.
யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி.
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
(65172) (14,16)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

### ஜெயக்குமார் கீர்த்திகன்



ஆண்டுகள் மூன்று ஆனாலும்
ஆறவில்லை உன் துயரம்
கீர்த்திகனே நீ கீர்த்தியுடன்
சென்று விட்டாய்.
நேற்று, இன்று மட்டுமல்ல
எம் இதயத்துடிப்பு உள்ள வரை
நிலைத்திருக்கும் உன் நினைவு

உன் நினைவுகளோடு
தோற்றம் 16.07.1995
மறைவு 06.10.2012

## மரண அறிவித்தல்கள்

### திருமதி. பரிமளம் கனகலிங்கம்



புத்தூர்கிழக்கு புத்தூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பரிமளம் கனகலிங்கம் 04.10.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்

அன்னார் காலஞ் சென்றவர்களான கதிரேசு-ஆச்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் கனகலிங்கத்தின் அன்பு மனைவியும் கிருஷ்ணகுமாரின் தாயாரும் புஸ்பானந்தத்தின் மாமியாரும் யசீராஜ், கமல்ராஜ், பிரபாஸ்ராஜ், ஆகியோரின் பேத்தியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (07.10.2015) புதன் கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு சித்திட்டி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப் படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

புத்தூர் கிழக்கு
புத்தூர்

தகவல்: புஸ்பானந்தன்
(மருமகன்)
T.P:077 505 1813

### திருமதி யோகம்மா இராசரத்தினம்



பிறப்பு 14.01.1943 இறப்பு 03.10.2015

சரவணையைப் பிறப்பிடமாகவும், தாவடி மற்றும் பம்பலப்பிட்டி கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகம்மா இராசரத்தினம் 03.10.2015 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், இராசரத்தினத்தின் (உரிமையாளர்- விஜிதா அரிசி ஆலை, தாவடி) பாசமிகு பாரியாரும், காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு- தர்மலட்சுமி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற பேரம்பலத்தின் அன்புச் சகோதரியும், கல்யாணி, கலைவாணி, கருணாகரன் (லண்டன்), ரவீந்திரன் (லண்டன்), விஜிதா ஆகியோரின் தாயும், Dr. சுரேஸ் (ஆதார வைத்தியசாலை தெல்லிப்பழை), சுபாஸ்சந்திரன் (VS LANKA (Pvt) Ltd Colombo) பிரகலதா, பதிமிலா, காண்டீபன் (Central Engineering Consultancy Bureau) ஆகியோரின் மாமியும், ஹரிணி,பிருந்தாபன், சுபாங்கி, டீபக், சுஜின், பிரிட்ரிகா, சுகந், கிஷான், அக்ஷயா, அக்ஷனா, கிரிஷாந்த் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், யோகம்மா, நகுலேஸ்வரி, நவரட்ணம்மா, மங்கையர்க் கரசி, சிவரட்ணம் (நந்தமாலா இரும்பகம்), மீனாம்பாள் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் நேற்று (05.10.2015) திங்கட்கிழமை காலை 8.30 மணிமுதல் மாலை 5.00 மணிவரையும் இன்று (06.10.2015) செவ்வாய்க் கிழமை காலை 8.00 மணிமுதல் மாலை 2.00 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் 2.30 மணியள வில் நடைபெற்று, பூதவுடல் மாலை 4.30 மணியளவில் கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.69.4/3,
டேவிட்சன் வீதி,
பம்பலப்பிட்டி,
கொழும்பு - 04

தகவல்:
குடும்பத்தினர்.
தி.இராசரத்தினம் (கணவர்),
(விஜிதா அரிசி ஆலை உரிமையாளர்)
011 250 7659, 077 762 9337

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி உதவிப் பிரதி அதிபர்
திருமதி ஆர்.ஜே.ராஜு அவர்களின்
அன்புக் கணவர்
**றொஹான் சஞ்ஜே ராஜு**
அவர்கள் காலமானதையிட்டு
துயருற்றிருக்கும் அன்னாரின்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி
கல்லூரிச் சமூகம்

## என்றென்றும் உங்கள் நினைவுகளுடன் மூன்றாண்டுகள்

### திருமதி காயத்திரி பாலமுரளிதரன்

(முன்னாள் ஆசிரியர் யாழ். கொக்குவில் இந்துக்கல்லூரி)



மண்ணுலகில் 06.06.1970
விண்ணுலகில் 09.10.2012

மூன்றாண்டுகள் முடிந்தாலும்
உங்களது முகம் பார்த்து....
ஆண்டாண்டு கடந்தாலும்
உங்களது வதனம் ஆழமாய்
எம் மனதில் இருக்கும்.....

அம்மா என்றழைக்கும்- உங்களது
ஆசைக்குழந்தைகளின்
அன்பு மொழியோ ஓயவில்லை
வாழ்வில் கலந்த- உங்களது
கணவரின் கலக்கமும் தீரவில்லை

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

19, 6 ஆம் ஒழுங்கை,
பலாலி வீதி, கந்தர்மடம்.

குடும்பத்தினர்.

## 3ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் :16.06.1995 மறைவு : 06.10.2012

### அமரர் ஜெயக்குமார் கீர்த்திகன்

(2014 கலைப்பிரிவு மாணவன், கொக்குவில் இந்துக் கல்லூரி)

எம் குடும்பத்தின் முதல் முத்தே
பாசத்தின் உறைவிடமே கீர்த்தி
நீ எம்முடன் வாழ்ந்த நாள்கள்
இன்னும் எம் நெஞ்சில் பசுமரத்தாணியாய்
இன்றும் நிலைத்திருக்குதைய!
நீ இன்று விண்ணுலகு சென்று
ஆண்டுகள் மூன்று ஆனதுவோ?
கீர்த்தி நீ கீர்த்தியுடன்
எம் சுவாசம் ஓயும் வரை
எம் நினைவுடனே நீடித்திருப்பாய்



உனது ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (06.10.2015) செவ்வாய்க்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரியில் கீர்த்திகனின் ஞாபகார்த்த மண்டபம் திறந்து வைக்கப்படும்

கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

அப்பா, அம்மா,
தம்பிமார்: ஆர்த்தன், அரிவன்
தங்கை: ஆரபி

## ஆசிரியர் தினமும் திறப்பு விழாவும்

யாழ்ப்பாணம்,ஒக்.06

அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல் லூரியின் ஆசிரியர் தின நிகழ்வும், ஆசிரி யர்களுக்கான ஓய்வறைக் கட்டடத் திறப்பு விழாவும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரியில் நடைபெற வுள்ளது. கல்லூரி முதல்வர் அருட்சகோதரி மரிய றொசாறியோ தலைமையில் நடை பெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக அச்சு வேலி மக்கள் வங்கி முகாமையாளர் திருமதி றொசெப்ற் தவநாயகம் கலந்து கொள்வார்.

(ஐ-422)

* * * *

யாழ்ப்பாணம், ஒக்.06

புலோலி, யாழ், புற்றளை மகா வித்தியாலயத்தின் ஆசிரியர் தினம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை யில் நடைபெறவுள்ளது.

மாணவத் தலைவி செ.மிதுசா தலைமையில் நடைபெறும் நிகழ் வில் பிரதம விருந்தினராக வடம ராட்சிக் கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் யோகசாமி ரவீந்திரன் கலந்து கொள்வார். (ஐ-ரி4)

## தென்னிலங்கை ஆசிரிய வளவாளர்கள் தென்மராட்சி பாடசாலைகளுக்கு பயணம்

வரணி,ஒக்.06

சிநேகித பாடசாலைகள் எனும் செயற்றிட்டத்தின் கீழ் தென்னி லங்கை பாட சாலைகளில் இருந்து ஆசிரிய வளவாளர்கள் தென்மராட்சிப் பகுதி பாடசாலை களுக்கு பயணம் ஒன்றை மேற் கொண்டிருந்தனர். களனி துட்ட கைமுனு வித்தியாலய அதிபர் வண.வத்தள சோபித தேரர் தலைமையில் 13 ஆசிரிய வள வாளர்கள் கடந்த 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தென் மராட்சி கல்வி வலய பாடசா லைகள் சிலவற்றுக்கு தலா ஓர் ஆசிரியர் வீதம் கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டி ருந்தனர். இதனடிப்படையில் மேற்படி பாடசாலை ஆசிரியர் ஈ.ஜீ.எஸ். சஞ் சீவ, வரணி வடக்கு சைவப் பிரகாச வித்தியாசா லைக்கு வருகை தந்திருந்தார். பாட சாலை அதிபர் வ.விஜயகுமாரன் பாடசாலை வளங்கள் பற்றி அவ ருக்கு எடுத்துக் கூறி யதுடன், பாடசாலை மாணவர்கள், ஆசி ரியர்கள் ஆகியோருடன் அவர் கலந்துரையாடல்களை நடத்திய துடன், அவருக்குப் பாட சாலை மாணவர்களால் பாட்டு (சிங்கள மொழியில்), நடனம், காவடி நடனம் போன்ற நிகழ்வுகளை யும் நடத்திக் காட்டினர். (ஐ-122)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு advt@uthayan.com 021 493 1111

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காளானில் மின்கலம் உருவாக்கி ஆராய்ச்சியாளர்கள் சாதனை



போடபெலஸ் (Portabellas) எனும் காளானை அடிப்படையாகக் கொண்டு புதிய வகை லிதியம் அயன் மின் கலத்தை உருவாக்கி அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் சாதனை படைத்துள்ளனர்.

இந்த வகை மின்கலமானது, இலகுவாக உருவாக்கப்படக் கூடியதாக இருப்பதுடன், செலவும் குறைவாக இருப்பதாக குறித்த ஆராய்ச்சியாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

மேலும் கைபேசிகளில் நீண்ட நேரம் மின்சக்தியை வழங்குவதற்கு இந்த மின்கலத்தைப் பயன்படுத்தக்கூடிதாக இருக்கும் எனவும், குறுகிய காலத்தில் இம் மின்கலங்களுக்கான கேள்வி அதிகரிக்கும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி 2020 ஆம் ஆண்டளவில் 6 மில்லியன் வரையான வாகனங்களில் இந்தவகை மின்கலங்கள் பயன்படுத்தப்படும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.




# கூகுள் அறிமுகம் செய்யும் புத்தம் புதிய டேப்லட்

தனது புத்தம் புதிய டேப்லட்டான கூகுள் பிக்செல்சீ (Google Pixel C) இனை இவ்வருட இறுதியில் கூகுள் நிறுவனம் அறிமுகம் செய்யவுள்ளது. இதனை அந்த நிறுவனம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இதன்படி 10.2 அங்குல அளவுடைய தொடு திரையைக் கொண்ட இந்த டேப்லட் ஆனது Quad Core NVIDIA X1 Processor, பிரதான நினைவகமாக 3GB LPDDR4 RAM என்பவற்றை உள்ளடக்கியதாக வடிவமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் Android 6.0 Marshmallow இயங்குதளத்தில் செயற்படக்கூடியதாக இருப்பதுடன், USB TypedC connector வசதியும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இந்த டேப்லட் ஆனது நவம்பர் மாதமளவில் அறிமுகம் செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# சைகைகளை எழுத்துருக்களாகவும், ஒலி வடிவமாகவும் மாற்றும் கையுறை

கை அசைவுகளை அல்லது சைகைகளை எழுத்துருக்களாகவும், ஒலி வடிவமாகவும் மாற்றக்கூடிய அதிநவீன இலத்திரனியல் கையுறை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இதனை சவுதி அரேபியாவைச் சேர்ந்த ஊடகக் கலைஞரான Hadeel Ayoub என்பவர் உருவாக்கியுள்ளார்.

ஐந்து சென்சார்களை உள்ளடக்கியதாக வடிவமைக்கப்பட்டுள்ள இக் கையுறையானது மெல்லியதாகவும், பாரம் குறைந்ததாகவும், விரைவாகச் செயற்படக்கூடியதாகவும் இருக்கின்றது.

மேலும் இதனை WidFd இணைப்பின் ஊடாக ஸ்மார்ட் கைப்பேசிகள் மற்றும் டேப்லட்கள் என்பவற்றுடன் இணைத்து பயன்படுத்தக்கூடியதாக இருத்தல் விசேட அம்சமாகும்.

இதன் விலையானது 386 அமெரிக்க டொலர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.





# இனிய ஆசிரியர் தின வாழ்த்துக்கள்

ஒக்ரோபர் 6
உலக ஆசிரியர் தினத்தின்
உன்னதமான நாள்
வற்றாத நதியாய்
வாரி இறைக்கும் ஊற்றில்
முத்தான சிற்பிகளை
மூழ்கியெடுக்கும்
முயற்சியாளர்களாம்
ஆசிரியர்களை அரவணைத்திடும்
அன்புத் திருநாள் ......

சின்னச்சின்ன மலர்களை
தேர்ந்தெடுத்து மாலையாய்
வண்ண வண்ண நிறங்களில்
வடித்தெடுக்கும் சிற்பிகள்
எண்ணம் போல மலர்களை
எடுத்து நீங்கள் தொடுக்கையில்
பென்னம் பெரிய மாலையாய்
பெருமைகொள்ளச் செய்கிறீர்



உயிரோவியங்களை
உன்னதமாய் வடித்தெடுக்கும்
உத்தமர்களே!
பயிர் வளர்ப்பது போல்
பார்த்துப் பார்த்து நீர் வார்த்து
வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம்
ஓடி ஓடி ஒத்தடம் கொடுத்தீர்கள்
கூடி மகிழ்ந்திடும் இந்நாளில்
கோடி கோடியாய் எம் வாழ்த்துக்கள்

வாழ்த்துக்கள் ... வடிக்கின்றோம்
வார்த்தைகளைத் தேடுகின்றோம்

**ஈ. சரவணபவன்**
**நாடாளுமன்ற உறுப்பினர்.**
**யாழ்., கிளிநொச்சி மாவட்டம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








இந்த வருடத்துக்கான நஷனல் ஜோக்ரபியின் சிறந்த சுற்றுலா ஒளிப்படக் கலைஞருக்கான விருது அன்னுர் பட்ஜன் ப்ளோருக்கின் "திமிங்கில" ஒளிப்படத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.
17 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஒளிப்படக் கலைஞர்கள் இந்தப் போட்டியில் பங்குபற்றியிருந்தனர். பைசால் அசிம்மின் "செங்கல் பணியாளர்"களின் ஒளிப்படம் இரண்டாம் இடத்தையும் , அகமட் அல் டோகியின் ,"ஒட்டக ஓட்டப் போட்டி"யின் ஒளிப்படம் மூன்றாம் இடத்தையும் தட்டிச் சென்றன.(ற–ரி4)

# வரலாறு காணாத வெள்ளத்தில் தத்தளிக்கிறது தென் கரோலினா

## இதுவரை 6 பேர் சாவு



கரோலினா, ஒக்.6
அமெரிக்காவின் தெற்கு கரோலினா மாகாணத்தில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. அங்குள்ள சார்லஸ்டன் நகரம் வெள்ளத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.
கடந்த 3 நாள்களில் 35 சென்ரிமீற்றர் மழைவீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், இதுவரையில் வெள் ளப்பெருக்கால் 6 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
வெள்ளப் பெருக்கால் பாடசாலைகள், நெடுஞ்சாலைகள் மூடப்பட்டுள்ளன. இதுவரையில் 100க்கும் மேற்பட்ட வாகனங்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. தெற்கு கரோலினாவில் அவசர நிலைமை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா அறிவித்துள்ளார்.
பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதேவேளை, கரீபியயை ஜோகுயின் சூறாவளி தாக்கும் என்று அஞ்சப்படும் நிலையில், அதன் ஈரப்பதன் காரணமாக கரோலினாவில் மழை வீழ்ச்சி அதிகரிக்கும் என்றும் அஞ்சப்படுகின்றது.
இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள கரோலினா ஆளுநர் நிக்கி ஹெலி:–
வரலாறு காணாத வெள்ளப்பெருக்கைச் சந்தித்துள்ளோம். தொற்று நோய்கள் ஏற்படுவதற்கு சாத்தியம் காணப்படுவதால் அதுகுறித்து பொது மக்களை அவதானமாக இருக்குமாறு அறிவித்துள்ளோம்."– என்றார்.
(ற–ரி4)



# பேஸ்புக் நிறுவுநர் மீது மோசடி வழக்குப் பதிவு!

நியூயோர்க், ஒக்.6
தற்போது உலகில் அதிகமானவர்களின் பாவனையில் உள்ள சமூக வலைத்தளமான பேஸ்புக்கின் நிறுவுநர் மார்க் ஸ்க்கர்பேர்க் மீது மோசடி வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
கலிபோர்னியாவைச் சேர்ந்த நிலம் வாங்கி விற்கும் நிறுவன உரிமையாளர் மிர்சியா வோஸ் கொரிகானுடன் மார்க் செய்து கொண்ட ஒப்பந்தத்திலேயே மோசடி செய்யப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.
வொஸ்கொரிகானுடன் 17 லட்சம் டொலருக்கு மார்க் ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டிருந்தார் என்றும், அதன்பின்னர் அதை அவர் நிறைவேற்றவில்லை என்றும் தெரிவித்தே வழக்குத் தொடரப்பட்டுள்ளது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (ற)

# மறைமு
# உருவாக்

## ரஷ்யாவை எச்சரி

வொஷிங்டன், ஒக்.6
சிரிய விவகாரத்தை அமெரிக்கா மற்றும் ரஷ்ய நாடுகளுக்கு இடையிலான மறைமுகப் போராக மாற்ற வேண்டாம் என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.
சிரியாவில் பிரச்சினை ஆரம்பித்த நேரத்தில் இருந்து அந்த நாட்டு ஜனாதிபதிக்கு எதிரான கிளர்ச்சியாளர்களுக்கு நாம் ஆதரவு வழங்குகின்றோம். ரஷ்யா தற்போது புதிதாக ஐ.எஸ். அமைப்புக்கும், தீவிரவாதத்துக்கும் எதிராகச் செயற்படுவதாக கிட்டத்தட்ட ஒருவருடத்துக்குப் பின்னர் நாடகத்தனமான ஒரு செயலை ஆரம்பித்துள்ளது – என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
வெள்ளை மாளிகையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அமெரிக்காவைக் குற்றஞ்சாட்டிக்

# உலகின் மிக
# வெனிசுவே

லண்டன், ஒக்.6
உலகின் மிகப் பெரிய சொக்லேட் வெனிசுவேலா நாட்டில் தயாரிக்கப்பட்டுள்ளது. இது கின்னஸ் சாதனையில் இடம்பிடித்துள்ளது.
2015ஆம் ஆண்டுக்கான சொக்லேட் திருவிழாவைக் கொண்டாடும் முகமாகவே இந்தப் பிரமாண்டமான

# சீனாவில் மின்மினிப் பூங்கா

பீஜிங், ஒக்.6
மின்மினிப் பூங்கா அமைக்கும் சீனாவின் நீண்டகாலச் செயற்றிட்டம் தற்போது நிறைவுக்கு வந்துள்ளது. மத்திய சீனாவின் வுஹான் நகரில் இந்த மின்மினிப் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. இங்கு இரவு நேரங்களில் பல்லாயிரக்கணக்கான மின்மினிப் பூச்சிகளின் ஒளியைக் கண்டு ரசிக்கலாம். இந்தப் பூங்கா 5 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.
பறக்கும் பகுதி, கவனிக்கும் பகுதி, தொலைவில் இருந்து பார்க்கும் பகுதி, இனப்பெருக்கப் பகுதி, அறிவியல் விளக்கப் பகுதி என்று பிரிக்கப்பட்டு, பார்வையாளர்களைக் கவர்ந்திழுக்கிறது. இங்கே பார்வையாளர்கள் தவிர, ஆராய்ச்சியாளர்களும் பெருமளவில் வருகிறார்கள். அங்கிருந்து மின்மினிகளை விலைக்கு வாங்கிக்கொண்டும் செல்ல முடியும். பூச்சிகள் வாழக்கூடிய இயற்கை வளங்கள் குறையும் நேரத்தில் இப்படிப்பட்ட பூங்காக்கள் பூச்சிகளுக்கு நன்மை அளிக்கின்றன.
இங்கிருந்து உற்பத்தியர்கும் மின்மினிப் பூச்சிகளை ஒரு போத்தலில் அடைத்து, பல்வேறு இடங்களுக்கும் இணையம் மூலம் விற்பனை செய்து வருகிறார்கள். மே மாதம் முதல் ஒக்ரோபர் வரை இந்தப் பூங்கா திறந்திருக்கும். மீண்டும் அடுத்த ஆண்டு மே மாதம் திறக்கப்படும். (ற)



# வத்திக்கானில் ஒன்றுகூடிய உலக கத்தோலிக்க ஆயர்கள்

வத்திக்கான் சிற்றி, ஒக்.6
உலகின் பல்வேறு நாடுகளிலுமுள்ள கத்தோலிக்க ஆயர்கள் வத்திக்கானில் ஆராதனைகளில் பங்கு கொள்ளும் நிமித்தம் கடந்த வெள்ளிக்கிழமை ஒன்று கூடினர். இதன் இரண்டாம் கட்ட ஆராதனை நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் ஆரம்பித்தது. இது எதிர்வரும் 25 ஆம் திகதி வரை மூன்று கட்டங்களாக நடத்தப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.
உலகக் கத்தோலிக்கத் தலைவராக மதிக்கப்படும் போப்பாண்டவர் பிரான்சிஸின் அழைப்பை ஏற்று உலகெங்கிலுமுள்ள ஆயர்கள் இந்நிகழ்வில் கலந்து கொள்ளும் பொருட்டு வத்திக்கானில் கூடியுள்ளனர். வத்திக்கான் திருச்சபையில் உலக ஆயர்கள் வருகை [illegible] கான மக்கள் கூடியுள்ளனர்.
இதன்போது போப் பாண்டவர் ஆராதனை நிகழ்வை முன்னெடுத்ததோடு, பிரார்த்தனைகளும் இடம்பெற்றன. (ற)



ஒஸ்திரியாவில் நடைபெறும் சர்வதேச மீசை
ஏராளமானோர் குவிந்துள்ளனர். போட்டி
பார்வையாளர்களைக் கவர்ந்தனர். வித்தியாசமா
தாடி சம்பியன் போட்டி கடந்த 1990ஆம் ஆண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ...முகப் போரை ...க்க வேண்டாம்

## ...சரிக்கின்றார் பராக் ஒபாமா



கொண்டிருப்பதை புதின் நிறுத்த வேண்டும். ரஷ்யாவின் நடவடிக்கை ஐ.எஸ். அமைப்பை வலுப்படுத்தவே செய்யும். அசாத்துக்கு ஆதரவாக ஈரானும் இணையும்.

ரஷ்யாவுக்கு இதன் பின்விளைவுகள் பாதகமாகவே அமையும். இத்தகைய செயற்பாடுகள் சிரியாவில் அமெரிக்கா மற்றும் ரஷ்யா இடையான மறைமுகப் போரையே ஏற்படுத்தும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

# ...கப் பெரிய சொக்லேட் ...லாவில் தயாரிப்பு

சொக்லேட் நாணயம் தயாரிக்கப் பட்டுள்ளது.

நெஸ்டா டீர்ரா என்ற தொண்டு நிறுவனத்தின் அனுசரணையுடன் தயாரிக்கப்பட்ட இந்தச் சொக்லேட் நாணயம் 240 மீற்றர் விட்டமும், 677 கிலோ கிராம் எடையும் கொண்டது.

இதைத் தயாரிப்பதற்கு 80 சொக்லேட் தயாரிப்பாளர்கள் ஈடுபடுத்தப் பட்டனர்.

தயாரித்து முடிப்பதற்கு 10 மணித்தியாலங்கள் எடுத்துள்ளது.

இதற்கு முன்னர் 658 கிலோ எடையுடைய சொக்லேட்டே உலகின் மிகப் பெரிய சொக்லேட்டாக இருந்தது. (ற)





...மீசை மற்றும் தாடி போட்டியில் கலந்து கொள்வதற்காக உலகம் முழுவதும் ...போட்டியாளர்கள் வித்தியாசமான – விசித்திரமான தாடி மீசைகளுடன் ...யாசமான மீசை மற்றும் தாடி வைத்திருப்பவர்களுக்கான சர்வதேச மீசை மற்றும் ...ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகிறது. (ற–ரி4)

# வெள்ளத்தில் மூழ்கியது பிரான்ஸின் தென்கிழக்கு

## 16 பேர் சாவு; பலரைக் காணவில்லை

பரிஸ், ஒக்.6

பிரான்ஸின் தென்கிழக்குப் பகுதிகளில் பெய்துவரும் கனமழை காரணமாகக் கடும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. பல நகரங்களுக்குள் வெள்ள நீர் புகுந்துள்ள நிலையில், இதுவரை 16 பேர் வெள்ளத்தால் உயிரிழந்துள்ளனர். பலர் காணாமல் போயுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றபோதிலும் அது குறித்த எண்ணிக்கை தெரியவரவில்லை.

நேற்றுமுன்தினம் முதல் அங்கு கனமழை பெய்து வருகின்றது.


அதனால் அண்டிபீஸ், கேன்ஸ் ஆகிய நகரங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. எதிர்பார்க்கப்பட்டதைவிடவும் 10 சதவீதம் மழை வீழ்ச்சி அதிகரித்துள்ளது. மழையின் தீவிரத்தால் பெர்க் ஆறு கரைபுரண்டு ஓடுகின்றது.

அதனால் பல நகரங்களுக்குள் வெள்ளம் உட்புக ஆரம்பித்துள்ளது.

நேற்றுமுன்தினம் பிரான்ஸ் ஜனாதிபதி பிராங்கேயிஸ் ஹொலண்டே வெளியிட்டிருந்த அவசர செய்தியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதியில் உள்ளவர்களை எச்சரிக்கையாக இருக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

விரைவான மீட்புப் பணிகள் நடைபெற்றுவருகின்றன என்று குறிப்பிட்ட அவர், மீட்புக் குழுவினருக்கும் நன்றி தெரிவித்தார்.

அத்துடன் வெள்ளத்தின் தாக்கம் அதிகமாக உள்ள பியாட் நகருக்கும் ஹொலண்டே நேரில் சென்றார். அங்குள்ள நிலைமைகளைப் பார்வையிட்ட அவர் பாதிக்கப்பட்ட மக்களுடனும் கலந்துரையாடினார். (ற–ரி4)





# அமைதிக்கான நோபல் ஏஞ்சலா மேர்க்கலுக்கு!

பெர்லின் , ஒக்.6

லட்சக்கணக்கான அகதிகளுக்கு ஜேர்மனியின் கதவுகளை திறந்துவிட்டுள்ள அந்த நாட்டு ஜனாதிபதி ஏஞ்சலா மேர்க்கலுக்கு நடப்பாண்டுக்கான நோபல் பரிசு கிடைக்க வாய்ப்புள்ளது என்று கூறப்படுகின்றது.

2015 ஆம் ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசை தீர்மானிப்பதற்கான பணிகள் நோர்வே நாட்டில் நேற்று ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

இந்த ஆண்டுக்கான நோபல் பரிசை பெறுவதற்காக ஜேர்மனி ஜனாதிபதி ஏஞ்சிலா மேர்க்கல், அமெரிக்க வெளியுறவு துறை செயலாளரான ஜான் கெரி, கத்தோலிக்க மதகுருவான போன் பிரான்சிஸ், ஈரான் நாட்டு வெளியுறவு துறைச் செயலாளர் உள்ளிட்ட 276 நபர்களின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், ஜேர்மனியில் வெளியாகும் 'பில்ட்' என்ற பத்திரிகை நேற்று சிறப்பு செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

அகதிகளுக்குப் புகலிடம் அளிப்பது தொடர்பான விடயங்களில் ஜேர்மனி நாடு பிற ஐரோப்பிய நாடுகளுக்கு ஒரு முன்மாதிரியாக விளங்கி வருகிறது. ஐரோப்பிய நாடுகளிலேயே அதிக எண்ணிக்கையான மக்களைக் கொண்ட நாடுகளில் முதலாவதாக திகழும் ஜேர்மனி, புகலிடம் கோரி வரும் அகதிகளுக்கு மறுவாழ்வு ஏற்படுத்தித் தருவதில் ... ... ஐக்கிய நாடுகள் சபையில் அகதிகளின் உண்மை நிலையை விளக்கியதுடன், அகதிகளுக்கு புகலிடம் கொடுப்பது தொடர்பான விடயத்தில் ஜேர்மனி அரசின் பங்கு குறித்து ஜனாதிபதி ஏஞ்சிலா மேர்க்கல் திறம்பட எடுத்துக்காட்டியுள்ளார்.

உக்ரைன் நாட்டுப் பிரச்சினைகள் தொடர்பான விடயத்திலும் ஏஞ்சலா மெர்க்கலின் பங்கு மிக முக்கியமானதாக பார்க்கப்படுகிறது. ஏஞ்சலா மேர்க்கலின் மகத்தான இந்தச் செயற்பாடுகள் அவருக்கு 2015ஆம் ஆண்டுக்கான அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்று தரும் – என்றுள்ளது.



நோர்வே தலைநகரான ஒஸ்லோவில் உள்ள நோபல் ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநரான கிறிஸ்டியன் பேர்க் ஹார்ப்விகன் என்பவரும் ஏஞ்சலா மேர்க்கலுக்கு அமைதிக்கான நோபல் பரிசு கிடைக்க வாய்ப்புள்ளது எனக் கருத்து தெரிவித்துள்ளார் என்று ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நோபல் பரிசு பெறுவதற்கு 276 நபர்கள் பட்டியலில் உள்ள நிலையில், இது தொடர்பான அதிகார பூர்வமான அறிவிப்பு எதிர்வரும் 9ஆம் திகதி வெளியிடப்படும். (ற–ரி4)

# அதிகூடிய வறுமை நிலை ஆண்டிறுதியில் குறையும்

## உலக வங்கி ஆய்வில் தகவல்

நியூயோர்க், ஒக்.6

உலக வங்கி உலகளாவிய ரீதியில் வறுமை தொடர்பாக நடத்திய ஆய்வில் 2015 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் அதி கூடிய வறுமை நிலை 10 சதவீதமான குடித்தொகையையே கொண்டிருக்கும் எனத் தெரிவித்துள்ளது.

உலகில் நிலவும் அதிகூடிய வறுமை நிலையை இந்தத் தலைமுறையில் கட்டுப்படுத்த முடியும் என்று உலக வங்கியின் தலைவர் ஜிம் யொங் கிம் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

உலக மொத்தக் குடித்தொகையில் அதிகூடிய வறுமை மட்டத்துக்கு கீழ் வாழ்வோரின் எண்ணிக்கை 10 சதவீதத்திலும் பார்க்க குறைந்தளவினதாகக் காணப்படுவது இதுவே முதல் தடவை என உலக வங்கி மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

2012 ஆம் ஆண்டில் 12.8 வீதமாகக் காணப்பட்ட அதிகூடிய வறுமை மட்டத்துக்கு கீழ் வாழ்வோரின் சதவீதமானது தற்போது 9.6 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது என்று உலக வங்கி தெரிவித்துள்ளது.

ஆயினும் ஆபிரிக்காவின் உப சஹாராப் பகுதிகளில் அதிகரித்து வரும் வறுமை நிலைமைகள் கவலைக்குரியது எனவும் உலக வங்கியின் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. ஆயினும் இந்தப்பகுதியில் 42.6 வீதமாகக் காணப்பட்ட வறுமை நிலை 2015 ஆம் ஆண்டின் நிறைவில் 35.2 வீதமாக வீழ்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ற–ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகத்தானது ஆசிரியத்துவம்

> ஆசிரியத் தொழில் என்பது சவால்கள் நிறைந்த தொரு தொழிலாகும். ஒவ்வொரு மாணவனும் ஒவ்வொரு வகையாகக் காணப்படுவான். இன்றைய மாணவர் மத்தியில் இழையோடியுள்ள வன்முறைத் தன்மைகள், பாலியல்சார் நடவடிக்கைகள், நெறி பிறழ்வான நடத்தைக் கோலங்கள், மாணவர்கள் சார்ந்த போதைப்பொருள் பாவனை என்பன ஆபத்தின் விளிம்புக்கே மாணவர்களை இட்டுச் செல்கின்றன.



சி.நற்குணலிங்கம்

சர்வதேச ஆசிரியர் தினம் அறியாமை எனும் இருளை நீக்கி, அகக் கண்களைத் திறந்து மெய்ஞ்ஞான ஒளியை இதயக் கமலத்தில் ஒளிரச் செய்கின்ற ஆசான்களை மனதில் நிறுத்தி மனதார வணங்கிப் போற்றும் நாள். ஆசீர்வாதம் பெறும் நாள். ஆசிரிய மகத்துவமும், மகிமையும் போற்றப்படும் நாள்.

ஆசிரியத் தொழில் என்பது சவால்கள் நிறைந்த தொரு தொழிலாகும். ஒவ்வொரு மாணவனும் ஒவ்வொரு வகையாகக் காணப்படுவான். இன்றைய மாணவர் மத்தியில் இழையோடியுள்ள வன்முறைத் தன்மைகள், பாலியல்சார் நடவடிக்கைகள், நெறி பிறழ்வான நடத்தைக் கோலங்கள், மாணவர்கள் சார்ந்த போதைப்பொருள் பாவனை என்பன ஆபத்தின் விளிம்புக்கே மாணவர்களை இட்டுச் செல்கின்றன. மாணவர் சமுதாயம் இலக்குத் தவறிய பாதையில் பயணிக்கும்போது ஆசிரியர்கள் எதிர்நீச்சலுடன் தமது கடமைகளைச் செய்ய வேண்டியுள்ளது. இதன் காரணமாக ஆசிரியர்கள் மாணவர்களது பாதுகாவலராக, நண்பராக, வழிகாட்டியாக, ஆலோசனை வழங்குபவராக , முகாமையாளராக, போதனையாளராக என தமது வகிபங்கை சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ப ஏற்றுச் செயற்படுகின்றனர்.

இன்றைய கற்றல்கற்பித்தல் செயன்முறையில் வினைத்திறன் என்பது முக்கியமானதாகும். எதிர்பார்க்கப்படும் இலக்கு எந்த அளவுக்கு எட்டப்படுகின்றது என்பதை விளக்குவதாக வினைத்திறன் அமைந்து காணப்படுகின்றது. இலக்கு எட்டப்படுவது தொடர்பில் ஆசிரியரது வகிபாகம் மிக முக்கியமானதாகும். கற்றல் கற்பித்தலை ஒரு விருப்புடன் கொண்டு செல்லும் ஆசிரியர்களாலேயே இலக்கு நோக்கிய நகர்வை மேற்கொள்ள முடியும்.

ஆசிரியர்களானவர்கள் மாணவர்களுக்குச் சரியான உலகப்போக்கைக் காட்ட வேண்டியவர்களாயுள்ளனர். அவர்களது உள்ளார்ந்த திறன்களூடாக சரியான மாற்றங்களை ஏற்படுத்த வேண்டியவர்களாயுள்ளனர். ஆசிரியர்கள் அறிவை மட்டும் கடத்தாது பரந்த உலகில் அவர்களது நிலையை உள்ளீடு செய்து உணர்த்துபவர்களாகவும் காணப்பட வேண்டும். இன்று அறிவுமையச் சமூகம் என்பது முக்கியத்துவமுடையதாக மாறியுள்ளது. எனவே இதற்கேற்பவும் ஆசிரியர் தம்மை மாற்றுவதுடன் மாணவர் களையும் மாற்றத்துக்கு உட்படுத்தி சீரழிவற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டும்.

கல்வி தொடர்பாக சமூகத்தில் ஏற்பட்டுள்ள விழிப்புணர்வுக்கு எதிர்மாறான சமூகச் சூழல் சமகாலத்தில் காணப்படுகின்ற வேளையில், கல்வி அமைப்பின் நோக்கமான இலங்கை நாட்டின் அடையாளத்தின் பங்காளர்களாக திறமை மிக்க பிரசைகள் மூலம் சர்வதேச சமூகத்தின் வெற்றியை நோக்கிய இலக்கை எட்டுவதற்கு ஆசிரியர்கள் படும் பாடோ பெரும்பாடாகும். இருப்பினும் மாணவர்களிடம் காணப்படும் குறைகள், பலவீனங்கள் களையப்பட்டுக் கல்வியின் இலக்கு அடையப்பட ஆசிரியர்கள் பெரும் பங்காற்றுகின்றனர்.

ஆசிரியரானவர் தொழில்சார் செயற்பாடுகளுடன் சமூகத்தின் எதிர்பார்ப்புக்களுக்கும் ஏற்ற வகையில் செயலாற்ற முன்வருதல் அவசியமாகும். பூரண மனிதனை உருவாக்குவதற்கு அவசியமான சமநிலை ஆளுமை வளர்ச்சியுடன், சமூக அபிவிருத்தியின் அடையாளமாகவும்விளங்கக்கூடிய சமூகமொன்றைஉருவாக்கவழிகாட்டல்கள்,ஆலோசனைகளை வழங்குவதுடன், தானும் அதற்கு முன்மாதிரியான நடத்தைப் பாங்கை கொண்டவராகவும் விளங்க வேண்டும்.

ஆசிரியத்துவமானது, பல கற்பித்தல் உத்திகளை உள்ளடக்கியதாகும். அதில் முக்கியமானது மாணவர்களது நடத்தையை முகாமை செய்வதாகும். பொருத்தமான கற்றல் சூழலை உருவாக்குதல், மாணவர் நடத்தை தொடர்பாக உயர் எதிர்பார்க்கைகளைப் பெற்றுக் கொடுத்தல், பெற்றோரது ஈடுபாட்டை பாடசாலையின் வகுப்பறை மட்டம்வரை நகர்த்துதல் என்பன வினைதிறன்மிக்க கற்றல் கற்பித்தலுக்கு மிகவும் அவசியமானதாகும். 21ஆம் நூற்றாண்டின் வேலை உலகுக்குப் பொருத்தமான சமூக அங்கத்தவர்கள் ஆசிரியர்களால் உருவாக்கப்பட வேண்டுமானால், முன்னைய திறன்கள், செயற்பாடுகளுக்கு அப்பாற்பட்ட செயல் ஒழுங்குகளைக் கற்றல் கற்பித்தலில் பின்பற்ற வேண்டியது அவசியமாகும். அதன் மூலமே ஆரோக்கியமான உயர் வெளியீட்டுத்திறன் கொண்ட தொழில் நுட்பத் திறனுடைய பிரசைகளை உருவாக்கி சமூகத்துக்கு வழங்க முடியும்.

கட்டாயத்தால் எதனையும் நிரந்தரமாகச் சாதித்து விடமுடியாது. விருப்புடன் முயல்வதுதான், வெற்றியை ஈட்டித்தரும். ஈடுபாட்டுடனும் உற்சாகத்துடனும் படிக்க வேண்டும். அதுதான் கற்றல் முறையாகும். கற்றலுக்கு குடும்பப் பின்னணி கற்றல் சூழலைக் கொண்டதாகக் காணப்பட வேண்டும். இவை மாணவர்களிடத்து சாதகமாக இருப்பின் பெர்னாட்ஷா என்பவர் கூறிய மனித குலம் உய்வதற்கான ஒரே நம்பிக்கை ஆசிரியர் பணியில்தான் அடங்கியிருக்கிறது என்ற வார்த்தை பொய்த்துவிடாது.

"அறிவை வளர்க்கும் ஆசானை
அகத்தில் இருத்தி வாழ்த்துவோமே!"

# ஆசிரியர் தினம் கொண்டாடப்படுவதன் நோக்கம்

செ.செல்வதாசன்

> “நல்ல ஓர் ஆசிரியருக்கு ஈடாக எதுவுமேயில்லை. அவர்களுக்கு ஆதரவாக இருப்பதைவிட முக்கியமானது வேறு எதுவும் இல்லை என யுனெஸ்கோ பொதுப் பணிப்பாளர் இறினா பொகோவா கூறியவை இன்றைய நாளில் மனதிற் கொள்ளப்பட வேண்டும்.




1994 ஒக்ரோபர் 5 ஆம் திகதியிலிருந்து ஆண்டுதோறும், உலகம் பூராகவும் சர்வதேச ஆசிரியர் நாள் கொண்டாடப்படுகிறது. இத்தகைய நாளை யுனெஸ்கோ உருவாக்கியதன் நோக்கம், ஆசிரியர்களுக்கு ஆதரவு திரட்ட தயார்ப்படுத்தலும், எதிர்கால சந்ததியினரின் தேவையறிந்து தொடர்ந்தும் ஆசிரியர்கள் பணியாற்றத்தக்கவாறு ஒன்றிணைத்தலும் ஆகும். நிலைபேண்தகு சமூகங்களைக் கட்டமைப்பதற்கு, ஆசிரியர்களை வலுவூட் டுதல் என்பது, 2015 ஆம் ஆண்டுக்கான ஆசி ரிய தின சுலோகம் ஆகும். இந்தியாவிலும் ஆசிரியர்களைக் கௌரவிப்பதற்காக ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகின்றது. ஆனால் அங்கு செப்ரெம்பர் மாதம் 5 ஆம் திகதியே கொண்டாடப்ப்டுகிறது. இந்த நாள், இந்தியாவின் இரண்டாவது ஜனாதிபதி சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் அவர்களது பிறந்த நாளாகும். கலாநிதி இராதாகிருஷ்ணன் ஒரு தத்துவவாதி. அத்துடன் ஓர் ஒப்பற்ற ஆசிரியருமாவார். அவரது மாணவர்களும் நண்பர்களும் அவரை அணுகி, அவரது பிறந்தநாளைக் கொண்டாட அனுமதி கோரினர். அந்த நாளை மாணவர்கள் தமது ஆசிரியர்களை மெச்சும் ஒரு நாளாகக் கொண்டாட வேண்டும் என்று அவர்களிடம் இராதாகிருஷ்ணன் கேட்டுக் கொண்டார். அதிலிருந்து இந்தியாவில்செப்ரெம்பர் மாதம் ஐந்தாம் திகதியே ஆசிரியர் நாளாகக் கொண்டாடப்படுகிறது. உலகின் பல நாடுகளிலும் சமூக மேம்பாட்டுக்கு உழைக்கும் ஆசிரியர்களைக் கௌரவப்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் ஆசிரியர் நாளான, ஒக்ரோபர் மாதம் ஐந்தாம் திகதி அல்லது அதன் முன்பின்னான நாள்களில், ஏற்பாடு செய்யப்படுகின்றன. ஆசிரியர் சங்கங்கள் போன்றவை இத்தகைய நாளில் ஆசிரியர்களை மேன்மைப்படுத்தும் நிகழ்வுகளை தத்தமது நாடுகளில் ஒழுங்கமைப்பது வழமையாகும். பிள்ளைகளது பல்வேறு இயலுமைகளுக்கமைய, நாளைய தீர்வுகளைப் பெறுவதற்கான புதிய பாதைகளை, புலக்காட்சிகளை பிள்ளைகளிடையே ஆசிரியர்கள் ஏற்படுத்துகின்றனர். நல்ல ஓர் ஆசிரியருக்கு ஈடாக எதுவுமேயில்லை. அவர்களுக்கு ஆதரவாக இருப்பதை விட முக்கியமானது வேறு எதுவும் இல்லை என யுனெஸ்கோ பொதுப் பணிப்பாளர் இறினா பொகோவா கூறியவை [illegible] கொள்ளப்பட [illegible] பிரதேசங்களிலும், பெற்றோர், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள், நலன் [illegible] ற்றும் பாடசாலைச் சமூகம் ஒன்றிணைந்து ஆசிரியர் நாளைக் கொண்டாடுகின்றனர். பழைய மாணவர்கள் தம்மை வளப்படுத்திய ஆசிரியர்களை மறக்காது இந்த நாளில் தமது ஆசிரியர்களுக்கு வாழ்த்துக்கள் தெரிவிப்பது வழமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடேசு தயாளன்
அதிபர், கொழும்புத்துறை,
துரையப்பா வித்தியாலயம்.

# கல்வி சார் விருத்திச் செயன்முறையில்

# ஆசிரியர் வகிபாகம்



மனிதனது அறிவுக்கும் இயலுமைக்கும் அமைய பல்வேறு வாண்மைப் பதவிகளில் மனிதர்கள் அமர முடியும். எந்தவொரு மனிதரும் தனக்குப் பொருத்தமான வாண்மைத்துவத்தில் தன்னை இணைத்துக் கொள்ள முடியும். இது அவரது நுண்ணறிவுத் திறனிலும், உளத்திறனிலும் தங்கியுள்ளது. ஒவ்வொரு வாண்மைத்துவமும் மனித அபிவிருத்திச் செயன்முறை தொடர்பில் சமபங்குடையது. எனினும் ஆசிரிய வாண்மைத்துவமானது, ஒரு மனிதனது எதிர்கால சுபீட்சத்துக்கு வழியமைத்துக் கொடுக்குமோர் பெருந்துறையாகும். ஆசிரியர் இல்லாத நிலையில் எந்தவோர் அபிவிருத்தியும் சாத்தியமற்றதாகும். அனைத்து விஞ்ஞான அறிவும், கலைத்திறன்களும், கைப்பணிகளும், கலாசார நாகரிக பண்புகளின் திறன்களின் விருத்தியும் ஆசிரியரது கற்பித்தலின் விளைவே ஆகும். இதன் காரணமாகவே கற்பித்தல் ஓர் உன்னதபணியாகக் கொள்ளப்படுகின்றது.

கற்பித்தல் வாண்மைத்துவமானது, உயர் தைரியத்துடனும் ஒழுக்கவியல் பலத்துடனும் தொடர்புபட்டது. ஏனெனில் இது பணம் சார் நலன்கள் என்பதற்கு அப்பால், கண்ணியம் மற்றும் மதிப்பாண்மையுடனும் சார்ந்ததாகும். இதனாலேயே கற்பித்தல் ஆனது மேன்மையானதாகவும் மதிப்பார்ந்ததாகவும் உள்ளது.

ஆசிரியரானவர் அறிவின் மூலமாகவும், மனிதர்களுக்கு ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் வழங்குபவராகவும் உள்ளார். கற்பித்தல் ஆனது உள்ளார்ந்த இயல்புகளை மேலெழச் செய்வதற்கு துணைபுரிவதாக உள்ளது. ஒருவரது வகிபாக இயல்பைக் கட்டியெழுப்புவதாக கற்பித்தல் உள்ளது. இது ஆளுமைத்திறனை விருத்தி செய்வதோடு அறிவின் தேடலுக்குமான உந்துதலையும் வழங்குவதாக உள்ளது. எது உண்மை? எது நல்லது? எது அழகுடையது? என்பதை ஒருவருக்கு உணர்த்தும் இயல்புடையது. ஆசிரியரது கற்பித்தலின் துணையுடன் ஒருவர் வெற்றி அடையும் இயல்பு நிலைக்குச் செல்கின்றார்.

ஆசிரியர் ஆனவர், தேசத்தின் வடிவமைப்பாளராக விளங்குகின்றார். ஒரு நாட்டின் அபிவிருத்தியானது திறன்விருத்தி சார்ந்தோரினாலே சாத்தியமானதாகும். அத்தகைய திறன்மிக்க சமூகக் கட்டமைப்பை உருவாக்குவதில் ஆசிரியரானவர்கள் முக்கியமான பங்காற்றுகின்றார்கள். ஆசிரியரது அர்ப்பணிப்பும் அதீத ஈடுபாடும் தேசத்தின் அறிவு விருத்தியை விருத்தியடையச் செய்கிறது.

கல்வியில் தரம் என்பது முதன்மைப்படுத்தப்படும்போது அதன் நிலைபேற்றுக்காகப் பங்காற்ற வேண்டுமாயின் ஆசிரியரானவர் வாண்மைத்தகுதி உடையவராக இருக்க வேண்டியது அவசியமானதாகும். கல்விச் செயன்முறையில் ஆசிரியர் ஒரு பிரதானமான பாத்திரமாக விளங்குகின்றார். ஆசிரியர் இன்றிய கல்விச் செயன்முறையை எண்ணிப் பார்க்க முடியாது. ஏனெனில் கல்விச் செயன்முறையானது ஆசிரியருடன் பின்னிப் பிணைந்தது ஆகும். கல்விச் செயன்முறையின் வெற்றியும் தோல்வியும் ஆசிரியரது செயலாற்றத்திலேயே தங்கியுள்ளது. ஆசிரியர் ஆனவர், பிள்ளைகளது, சமூகத்தினரது அடிப்படையான தேவைகள் பற்றி அறிந்தவராய் உள்ளார். ஆசிரியரது உளவியல் அறிவானது பிள்ளையினதும் சமூகத்தினரதும் தேவைப்பாடுகளையும் எதிர்பார்க்கைகளையும் புரிய வைப்பதன் ஊடாக சிறப்பான சமூக வழிகாட்டலை மேற்கொள்ள அவருக்கும் உதவுவதாய் உள்ளது. ஆசியரது ஒழுக்கவியல், கலாசாரம் சார் அறிவானது நாட்டுக்குப் பொருத்தமான பிரசைகளை உருவாக்குவதாய் உள்ளது.

ஆசிரியரது ஈடுபாட்டுடன் கூடிய பங்குபற்றலானது, கலைத்திட்ட நடைமுறைச் செயன்முறையின் இன்றியமையாத கூறாகவுள்ளது. இங்கு கலைத்திட்ட வடிவமைப்புச் செயன்முறையில் ஆசிரியர் பங்குகொள்ளாமை ஆனது கலைத்திட்ட நடைமுறை தொடர்பில் இடர்பாடுகளை எதிர்நோக்க வழிசமைப்பதாக உள்ளது. கல்விச் செயன்முறை சிறப்பான விருத்தியை அடைய வேண்டுமாயின் கலைத்திட்ட வடிவமைப்புக்களில் ஆசிரியர்களும் உள்ளீர்க்கப்பட வேண்டும் என்ற கருத்து வலுத்து வரும் நிலையில், அத்தகைய வடிவமைப்புச் செயன்முறையில் ஓர் உயிர்த்துடிப்புள்ள பங்காளராகச் செயற்படக்கூடிய தகுதி நிலைக்கு ஆசிரியர் தன்னைத் தயார்ப்படுத்திக்கொள்ளுதல் அவசியமானதாகும்.

வினைத்திறன்மிக்க ஆசிரியரது செயலொழுங்கில் பல்வேறு வகிபாகங்கள் உள்ளன. அவையாவன: தரம், தந்திரோபாயம், நடிபங்கு என்பனவாகும். விளைதிறன் மிக்க வகுப்பறைச் செயன்முறைக்கு ஆசிரியரானவர் நடத்தை முகாமைத்துவ தந்திரோபாயங்கள் தெரிந்தவராக விளங்குதல் அவசியமானதாகும். தனக்குக் குறித்து ஒதுக்கப்பட்ட கால வரையறையில் கற்பித்தல் செயன்முறையை வெற்றிகரமான வகையில், சுமுகமான முறையில் நகர்த்திச் செல்லவேண்டுமாயின், இந்தத் திறன் ஆசிரியர்களுக்கு அவசியமானதாகும். ஆசிரியர்களது வகிபாகம் ஆனது வகுப்பறைக்கு வெளியிலும் பரந்து விரிந்து செல்வதாக இருக்க வேண்டும். சிறந்த ஆசிரியர் என இனங்காணப்படுபவர் மாணவர்கள் சிறந்த அடைவைப் பெறுவதற்கு முன்தள்ளுபவராகவும் அதற்கான உந்துதலை வழங்குபவராகவும் ஆக்க மலர்ச்சியைத் தூண்டக் கூடியவராகவும் செயற்படுவார்.

ஆசிரியரானவர் எதிர்காலச் சமூக உறுப்பினர்களது நடத்தைச் செயன்முறை, பொருளாதார அணுகுமுறைகள்,அரசியல் எண்ணப்பாடுகள் தொடர்பில் வகை கூறவேண்டியவராக உள்ளார். நல்லாசிரியர் ஆனவர், ஒரு பிள்ளையின் வளர்ச்சிச் செயன்முறையை வளம் படுத்துவதில் பெற்றோரிலும் பார்க்க முதன்மையான இடத்தைப் பெறுபவர்களாக விளங்குகின்றார். நல்ல ஆசிரியரது சரியான வழிகாட்டுதல்கள், ஆதரவுகளின் ஊடாக பிள்ளையின் இலக்குகள் அடையப்படுகின்றன. வெற்றியடைந்த ஒவ்வொருவரதும் பின்னாலும் ஆசிரியரது கட்டமைப்பு ரீதியான வழிகாட்டல்கள் எப்போதும் இருப்பதை அவதானிக்கலாம்.

ஆசிரியரது பண்பார்ந்த விருத்தி நிலையானது, பிள்ளையின் அடைவு நிலையில் செல்வாக்குச் செலுத்துவதாக உள்ளது. சிறந்த தரநிலையை உடைய ஆசிரியரது வசதி செய்யும் வகிபாகமானது பிள்ளையின் அடைவு நிலையில் சிறப்பான வெளியீட்டைப் பெற்றுத்தருவதாக இருக்கும். சிறந்த ஆசிரியரது வகிபாகமானது பின்வரும் நான்கு பரிமாணங்களைக் கொண்டதாகக் காணப்படுகின்றது.

1. அறிவின் உள்ளடக்கம்.
2. கற்பித்தல் அனுபவம்.
3. வாண்மைத்துவ விருத்தி நிலைகள்.
4. முழுமையான கல்விசார் இயலுமைகள்.

ஆசிரியரது அறிவின் உள்ளடக்கமானது மாணவரது செயற்றிறனில் தாக்கம் செலுத்துவதாக அமைந்திருக்கும். உன்னத திறன் கொண்ட ஆசிரியரது வகுப்பறை ஆனது அனைத்து மாணவர்களும் அடைவை எட்டக்கூடியவர்கள் என்ற அடிப்படையில் செயற்படுவதாக இருக்கும். உன்னதமான ஆசிரியரானவர், தெளிவானதும் எழுத்து வடிவிலான இலக்குகளைக் கொண்டவராகவும் விளங்குவார். விளைதிறனான ஆசிரியரானவர், மாணவர்கள் எதனைக் கற்க வேண்டும் என்பது தொடர்பான திட்டங்களைக் கொண்ட பாடத்திட்டத்தை கொண்டவராக விளங்குவார். அவரால் திட்டமிட்ட அடிப்படையில் வழங்கப்படும் செயற்பாடுகளில் பொருத்தமான ஒப்படைக்கான வாய்ப்புக்களும் வழங்கப்படும் என்பதோடு, திறன்களுக்கான பயிற்சிகளும் வழங்கப்படும். மேலும் ஆசிரியரானவர் நேரகாலத்துடன் வகுப்பறையில் பிரசன்னமாகி இருப்பார் என்பதோடு திட்டமிடப்பட்டதும் தெளிவானதும் கட்டமைக்கப்பட்ட வகையிலும் பாடங்களை முன்னகர்த்திச் செல்வார்.

உன்னதமான ஆசிரியரானவர், கனிவுடையவராகவும் விளங்குவார். மாணவர்கள், பெற்றோர், சகபாடிகள் அனைவரும் அவரது செயற்பாட்டினால் கவரப்படுவார்கள். இவரது முன்மாதிரியான செயற்பாடுகளால் ஏனையவர்களும் இவருடன் நெருங்கிய தொடர்புகளைப் பேண முன்வருவர். ஆசிரியரானவர் தன்னைப்போல் மற்றவர்களையும் நோக்கும் மனப்பாங்கு உடையவராக விளங்குவார். அவரது தீர்மானங்களிலும், செயற்பாடுகளிலும் ஏனையவர்களது நடத்தைகள் கருத்தில் கொள்ளப்படுவதாய் இருக்கும். பிள்ளையின் கற்றலை வளர்த்தெடுப்பதற்கான பொறுப்புக்கூறலை ஆசிரியர் தன்னகத்தே கொண்டவராகச் செயற்படும் நிலையில், அவரது வாண்மைத்துவமானது வலிமை உடையதாக மாற்ற மடைகின்றது.

ஆசிரியர் ஆனவர் உளவியல், தத்துவவியல், சமூகவியல் அறிவுடையவராகவும் நோக்கத்தை வடிவமைப்பவராகவும், கலைத்திட்ட இயக்குநராகவும் செயற்படக் கூடிய பல்திறனுடையவராக விளங்க வேண்டியது அவசியமானது ஆகும். இத்தகைய செயல்முறைகளுக்காக வாழ்க்கை நீடித்த கல்வி கற்றலுக்காக கற்றல் போன்ற எண்ணக்கருக்கள் தொடர்பில் கூடிய பார்வைப் புலத்தைச் செலுத்த வேண்டியது இன்றியமையாததாகும். தொடர்பாடல் திறன் ஆளிடைத்திறன் விருத்தியில் கூடிய கவனத்தைச் செலுத்துவதோடு கலைத்திட்ட அதிர்வுகளில் இருந்து தன்னை மீட்கக் கூடிய திறனையும் வளர்த்துக் கொள்ளல் அவசியமானதாகும்.

கற்பித்தலானது குறித்தொதுக்கப்பட்ட வகையான அறிவை மாணவர்களுக்கு வழங்கும் செயல்முறையாகும். தனக்குத் தேவையான கற்றல் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய வகையிலான விருப்பைத் தூண்டும் செயல்முறையாகவும் உள்ளது. இதனை மேற்கொள்ளவதற்கான கற்றல் மூலங்களையும் கற்றல் முன்னுரிமைகளையும் அறிந்தவராக ஆசிரியர் விளங்குவார். மாணவர்களது சுயமான கற்றலுக்கு அவசியமான மனநிலையைத் தோற்றுவிக்கக்கூடிய வகையிலான நேரான மனப்பாங்குகளை ஆசிரியர் கொண்டிருத்தல் அவசியமானதாகும். ஆசிரியர் ஒரு வசதி செய்பவராக, வளவாளராக விளங்குதல் இன்றிமையாததாகும். வினைத்திறன் கொண்ட சிறந்த இயலுமையைக் கொண்ட ஆசிரியரானவர், சிறந்த வகுப்பறை முகாமைத்துவ இயல்புகளைக் கொண்டவராக விளங்குவார். ஆசிரியர் ஒரு சிறந்த வகுப்பறை முகாமையாளர் என்ற நிலையில் நோக்கும்போது, அவர் ஒரு சிறந்த பயிற்றுவிப்பாளராக, சிறந்த வலுவூட்டலை மேற்கொள்ளக்கூடியவராக, ஆர்வங்களைத் தூண்டிக்கொள்ளக்கூடியவராக, சிறந்த தொடர்பாடல் திறன் கொண்டவராக, தொழிலுக்கு வழிகாட்டுபவராக, சிறந்த தந்திரோபாயம் உடையவராக, நோக்கத்தைத் தெளிவாக உணர்ந்தவராக, மாணவர்களை வழிநடத்தக்கூடிய ஆற்றல் உடையவராகவும் விளங்குதல் வேண்டும். இதன் மூலமே தரமான கல்வி என்ற இலக்கு எட்டப்படும்.

இயங்கியல் ரீதியான தரமான கல்வியானது தரமான வெளியீட்டுக்கு வழிவகுக்கும். ஆதலால் ஆசிரியர் ஆனவர்கள் வாண்மைத்துவத் தகுதி மிக்கவர்களாகத் தம்மை மாற்றியமைத்துக் கொண்டு புதிய செயலொழுங்கில் பயணிப்பதானது காலத்தின் கட்டாயமாக மாறியுள்ளமை நோக்கத்தக்கது.

**ஆசிரியர் ஆனவர் தேசத்தின் வடிவமைப்பாளராக விளங்குகின்றார். ஒரு நாட்டின் அபிவிருத்தியானது திறன்விருத்தி சார்ந்தோரினாலே சாத்தியமானதாகும். அத்தகைய திறன் மிக்க சமூகக் கட்டமைப்பை உருவாக்குவதில் ஆசிரியரான வர்கள் முக்கியமான பங்காற்றுகின்றார்கள். ஆசிரியரது அர்ப்பணிப்பும் அதீத ஈடுபாடும் தேசத்தின் அறிவு விருத்தியை விருத்தியடையச் செய்கிறது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021-492 7474, 021-492 7475, 021-567 9933, 021-567 9944
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சமத்துவ சமுதாயத்தை நோக்கிய செயற்பாட்டை இன்றே தொடங்குக

ஏழ்மையை ஒழிப்பது, சமத்துவமின்மை மற்றும் அநீதிக்கு எதிராகப் போராடுவது, பூமி வெப்பமடைவதைக் கூடிய அளவில் குறைக்க முயல்வது போன்ற முக்கிய குறிக்கோள்களைக் கொண்ட ஒரு நிகழ்ச்சித் திட்டம் கடந்த மாதம் 25ஆம் திகதி ஐ.நாவில் நடைபெற்ற உலகத் தலைவர்களின் நிலையான அபிவிருத்திக்கான உச்சிமாநாட்டில் அங்கீகரிக்கப்பட்டது. 2030 ஆம் ஆண்டளவில் நிறைவேற்றப்பட வேண்டியவையாக இந்தத் திட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள 17 குறிக்கோள்கள் அடங்கியுள்ளன.

நிலையான அபிவிருத்திக்கான உச்சி மாநாட்டில் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பேசுகையில், இலங்கை அரசு, 2015 ஆம் ஆண்டுக்குப் பிறகு நிறைவேற்றுவதற்கான இந்த நிகழ்ச்சித் திட்டத்தை முழுமையாக ஆதரிப்பதாகத் தெரிவித்தார்.

21 ஆம் நூற்றாண்டில் முகிழ்த்துவரும் ஒரு பொருளாதார முன்னோடி நாகரிகம் என்ற முறையில் இலங்கை அர்ப்பணிப்போடு இதில் செயற்படும் என்று அவர் அறிவித்தார். இந்தக் குறிக்கோள்களை 2030 ஆம் ஆண்டளவில் முழுமையாகச் செயற்படுத்திவிட தாங்கள் எதிர் பார்ப்பதாகவும் ஜனாதிபதி சிறிசேன உறுதியளித்தார்.

நிலையான அபிவிருத்தி, சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தி, சுற்றாடல் பாதுகாப்புக் கிடையிலான சமத்துவத்தை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்று குறிப்பிட்ட அவர், அந்தத் திசையில் மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொண்டு, ஏழ்மை மற்றும் எல்லா விதமான பாகுபாடுகள், சமத்துவமின்மை, முதலியவற்றை முன்னேற்றகரமாக இல்லாமல் செய்வோம். அதன் வழியில் சமூக நீதி, மனிதப் பாதுகாப்பு என்பவற்றின் அடிப்படையில் ஒரு சமுதாயத்தைக் கட்டியெழுப்புவோம் என்றும் அவர் மேலும் கூறினார்.

போர் முடிவுற்று 6 ஆண்டுகளுக்கு மேலாகியும், இந்த நாட்டில் போர் ஏற்பட்டதற்கான காரணம் இன்னமும் முறையாகக் கண்டறியப்படவில்லை. போரின் இறுதியில் நடந்த அட்டூழியங்கள் குறித்தே ஐ.நா. மனித உரிமைகள் சபை பேசுகின்றது. பேரவையில் நிறை வேற்றப்பட்ட தீர்மானமும் அதனையே வலியுறுத்துகிறது. அந்தத் தீர்மானத்தின் வடிவத்தில் காணப்படும் விடயங்கள் குறித்து இப்போது நாட்டில் பெரும் எடுப்பில் எதிர்த்தரப்பினர் போர்க்கொடி உயர்த்தத் தொடங்கி விட்டார்கள்.

தீர்மானம் நிர்ணயிப்பது போன்ற நீதிமன்றங்களை அமைப்பதற்கு நாடாளுமன்ற அங்கீகாரம் தேவை என்போரும், அரசமைப்பில் திருத்தம் தேவை என்போரும், வெளிநாட்டு நீதிபதிகளுடன் நீதிமன்றம் அமைப்பதை உயிரைக் கொடுத்தேனும் நிறுத்துவோம் என்போரும் பெரும் சவாலாக எழுந்துள்ளனர். அந்த விவகாரத்தை முன்வைத்து உண்ணாவிரதம் இருக்கப்போவதாகவும்கூடச் சிலர் அறிவிப்புக்கள் விடுத்துள்ளார்கள்.

இந்த நிலையில், எந்தவகை சார்ந்த நீதிமன்றம் அமைக்கப்படவுள்ளது, எவ்வாறு இந்தச் சவாலை மைத்திரிபால சிறிசேன அரசு எதிர்கொண்டு வெற்றிகொள்ளப்போகின்றது என்பதைச் சர்வதேசம் ஆவலுடன் பார்த்துக் கொண்டிருக்கிறது.

இத்தகைய ஒரு நிலைமையிலேயே, ஜனாதிபதி நாட்டில் பாகுபாடற்ற சமத்துவ சமுதாயம் ஒன்றை அமைக்கப்போவதாக ஐ.நாவில் உலகத் தலைவர்களுக்கு வாக்குறுதியளித்துவிட்டு வந்துள்ளார். நிலையான அபிவிருத்திக்கான உலகத் தலைவர்கள் மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள, 2015 ஆம் ஆண்டுக்குப் பிறகான உலகநாடுகளின் குறிக்கோளை எட்டும் வகையில் ஜனாதிபதி செயற்படுவதானால் முதலில் இப்போது நாட்டில் தோன்றியுள்ள சிக்கலை தீர்த்துக்கொள்வதற்கான செயற்பாட்டில் தீவிரமாக இறங்க வேண்டிய கட்டாயத் தேவை உள்ளது. சமூகங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை விரைவாக ஏற்படுத்துவதில் காட்டும் செயற்பாட்டில் மட்டுமே குறிக்கோள்களை எட்டும் முயற்சி வெளிப்படும்.

போர்க்குற்ற விசாரணைகள் ஆரம்பிக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் நடைபெறும் அதேவேளை, அதனுடன் தொடர்புடைய எத்தனையோ விடயங்கள் முன்னகர்த்தப்படலாம். குறிப்பாக அரசியல் கைதிகள் விவகாரம், காணிகளை விடுவித்தல், மீள்குடியமர்வு மற்றும் இராணுவப் பிரசன்னத்தைக் குறைத்தல் தொடர்பான செயற்பாடுகள் வெளிப்படையாக ஆரம்பிக்கப்பட்டால் மட்டுமே ஏனையவை நடக்கும் என்ற நம்பிக்கை ஏற்படும். எதிர்பார்க்கலாமா?

# தமிழரின் பரிதாப நிலைக்கு முக்கிய காரணம் இந்தியா



■ வந்தியத்தேவர்

> தமிழர்களின் இன்றைய பரிதாப நிலைக்கு முக்கிய காரணம் இந்தியாவின் பிள்ளையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டும் தந்திரம் தான். அமெரிக்கத் தீர்மானம் என்ற தொட்டிலையும் ஆட்டிக்கொண்டு ஜனாதிபதி மைத்திரியையும் கிள்ளி விடுகிறார் இந்தியப் பிரதமர் மோடி.

போர் தொடர்பில் உண்மைகள் கண்டறியப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். அதற்கு உத்தரவாத மளிக்கும் நிலையில் சகல நடவடிக்கைகளும் கையாளப்படவேண்டும் என்பதாலேயே, இது விடயத்தில் தமிழ் மக்களின் கோரிக்கையும், எதிர்பார்ப்பும் சர்வதேச விசாரணையாக உள்ளது. ஆனால் உள்ளக விசாரணை ஒன்றின் மூலமே போர்க்குற்றம் குறித்த விசாரணை இடம்பெற வேண்டும் என்பதையே சிங்கள அரசும் அதன் தலைவர்களும் விரும்புவதுடன், அதற்கான காய் நகர்த்தல்களிலும் முனைப்புடனே உள்ளனர். நல்லாட்சி, ஒற்றுமை என்று சொல்லிக் கொண்டிருக்கும் ஜனாதிபதியும் சரி, பிரதமரும் சரி உள்ளக விசாரணைக்காக எந்த விட்டுக் கொடுப்பையும் கூட ஏற்கத் தயாரான நிலையிலேயே உள்ளனர்.

சர்வதேச விசாரணைகளில் இருந்து தப்பிக்கப் பார்ப்பது, படையினரையும் நாட்டையும் காப்பாற்றவே ஒழிய, மகிந்தவைக் காப்பாற்ற அல்ல என்பது அமைச்சர் சம்பிக்க ரணவக்கவின் கருத்து. படையினரைக் காப்பாற்ற என்பது அவர்கள் இழைத்த குற்றங்களில் இருந்து அவர்களைத் தப்பிக்கச் செய்வதான ஒரு முயற்சியே என்று கருத முடியும். இதன்மூலம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த மட்டுமல்ல, கோத்தபாய ராஜபக்ச உட்பட சம்பந்தப்பட்ட அனைவருமே காப்பாற்றப்பட வழியுண்டு.


போரின்போது நீதிக்கான பல செயற்பாடுகள் மறைக்கப்பட்டிருந்தன. விடுதலைப் புலிகளை அழிக்கவென பயங்கரவாதத்தைக் கையிலெடுத்த அரசு மேற்கொண்ட மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான நடவடிக் கைகள் பல மறைக்கப்பட்ட உண்மைகள். அவை உலகம் அறியாததல்ல. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தின் தீர்மானங்கள் கடுமையானதாக இருந்தபோதும், இலங்கையின் முயற்சியால் அவை காரம் குறைய அமெரிக்கா முதன்முறை எடுத்த நடவடிக்கையுடன் தீர்மானங்கள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்பட்டதெனினும் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரின் பிரயத்தனத்தால் மீண்டும் அதன் காரம் குறைக்கப்பட்டுள்ளது. கலப்பு நீதிமன்றம் கூடத்தேவை இல்லை என்ற நிலைக்கு மனித உரிமை [illegible] அதற்குப் பதிலாக உள்நாட்டுப் பொறிமுறையின் கீழ் விசாரணை நடத்தப்படுவதற்கு அமெரிக்கா இணங்கியுள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தீர்மானம் கடுமையாக அமையாது என நம்பிக்கை தெரிவிக்கும் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, மகிந்த ஆட்சியில் தவறுகள் இடம் பெற்றதை ஒப்புக்கொண்டபோதும் தேசியப் பாதுகாப்பில் அக்கறைப்பட்டிருந்தோம் என்கிறார். நீதி கேட்டுப் போராடும் குறித்த தொரு இன மக்களைக் கொன்றொழிப்பதுதான் தேசியப் பாதுகாப்பா? நல்லவேளை கன்றைக் கொன்றதற்காக நீதி கேட்ட பசுவையும் அந்த விலங்குகளின் இனத்தையும் தேசியப் பாதுகாப்புக்காக முழுமையாக அழிக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் ஒரு மன்னன் இங்கிருக்கவில்லை.

போர்க்குற்றம் தொடர்பான விசாரணை நடத்தக்கூடிய நீதிமன்றக் கட்டமைப்பு இலங்கையிடம் கிடையாது என்பது ஐ.நா.மனித உரிமைகள் சபை ஆணையாளர் சயிட் அல் ஹுசைனின் கருத்து. உள்நாட்டிலே நீதிமன்றங்கள் எவ்வாறு இயங்கிக் கொண்டன என்பதை அவர் நன்கு உணர்ந்தவராகவே காணப்படுகின்றார். சாதாரண விடயங்களிலேயே சரியான தீர்வுகள் எட்டப்படாத நிலையில் போர்க் குற்றங்களை விசாரிக்கக்கூடிய அளவுக்கு இங்குள்ள நீதி மன்றக் கட்டமைப்புக்கள் பொருத்தமானதாக இருக்காதென்பதே அவரது கருத்தாக இருக்கலாம். போர்க்குற்றங்களைப் பொறுத்தவரை சர்வதேச விசாரணைப் பொறிமுறை அவசியமானதே.

உள்நாட்டு விசாரணைகூட அவசியமில்லை என முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நினைக்கிறார் போலும். அதுவும் கூட இராணுவத்துக்கும் மகிந்தவுக்கும் ஆபத்தை உண்டுபண்ணுமாம். இராணுவம் போர்க்குற்றம் புரிந்தது என்பதை ஐ.நா. அறிக்கை கூறுகின்றது. எவரும் பொய்ச்சாட்சி சொன்னாலும் அதையும் ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கும், அது மகிந்தவுக்கு ஆபத்தானது என்கிறார் மகிந்தவுக்கு ஆதரவாகவும் பொய்ச்சாட்சிகள் சொல்ல முடியும் என்பதை மறந்து விட்டவுராக. முன்னைய ஜனாதிபதி சந்திரிகாவைத் தாக்கியதற்காகக் குற்றவாளிகள் எனக் காணப்பட்டு 300 வருடங்கள் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்திருந்தது கொழும்பு நீதிமன்றம். அதேசமயம் அரசியல் கைதிகளாகச் சிறைபிடிக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்படாத நிலையில் இன்னமும் சிறைக் கைதிகளாகவே உள்ளனர். 40 ஆயிரத்துக்கும் அதிகமான தமிழ் மக்களைக் கொன்றொழித்தவர்கள் குறித்து விசாரணையே அவசியமில்லை என்கிறார்கள்.

தமிழர்களின் இன்றைய பரிதாப நிலைக்கு முக்கிய காரணம் இந்தியாவின் பிள்ளையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டும் தந்திரம் தான். அமெ ரிக்கத் தீர்மானம் என்ற தொட்டிலையும் ஆட்டிக்கொண்டு ஜனாதிபதி மைத்திரியையும் கிள்ளி விடுகிறார் இந்தியப் பிரதமர் மோடி. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கவேண்டும் என அமெரிக்காவில் மைத்திரியிடம் பாசாங்கு



பண்ணிய மோடி, சர்வதேச விசாரணைக்கு தாம் எதிர் என்பதைத் திடப்படுத்தியுள்ளார். மோடி இந்தியப் பிரதமரானதும் பட்டாசு வெடிகளைக் கொளுத் தியவர்கள் இலங்கைத் தமிழர்கள் மட்டுமல்ல தமிழ் நாட்டு அரசியல்வாதிகளும் தான். தமிழர்களைக் கொன்ற இராணுவம் மற்றும் அதற்குப் பணித்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ஆகியோரைக் காப்பாற்ற எடுக்கும் நடவடிக்கைகள் தமிழருக்குக் கிடைக்க வேண்டிய நீதிக்குத் தடையானவையே. விசேட கலப்பு நீதிமன்றம் கட்டாயம் தேவை என்பதும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் கூற்று. அதையாவது அமையுங்கள் என்று இறங்கி வந்துள்ள தமிழ் மக்களுக்கு, விசாரணை அறிக்கையை மேலும் வலிமையற்றதாக்கித் தவறிழைக்கவேண்டாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்களுக்கு வழங்கும் ஊதியம்போல் பெண்களுக்கும் வழங்குவார்களா?

யாழ்.குடாநாட்டில் வேலையில்லா நிமித்தம் வர்த்தக நிலையங்கள், அழகு மாடங்கள், வீட்டு வேலைகள் போன்றவற்றில் பெண்கள் தொழில் புரிவது யாவரும் அறிந்ததே! இதில் மனதுக்கு வேதனை தரும் பெரும் விடயம், இந்தத் தொழில் நிறுவனங்களில் பெண்களுக்கு வழங்கப்படும் ஊதியம் ஆண்களை விட சரிபாதி குறைவு என்பதே. இவற்றைத் தட்டிக் கேட்டால் இருக்கும் வேலையும் பறிபோகும் என்பதால் அப்பாவிப் பெண்ணினம் வாய்மூடி மௌனிகளாய், கொடுக்கும் ஊதியத்தை பெறுவது வேதனையிலும் வேதனை. ஆனால் அரசசேவையில் கடமைபுரியும் பெண்கள், இதிலிருந்து விடுபட்டு ஆண்களுடன் சமமாக ஊதியம் பெறுவது வரவேற்கத்தக்கது. இதிலிருந்து பெண்ணினம் விடுதலைபெற புத்திஜீவிகள், சமூக ஆர்வலர்கள், நலன்விரும்பிகள் குரல்கொடுத்து பெண்ணினத்தின் (தனியார் நிலையங்களில்) ஊதியத்தை உயர்த்த நடவடிக்கை எடுத்து ஏழைப் பெண்களின் வாழ்வுக்கு வழி வகுக்க வேண்டும். எமது தாயகத்துப் பெண்கள் எத்தனையோ சவால்களை எதிர்கொண்டு செயற்பட்டுக் காட்டியவர்கள். போராட்டக் காலத்தில் கூட ஆண்களுக்கு சரிநிகராக போரிட்டு சாதனை புரிந்தவர்கள். இப்படிப்பட்ட பெண் ணினத்துக்கு ஆணினத்தின் ஊதியத்தைவிடக் குறைந்த ஊதியம் வழங்குவது கொடுமையிலும் கொடுமை. எனது அன்பிற்கினிய தொழிலதிபர்களே, ஒன்று சேர்ந்து பெண்ணினத்தின் ஊதியத்தைக் கூட்டிக் கொடுக்க குரல் கொடுத்து அவர்கள் வாழ்வு சிறக்க உதவுவீர் களாக!

**- மு.அருமைச்சந்திரன்,** வரணியூரான்.

## கண் தானம் செய்வோம் விழி இழந்தோருக்கு வழிகாட்டுவோம்


மனிதவாழ்வு நிச்சயமற்றது. இறப்பு உறுதியானது. மனிதனின் சாவு எங்கே, எப்படி, எந்த விதத்தில் வரும் என்பதை எவராலும் கூறமுடியாது. மனிதனுடன் சாவும் பின்தொடர்வதை எவரும் மறுக்க முடியாது. இப்படிப்பட்ட சாவின் பின்னர் எமது உடலில் விலை மதிக்க முடியாத உறுப்புக்கள் உள்ளதை மறந்து, மண்ணுக்கும் அக்கினிக்கும் தாரை வார்த்து விட்டு வருவது அனேகமாக நடைபெறுகிறது.

ஒருமனிதன், தான்உயிருடன்இருக்கும்போது செய்யமுடியாத அளப்பரிய சேவையைத் தனது இறப்பின் பின்பு செய்யலாம். உதாரணமாக:- விழி இழந்திருப்போருக்குத் தனது விழிகளைத் தானமாக வழங்கலாம். இதனால் இருட்டில் வாழும் ஒருவரை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்து வாழ வைக்கலாம். ஒரு மனிதன், தனது இறப்பின் பின்பு கண்தானம் செய்வதால் எந்த விதமான பாதிப்புக்களும் ஏற்படப் போவதில்லை. இப்படிப்பட்ட நல்ல விடயங்கள் மக்களை சென்றடைய மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். ஒருவர் இறந்தால் அவரது கண்ணைத் தானம் செய்ய விரும்பும் பட்சத்தில் அந்தப் பகுதி கிராம அலுவலர் ஊடாகவோ அல்லது அருகில் உள்ள மருத்துவமனையூடாகவோ உரிய தரப்பினருக்குத் தெரியப்படுத்தி கண்தானம் செய்ய உறவுகளே முன்வாருங்கள். ஐயம் புகினும் செய்வன செய் என்கிறார் - ஔவையார். அதற்கமைவாக நாம் உயிருடன் இருக்கும்போதுகூட, செய்யமுடியாத மிகப்பெரிய தானமான (சேவையாக) கண்தானம் செய்து இருட்டில் வாழும் எமது உறவுகளுக்கு ஒளியூட்டுவோம். அவர்கள் எமது இறப்பின் பின்னராவது வெளிச்சத்தில் வாழட்டும். சற்றுச் சிந்திப்போம். செயற்பட்டு விழிப்புணர்வை ஏற்படுத்துவோமாக!

**- அ.அன்பு** (கறுக்காய்)




### கேலிச் சித்திரம்



நன்றி: மவ்பிம

# நீதி மறுப்புக்கு இடமளியாதீர்

ஜெனிவாவில் கடந்த முதலாம் திகதி ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான தீர்மானம் தொடர்பாக மக்கள் பிரதிநிதிகளும் அதிகாரிகளும் முன்னுக்குப்பின் முரணாக வெளியிட்டு வருகின்ற கருத்துகள் மக்கள் மத்தியில் ஒருவித குழப்பநிலையை ஏற்படுத்தியிருக்கின்றது.

ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் சர்வதேச விசாரணையை வலியுறுத்தத் தவறிவிட்டது; குற்றமிழைத்தவர்கள் கையிலேயே விசாரணை நடத்தும் பொறிமுறையின் கடிவாளம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது; ஆகக்குறைந்தபட்சமாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் தனது வாய்மூல அறிக்கையில் குறிப்பிட்டிருந்த கலப்பு நீதிமன்றமாவது தீர்மானத்தில் உள்ளடக்கப்படவில்லை; தீர்மானத்திலுள்ள வாசகங்களின் காரம் போதாது போன்ற பல விடயங்கள் தொடர்பாகத் தமிழர் தரப்பினர் மத்தியில் அதிருப்தி நிலவுகின்றபோதும் நீதிக்கான தேடலில் முதற்படிக்கு களம் அமைத்துக் கொடுத்துள்ளதென்ற கருத்து பொதுவாக முன்வைக்கப்படுகின்றது.

கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன் இதனை ஆமோதிக்கும் வகையிலான கருத்தை வெளியிட்டிருந்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானமானது, சர்வதேச பங்களிப்புடனான விசாரணையையும், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வையும் வலியுறுத்தியிருப்பதனால் தமிழ் மக்கள் தமது இலக்கை அடைவதற்கு ஒரு வழி பிறந்திருப்பதாக அவர் குறிப்பிட்டிருந்தார் .

ஐ.நா. தீர்மானம் குறித்து பல்வேறு கருத்துகள் வெளியிடப்பட்டிருப்பதனால் ஒரு குழப்பமான நிலைமை ஏற்பட்டிருக்கின்றதே என்று செய்தியாளர்கள் அவரிடம் கேட்டபோது, எந்தவிதமான குழப்பத்திற்கும் ஆளாக வேண்டியதில்லை என்று அவர் கூறியிருக்கின்றார்.

ஆனால், தென்பகுதியைச் சேர்ந்த ஆங்கில மற்றும் சிங்கள ஊடகங்களோ ஜெனிவாத் தீர்மானத் தின் மூலமாக இலங்கை சர்வதேசத்தின் முன்பாக அடிபணியவைக்கப்பட்டுவிட்டதென்றும், முழுமையான போர்க்குற்ற விசாரணை மூலமாக படையினரைத் தண்டிப்பதற்கான சுய ஒப்புதல் சாசனம் எழுதப்பட்டுவிட்டதாகவும் பத்திபத்தியாக எழுதித் தள்ளுகின்றன.

அரசு இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றாதுவிட்டாலும் மனித உரிமைகள் பேரவையால் எதையும் செய்ய முடியாது. அனைத்துக் கட்சிக்கூட்டத்தையும் கூட்டி கலந்துரையாடல்களை நடத்தி காலத்தை இழுத்தடிக்க வேண்டும். உள்நாட்டில் காணப்படும் எதிர்ப்புகளைக் காரணம் காண்பித்து தீர்மானத்தை நடைமுறைப் படுத்தாது கிடப்பில் போடவேண்டும். போரில் வெற்றியை ஈட்டித்தந்த படையினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முற்பட்டால் அரசும் பெரும்பான்மையின மக்கள் ஆதரவை இழக்கும் என்றெல்லாம் அச்சுறுத்தி அரசுக்கு மாற்றுத் தெரிவுகளை எடுத்துக் காண்பித்து வருகின்றன.

மனித உரிமைகளை மதியாது சர்வாதிகாரப் போக்கில் சென்ற மகிந்த அரசைப் பெரும்பான்மையான சிங்கள மக்களும் சேர்ந்துதான் தோற்கடித்தனர் என்பதை மறந்தவர்களாகவும், சிங்கள மக்களில் அதிகமானவர்கள் சரியாக வழிநடத்தப்படுமிடத்து நீதியின் பாதையில் முன்னகர்வார்கள் என்பதை நிராகரிப்பதாகவும் ஊடகங்களின் கருத்துகள் அமைந்திருக்கின்றன.

அரசியலில் ஆக்ரோஷமாகக் குரலெழுப்பும் இனவாதிகளுக்கு ஆதரவான கருத்துகளைக் கொண்ட தென்பகுதி ஊடகங்களும் - ஊடகவியலாளர்களும் தமிழர்களுக்கு நீதி கிடைப்பதற்கு எதிராகவே இருந்து வருகின்றனர்.

இனவாதிகளின் நீதிமறுப்புச் செயற்பாடுகளுக்கு அரசு அடிபணியாது காத்துக்கொள்ளும் பொறுப்பு சர்வதேச சமூகத்துக்கு உள்ளது. இந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதன்மூலம் போரின் போது நிர்க்கதியாக விடப்பட்ட மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கான நீதி கிடைப்பதை உறுதி செய்யவேண்டும்.

பத்தி எழுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 60 | 40 | 60 | 40 | 60 | 60 | 25 |
| கத்தரி | 60 | 60 | 60 | 50 | 40–60 | 80 | 80 | 30 |
| கரட் | 60 | 80 | 60–120 | 80 | 60–120 | 120 | 100 | 100 |
| மரவள்ளி | 50 | 50 | 50 | 50 | 40–45 | 60 | 50 | 30 |
| பயிற்றை | 50 | 60 | 70 | 60 | 70–80 | 120 | 100 | 50 |
| பாகல் | 80 | 100 | 140 | 100 | 120–160 | 130 | 110 | 120 |
| கருணைக்கிழங்கு | 70 | 80 | 80 | 80 | 60–70 | 100 | 120 | 70–80 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 100 | 100 | 100–120 | 100 | 120 | 80–90 |
| சி.வெங்காயம் | 80 | 80 | 110 | 120 | 120 | 140 | 100 | 100 |
| பூசணி | 30 | 40 | 40 | 40 | 40 | 80 | 50 | 30 |
| தக்காளி | 80 | 80 | 80 | 80 | 50–60 | 120 | 80 | 90 |
| வாழைக்காய் | 60 | 60 | 50 | 50 | 50–70 | 60 | 60 | 30 |
| கீரை | 30 | 20 | 30 | 10 | 15–20 | 40 | 30 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 30 | 20 | 20–25 | 40 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 140 | 140 | 160 | 140 | 160–180 | 200 | 200 | 100–120 |
| புடோல் | 50 | 60 | 40 | 50 | 40–60 | 60 | 60 | 30 |
| கோவா | 60 | 80 | 80 | 70 | 50–60 | 80 | 100 | 40–50 |
| வெண்டி | 50 | 40 | 60 | 60 | 60–70 | 60 | 50 | 30 |
| போஞ்சி | 160 | 140 | 180 | 140 | 140 | 200 | 160 | 120–140 |
| லீக்ஸ் | 80 | 80 | 80 | 80 | 50–60 | 120 | 80 | 60 |
| தேங்காய் | 50 | 60 | 50 | 60 | 45–60 | 40 | 35–40 | 35–40 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 100–120 | 120 | 100 | 80–120 |
| தேசிக்காய் | 160 | 200 | 240 | 300 | 220–240 | 400 | 160 | 250 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 30 | 20 | 15 | 08–10 |
| கறிமிளகாய் | 100 | 100 | 100 | 80 | 80–100 | 120 | 120 | 70–80 |
| இராசவள்ளி | – | – | – | – | – | – | 180 | 80–90 |
| முருங்கைக்காய் | 100 | 100 | 100 | 60 | 100–120 | 80 | 120 | 70 |

# கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்


| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 800 | 600 | 800 | 600 | 500 |
| நண்டு | 300 | 400 | 400 | 400 | 300 | 400 |
| கணவாய் | 500 | 600 | 400 | 600 | 600 | – |
| பாரை | 500 | 600 | 600 | 500 | 400 | 400 |
| சுறா | 500 | 600 | 600 | 600 | 400 | 450 |
| சீலா | 250 | 500 | 500 | 400 | 400 | 350 |
| விளை | 550 | 500 | 400 | 500 | 460 | 400 |
| முரல் | 300 | 400 | 300 | 400 | 300 | – |
| கும்பிளா | 350 | 400 | 250 | 500 | 400 | 300 |
| கிழாக்கன் | 500 | 800 | – | 500 | 300 | – |
| ஓரா | 300 | 400 | – | 400 | 400 | – |
| திரளி | 200 | 300 | 150 | 350 | 100 | – |
| நகரை | 150 | 300 | – | 300 | 150 | 300 |
| சூடை | 100 | 200 | 100 | 120 | 120 | – |
| ஒட்டி | 200 | 250 | 200 | 300 | 200 | 250 |
| திருக்கை | 150 | 350 | 200 | 400 | 200 | 130 |
| பாலை | 350 | 150 | – | 450 | 250 | – |
| வாழை | 100 | 150 | – | 300 | 150 | 200 |
| கொய் | 100 | 150 | – | 120 | 120 | – |
| மதனம் | 150 | 250 | 220 | 300 | 200 | 250 |

# மருத்துவக் குணங்கள் தேங்காயிலும்..!

தேங்காயில் உள்ள ஃபேட்டி அசிட் உடலில் உள்ள கெட்ட கொழுப்பைக் கரைக்கிறது. உடல் எடையைக் குறைக்கிறது என்று சமீபத்திய ஒரு ஆய்வில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது என நேற்றைய உதயனில் தெரிவித்திருந்தோம் அதன் தொடர்ச்சி வருமாறு:–

தேங்காய் எண்ணெய்யைக் கொண்டு தயாரிக்கப்படும் தைலங்கள் பல்வேறு நோய்களைக் குணப்படுத்துகின்றன. நாள்பட்ட தீராத புண்களுக்கு மருந்தாகத் தரப்படும் மத்தம் தைலம், தோல் நோய்களுக்கான கரப்பான் தைலம், வாதவலிகளைக் குணப்படுத்தும் கர்ப்பூராதி தைலம், தலைக்குப் பயன்படுத்தப்படும் நீல பிரிங்காதித் தைலம், சோரியாசிஸ் நோய்க்குப் பயன்படும் வெப்பாலைத் தைலம், தலையில் உள்ள பொடுகுக்கு மருந்தாகும் பொடுதலைத் தைலம் ஆகிய தைலங்களில் தேங்காய் எண்ணெய்யின் பங்கு முக்கியமானது.

தேங்காய் எண்ணெய் எளிதில் ஜீரணமாகும். குழந்தைகளுக்குத் தேவையான எல்லாச் சத்துக்களும் தேங்காய்ப்பாலில் உள்ளன. தேங்காய் பாலில் கசகசா, பால், தேன் கலந்து கொடுத்தால் வறட்டு இருமல் மட்டுப்படும். பெரு வயிறுக் காரர்களுக்கு (வயிற்றில் நீர் கோர்த்தல்) இளநீர் கொடுத்தால் சரியாகும். தேங்காய்ப் பாலை விளக்கெண்ணெய்யில் கலந்து கொடுத்தால் வயிற்றில் உள்ள புழுக்களை அப்புறப்படுத்தும். தேங்காய்ப் பாலில் காரத்தன்மை உள்ளதால், அதிக அமிலம் காரணமாக ஏற்படும் வயிற்றுப் புண்களுக்கு தேங்காய்ப் பால் மிகவும் சிறந்தது. உடலுக்குத் தேவையான அமினோ அமிலங்கள் உள்ளன. இவை உடலின் வளர்ச்சி மாற்றத்துக்குப் பெரிதும் உதவுகின்றன. தேங்காய் எண்ணெய்யை உரிய அளவில் தினமும் உணவில் சேர்த்து வந்தால், உடல் எடை குறையும் என்று அண்மைக் கால ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது.



தேங்காயில் உள்ள லாரிக் அசிட் மற்றும் காப்ரிக் அசிட் ஆகியவை வைரஸ் மற்றும் பக்ரீரியல் நுண்கிருமிகளை எதிர்க்கும் திறன் கொண்டதாக உள்ளன. தேங்காயில் உள்ள மோனோ லாரின் வைரஸ் செல் சுவர்களைக் கரைக்கிறது. எய்ட்ஸ் நோயாளிகளுக்கு வைரல் லோடைக் குறைக்கிறது. தேங்காயில் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகம்.

(தொடரும்)

## அன்பின் மூலமே ஆன்மிக உணர்வு கிட்டும்

பெரிய புத்தகங்களைப் படிப்பதாலும் அவ்வாறு படித்து பேரறிஞர் ஆவதாலும் ஆன்மிக உணர்வைப் பெற முடியாது என்பது நிச்சயம். சங்கங்கள் ஏற்படுத்தி கூட்டங்கள் சேர்த்து எவரும் ஆன்மிக உணர்வைப் பெற முடியாது. அன்பின் மூலமாகத் தான் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு ஆன்மிக உணர்வைச் செலுத்த முடியும். ஆன்ம ஞானத்தைப் பெற விரும்பும் ஒருவன் தொடக்கத்தில் புற உதவிகளைப் பெற்று சுயபலத்தில் நிற்க வேண்டும். ஆன்ம ஞானம் கிட்டிய பின்னர் பிற உதவிகள் தேவையில்லை. கல்வி மூலம் தன்னம்பிக்கை ஏற்படுகிறது.

விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



# நாளை

**புரட்டாதி-20**
**புதன்கிழமை**
**07.10.2015**

திதி: தசமி
மு.இ.08.58 வரை
நட்சத்திரம்:
பூசம் பி.ப.03.30 வரை
சுபநேரம்: 04.32-06.02 வரை
இராகு காலம்:
12.02-01.32 வரை

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 3 | 5 | | | 1 | | | 2 |
| 7 | 4 | 2 | | 9 | | | | |
| 1 | | | | | 2 | 4 | | |
| | 7 | 9 | | | 5 | | | |
| | | | | | | | | |
| | | | 2 | | | 3 | 5 | |
| | | 6 | 1 | | | | | 5 |
| | | | | 6 | | 2 | 7 | 3 |
| 3 | | | 8 | | | 1 | 6 | |

**நேற்றைய சுடோக்கின் விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 4 | 6 | 2 | 3 | 7 | 5 | 8 | 1 |
| 1 | 5 | 2 | 9 | 6 | 8 | 4 | 3 | 7 |
| 3 | 8 | 7 | 4 | 5 | 1 | 9 | 6 | 2 |
| 4 | 2 | 9 | 3 | 8 | 6 | 1 | 7 | 5 |
| 6 | 1 | 8 | 5 | 7 | 2 | 3 | 4 | 9 |
| 5 | 7 | 3 | 1 | 4 | 9 | 6 | 2 | 8 |
| 7 | 3 | 4 | 8 | 9 | 5 | 2 | 1 | 6 |
| 2 | 6 | 5 | 7 | 1 | 4 | 8 | 9 | 3 |
| 8 | 9 | 1 | 6 | 2 | 3 | 7 | 5 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறி முகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்த எண்பலன் பற்றி தெரிந்து கொள்வோம்

**மூன்றாம் எண்ணில் பிறந்தவர்களின் பலன்கள் நேற்றைய உதயனில் வெளியானது. இன்று 4 ஆம் எண்ணில் பிறந்தவர்கள் பற்றிப் பார்ப்போம்.**

நான்காம் எண்ணும் மற்றைய எண்களைப் போலவே சிறப்பு வாய்ந்ததாகவே இருக்கும். நான்கு திசைகள், நான்கு வேதங்கள், நான்கு உபாயங்கள் என நான்காம் எண்ணுக்கு தனித்தன்மைகளும் உண்டு. 4,13, 22, 31 ஆம் திகதிகளில் பிறந்தவர்கள் நான்காம் எண்ணுக்குரியவர்களாகிறார்கள். நான்காம் எண்ணின் கிரகம் ராகு வாகும்.

**குண அமைப்பு**

நான்காம் எண்ணில் பிறந்தவர்கள் ராகுவின் ஆதிக்கத்துக்குட்பட்டவர்கள் என்பதால் அதிக பிடிவாதகுணம் இருக்கும். அடக்கமாகவோ, விட்டுக்கொடுக்கும் விதத்திலோ பேசத் தெரியாது. எப்பொழுதும் வெட்டு ஒன்று துண்டு இரண்டாகப் பேசுவார்கள். அழுத்தம் திருத்தமாகவும் திட்டவட்டமாகவும் இவர்களின் பேச்சு அமையும். பிறருடைய அந்தஸ்தையோ, வளத்தையோ, செல்வத்தையோ, பின்னால் இருக்கும் பலத்தையே பற்றி சற்றும் தயக்கம் காட்டாமல் மனதில் பட்டதை தைரியமாக,வெளிப்படையாகக் கூறக்கூடிய இயல்பு கொண்டவர்களாக இருப்பார்கள். எல்லா இடங்களிலும் தங்களது கருத்துக்களையே நிலைநிறுத்த முயற்சிப்பார்களே தவிர, பிறருடைய கருத்தைக் காது கொடுத்தும் கேட்க மாட்டார்கள். சண்டை போடுவது போல எப்பொழுதும் குரல் உச்சத்தொனியில் ஒலிக்கும். எவ்வளவுதான் நல்ல பயன்கள் இருந்தாலும் பிறர் சொல்வதை அப்படியே ஏற்றுக்கொள்ளாமல் மனதில் பட்டதற்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுப்பார்கள். ஒளிவு மறைவற்ற இவர்களின் அதிகாரமான பேச்சால் பல இன்னல்களைச் சந்திக்க நேரிடும்.

இவர்களைப் புரிந்து கொள்பவர்களால் மட்டுமே இவர்களை அனுசரித்துச் செல்ல முடியும். இந்த உலகத்தில் தனக்கு தெரியாத விடயங்கள் எதுவுமே இல்லை என்ற ஆணவம் அதிகம் இருக்கும். புகழிலோ, பொருளிலோ அவ்வளவு ஆசை இருக்காது. எல்லோரும் தனது கருத்துக்களைப் புரிந்து கொண்டு பாராட்ட வேண்டும் என்று எதிர் பார்ப்பார்கள். பொதுவாகவே இவர்கள் எதிலும் சட்டென உணர்ச்சி வசப்படக் கூடியவர்கள். பொதுநல காரியங்களுக்காக தமது உயிரையும் தியாகம் செய்யத் தயங்க மாட் டார்கள். காதல் விவகாரங்களில் ஈடுபடு பவதும் உண்டு. அதில் முழு வெற்றி கிடைக்கும் என்று கூறிவிட முடியாது. எந்தக் காரியத்தில் ஈடுபட்டாலும் தீவிரத் தன்மையுடன் செயற்படுவார்கள். திடீர் அதிஷ்டங்களைக் காட்டிலும் உழைத்து முன்னேறு வதிலேயே அதிக விருப்பம் கொண்டவர்கள். சிலர் நடுத்தர வயதுக்கு மேல் ஞானி கள், துறவிகள்போல மாறிவிடுவதும் உண்டு. எந்தக் காரியத்தையும் ஒரு முறைக்குப் பலமுறை ஆராயந்த பிறகே முடிவெடுப்பார்கள்.

**உடலமைப்பும், ஆரோக்கியமும்**

நான்காம் எண்ணின் ஆதிக்கத்தில் பிறந்தவர்கள் சற்று தடித்த உடலமைப்பைப் பெற்றிருப்பார்கள். நடுத்தர உயரமும், வட்ட வடிவமான முகத்தோற்றமும் இருக்கும். இவர்களுக்கு எப்பொழுதும் ஏதாவது உடல் உபாதைகள் இருந்து கொண்டே இருக்கும். கறுப்பாகவோ அல்லது மாநிறமாகவோ இருப்பார்கள். இவர்களுடைய கால்கள் உடலுக்கு ஏற்றபடி இல்லாமல் குறுகலாக இருக்கும். மற்றவர்கள் ஒருமுறை பார்த்தவுடன் மறுமுறை திரும்பிப் பார்க்க வைக்கக் கூடிய உருவ அமைப்பைப் பெற்றிருப்பார்கள். இவர்கள் நல்ல உழைப்பாளிகள் என்பதால் உடற்சோர்வு, முதுகுத் தண்டுவலி,மூட்டுவலி போன்றவை ஏற்படும். மன உளைச்சல் அதிகம் இருக்கும். தேவையற்றவைகளுக்கு எல்லாம் குழம்பிக் கொள்வார்கள். காரசாரமான பொருள்களை அதிகம் சாப்பிடுவதால் வயிறு சம்பந்தமான வியாதிகளும், வாயுத் தொல்லைகளும் உண்டாகும். சிறுநீரகக் கோளாறு, வறட்டு இருமல், சளி, சுவாசக் கோளாறு போன்றவைகளால் அடிக்கடி பாதிப்பு உண்டாகும்.



**குடும்ப வாழ்க்கை**

நான்காம் எண்ணுரிக்குரியவர்கள் குடும்ப வாழ்க்கை ரீதியாக அதிர்ஷ்டசாலிகள் என்றே கூறலாம். ஏனெனில் இவர்களுக்கு இளம் வயதிலேயே திருமணம் நடைபெற்று விடக்கூடிய சூழ்நிலைகள் மிக அதிகம். இதனால் இவர்களுக்குக் குடும்பத்தை நடத்தக்கூடிய பொறுப்பு வந்து விடுகிறது. அதற்கேற்றால்போல இவர்களுக்கு அமையும் வாழ்க்கைத் துணையும் அமைதியுடனும், தெய்வ பக்தியுடனும் அமைந்து விடுவதால் கணவன், மனைவி இருவருக்கும் பிரச்சினைகள் வருவதென்பது மிகவும் அரிதாகும். கெட்ட பழக்க வழக்கங்களுக்கு எளிதில் ஆளாகுபவராக இருப்பார். எதிலும் கவனத்துடன் நடந்து கொண்டால் இவர்களின் குடும்ப வாழ்க்கை மற்றவர்கள் பின்பற்றக்கூடிய தொன்றாக இருக்கும்.

**பொருளாதாரம்**

நான்காம் எண்ணில் பிறந்தவர்களுக்கு பணம் எப்போதுமே பற்றாக்குறையாகத்தான் இருக்கும். எவ்வளவுதான் சம்பாதித்தாலும் அதற்கேற்ற செலவுகளும் உண்டாகும். ஆயினும் இவர்கள் செய்யும் செலவு வீண் செலவாக இருக்காது. தாராள மனம் கொண்டவர்கள் என்பதால் யாராவது கஷ்டத்தைச் சொல்லி உதவி கேட்டால் கையில் இருப்பதைக் கொடுத்து விடுவார்கள். சொந்தச் செலவுக்காக திண்டாட வேண்டியிருந்தாலும், எதையும் துணிவு டன் சமாளிக்கும் ஆற்றலும் இருக்கும்.

**தொழில்**

நான்காம் எண்ணில் பிறந்தவர்கள் எந்தத் தொழில் செய்தாலும் அதில் அதிக அக்கறையும் கவனமும் கொண்டிருப்பார்கள். நாம் நன்றாக இருக்கிறோமோ இல்லையோ மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்கிற நோக்கத்தோடு செயற்படுவார்கள். அரச உத்தியோகத்திலும் பெரிய அதிகாரிகளாகவும் இருக்க வாய்ப்புண்டானாலும், பலர் அடிமைத் தொழில் செய்பவர்களாகவே இருப்பார்கள். அச்சுத் தொழில், இயந்திரத் தொழில், பௌதிக ஆராய்ச்சித் தொழில் போன்றவற்றிலும் முன்னேற்றம் உண்டாகும்.

**நண்பர்கள், பகைவர்கள்**

நான்காம் எண்ணில் பிறந்தவர்கள் முரட்டுச் சுபாவம் கொண்டவர்கள் என்பதால் இவர்களுக்கு நண்பர்கள் அமைவது சற்றுக் கடினமான காரியமாகும். இருந்தபோதிலும், தாராள குணம் இருப்பதால் சில நண்பர்கள் அமைய வாய்ப்பு உண்டு. 5,8 ஆம் எண்ணில் பிறந்தவர்கள் நண்பர்களாகவும் 1,29 ஆம் எண்ணில் பிறந்தவர்கள் இவர்களிடம் ஒற்றுமையாகச் செயற்பட முடியாதவர்களாகவும் இருப்பார்கள்.

**ராகுவுக்குரிய காலம்**

ராகுவுக்கு எனத் தனிப்பட்ட முறையில் நாள் கிடையாது. ஜோதிட, சாஸ்திர ரீதியாக சனிக்கிழமையை ராகுவுக்கு உரியதாகக் கருதலாம். ஒவ்வொருநாளும் ராகு காலம் என்று ஒன்றரை மணி நேரம் ராகுவுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நேரத்தில் எந்த சுபகாரியத்தையும் செய்யாதிருப்பது நல்லது.

**ராகுவுக்குரிய திசை**

தெற்குத் திசையே ராகுவுக்குரியது. பாலைவனங்கள், குகைகள், சுடுகாடு, புற்று, சுரங்கம், ஓட்டு வீடு, பாழடைந்த கட்டடங்கள், உலர்ந்துபோன நிலங்கள் போன்றவை ராகுவுக்குச் சொந்தமான இடங்களாகும்.

**ராகுவுக்குரிய அதிர்ஷ்டக் கல்**

நான்காம் என் ராகுவின் ஆதிக்கத்தில் இருப்பதால் 4 ஆம் எண் உடையவர்கள் கோமேதகத்தை அணிய வேண்டும். தேனின் நிறத்தைக் கொண்ட கோமேதகத்தை அணிவதால் உடல் நலம் சிறப்படையும். எடுக்கும் காரியங்களில் வெற்றி, செய்யும் தொழில் மேன்மை, செல்வம், செல்வாக்கு உயரும். அனைத்து நற்பயன்களும் உண்டாகும்.

**பரிகாரங்கள்**

நான்காம் எண்ணில் பிறந்தவர்கள் ராகு பகவானுக்கு பரிகாரங்கள் செய்வது உத்தமம். ராகு காலங்களில் செவ்வாய், வெள்ளி, ஞாயிறு போன்ற நாள்களில் துர்க்கை அம்மனுக்கு எலுமிச்சம் பழத்தில் விளக்கேற்றி, கஸ்தூரி மலர்களால் அலங்கரித்து அர்ச்சனை செய்வது உத்தமம். ராகு காலங்களில் சர்வேஸ்வரரையும் வழிபடலாம்.

**அதிர்ஷ்டம் தருபவை**

அதிர்ஷ்டத் திகதி –1,10,19,28
அதிர்ஷ்ட நிறம் மஞ்சள்
அதிர்ஷ்டத் திசை –கிழக்கு
அதிர்ஷ்டக் கிழமை ஞாயிறு
அதிர்ஷ்டக் கல் கோமேதகம்
அதிர்ஷ்ட தெய்வம்– துர்க்கை




# பெண்களும் பொருளாதாரமும்

ஒவ்வொரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி பற்றிய கணிப்புகளிலும் பெண்களின் பங்கு பற்றிய கவனம் செலுத்தப்படுவது அதிகமாகக் காணப்படுகிறது. பணம் ஈட்டுவதைக் காட்டிலும், பணம் ஈட்டுவதற்கு ஈடான, பல மறைமுகப் பங்களிப்பைப் பெண்கள் செய்து வந்துள்ளனர். குடும்பத்தை – அதன் உடைமைகளைப் பேணுவது, ஈடு செய்ய இயலாத தாய்மை, மனைவி மற்றும் மகள் எனும் உறவுகளின் வழி தம்மை அர்ப்பணித்துக் கொள்வதன் மூலம் மிகப் பெரிய அளவில் பங்களித்து வந்திருக்கின்றனர். இவை கணக்கிடப்படாததால் அவர்களது நிலை சமூகத்தில் இன்னமும் முறையான அங்கீகாரம் அளிக்கப்படாததாக அமைந்துள்ளது. இப்போது, வீட்டை விட்டு வெளியில் பணிக்குச் சென்று பொருள் ஈட்டி, தங்களின் ஈடுபாட்டையும் குடும்பம் மற்றும் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பங்கு கொள்வதையும் பெண்கள் உறுதிப்படுத்தி வருகின்றனர். அதிகாரத்திலும், ஆட்சியிலும் மகளிருக்கு இட ஒதுக்கீடு என்பது வெறும் அரசியல் சார்ந்த, வாக்குச் சேகரிக்கும் உத்தியாக இல்லாமல், உண்மையான பொருளாதாரப் பங்களிப்புக்கு, ஆட்சியையும், அதிகாரத்தையும் அவர்கள் பயன்படுத்தும்படியாக வாய்ப்பளிக்கப்பட வேண்டும்.

வளர்ச்சிக்கான நேரடி முயற்சிகளில் பெண்கள் அதிக அளவில் பங்கெடுக்கும்பொழுது, பயனும் அதிகம் இருக்குமென நம்பலாம். சுய உதவிக் குழுக்களின் அபரிமித வெற்றிகள் இதற்குச் சான்று! இவர்களுக்கு வாய்ப்புக்களைப் பரவலாக்குவதன் மூலம் மிகச் சிறப்பான வளர்ச்சியின் பயன்களை நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் கொண்டு செல்ல இயலும். மகளிருக்கு அளிக்கப்பட வேண்டிய உரிமைகளில் – சொத்தில் பங்கு, வாழ்வுரிமைக்கான குடும்பப் பொருளாதாரப் பயன்களில் பங்கு என்பவை மகளிருக்கு முழுமையாகச் சென்றடையாமல் உள்ளன. பெண்களுக்கு, அரசியல் வழி அதிகாரம் மற்றும் ஆட்சி ஆகிய இவை யிரண்டும் மட்டும் போதுமானதல்ல. பொருளாதாரப் பங்களிப்புக்கும், பொருளாதார வளர்ச்சியின் பயனைப் பெறுவதில் பங்கு பெறவும் ஏற்ற உரிமைகள் உறுதி செய் யப்பட வேண்டும். பெண்களுக்கு என பிரதிநிதித்துவம் அளிக்கப்படுவதுடன், பொருளாதாரப் பங்கீடுகளிலும் மகளிருக்கு உரிய, வளர்ச்சிக்குத் தேவையான பங்கு அளிக்கப்படுவது உறுதி செய்யப்பட வேண்டும். கைப்பாவைகளாகப் பெண்கள் அமர்த்தப்படுவதும், அவர்களின் பெயரில் சமூகப் பொருளாதாரப் பயன்களை வேறு யாரோ பெறுவதும் நாம் காணும் காட்சிகளே. ஆயினும், அந்தப் பயன் ஓரளவேனும் உரியவருக்குச் சென்றடையும் என்று நம்புவதற்கு இடமிருக்கிறது. இது தொடர்ந்து சில ஆண்டுகள் பெறப்படும் பொழுது தான், நாம் எதிர்பார்க்கும் பெண்களின் சுயசார்பு, சமூகப் பொருளாதாரப் பங்களிப்பு, பயன்களில் உரிமை மற்றும் பங்கு ஆகியவை குறிப்பிடும்படி அமையும். பொருளாதார வளர்ச்சிக்குத் தமது பங்கை ஆற்றும் எமது பெண் களுக்கு, அவற்றின் பயன்களைப் பெறுவதிலும் தகுந்த பங்கும் உரிமையும் கிடைத்திட உறுதி செய்ய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆட்டுக்குட்டி

ஆட்டுக் குட்டி ஆட்டுக் குட்டி
அங்கும் இங்கும் ஓடுது
துள்ளித் துள்ளி எகிறியே
தாவித் தாவிக் குதிக்குது!
வாலையாட்டித் தாயிடம்
பாலை முட்டிக் குடிக்குமே
ஓலைக் குருத்துக் கால்களால்
ஓடியாடி மகிழுமே!








# கோடரியால் பூப் பறித்தால்...

உழவன் ஒருவனிடம் பெரிய தோட்டம் ஒன்று இருந்தது. அதில் காய்கறிகளைப் பயிரிட்டான் அவன். நாள்தோறும் ஒரு முயல் அந்தத் தோட்டத்துக்குள் நுழைந்து இலை, பிஞ்சுகளைத் தின்று வந்தது. அதைப் பிடிக்க அவன் பல முயற்சிகள் செய்தான். முயல் அவனிடம் சிக்கவே இல்லை. எப்படியும் முயலைப் பிடித்தாக வேண்டும்என்றுநினைத்த அவன் அரசனிடம் சென்றான்.'அரசே எனது தோட்டத்தை முயல் ஒன்று பாழாக்கு கிறது. நீங்கள் தான் எனக்கு உதவி செய்ய வேண்டும்' என்றான். அதைக் கேட்டுச் சிரித்த அரசன், 'ஒரு முயலைப் பிடிக்க உன்னால் முடியவில்லையா?' என்று கேட்டான். 'அரசே! அந்த முயலுக்கு மாய மந்திரம் தெரிந்திருக்க வேண்டும். நான் அதைப் பார்த்து கல்லாலேயோ கட்டையாலேயோ வீசினாலும் அவை அதன் மீது படுவது இல்லை' என்றான் அவன். 'நாளையே வேட்டை நாய்களுடன்நான்அங்குவருகிறேன். முயலின்மாய மந்திரம் எதுவும் எனது வேட்டை நாய்களிடம் செல்லாது. அந்த முயலைப் பிடித்த பிறகுதான் நான் அங்கிருந்து திரும்புவேன்' என்றான் அரசன். மகிழ்ச்சியுடன்தனது தோட்டத்துக்கு வந்தான் அவன். இனி முயலின் தொல்லை இருக்காது என்று நினைத்து அரசனுக்கும், வீரர்களுக்கும் சிறப்பான விருந்துக்கு ஏற்பாடு செய்தான். மறுநாள் படை வீரர்கள், வேட்டைக்காரர்கள், நாய்கள் சூழ அரசன் அங்கு வந்தான். எல்லோரையும் வரவேற்ற உழவன் அவர்களுக்குச் சிறப்பாக விருந்துவைத்தான். விருந்து முடிந்தது. மகிழ்ச்சி அடைந்த அரசன் 'இன்னும் சிறிது நேரத்தில் அந்த முயல் என்ன கதி ஆகிறது பார்' என்று வேட்டையாடப்புறப்பட்டான். வேட்டைக்காரர்கள் கொம்புகளை ஊதினார்கள். வேட்டை நாய்கள் பயங்கரமாகக் குரைத்துக் கொண்டே தோட்டத்துக்குள் பாய்ந்தன. புதரில் மறைந்திருந்த முயல் அச்சத்துடன் வெளியே வந்தது. அங்கிருந்தவேலியை நோக்கிஓடியது. அதைப் பார்த்த அரசன், 'அந்த முயலைத் தப்ப



விடாதீர்கள், பிடியுங்கள்' என்று கத்தியபடி வேலிப் பக்கம் ஓடினான். வேட்டைக்காரர்களும் வீரர்களும் அரசனைத் தொடர்ந்து ஓடினார்கள்.

தப்பிக்க நினைத்த முயல் தோட்டத்துக்குள் அங்கும் இங்கும் ஓடியது. அவர்கள் அனைவரும் அதைத் துரத்தினார்கள். நீண்ட நேரப் போராட்டத்துக்குப் பின் ஒரு வேட்டை நாய் பாய்ந்து அந்த முயலைக் கவ்விப் பிடித்தது. வெற்றிப் பெருமிதத்துடன் அந்த முயலை உழவனிடம் காட்டினான் அரசன். இவர்களின் முயல் பிடிக்கும் முயற்சியில் தனது அழகான தோட்டம் முற்றிலும் நாசமாகிவிட்டதை அறிந்து வருந்தினான் உழவன்.

'சிறிய வேலைக்குப் பெரியவர்கள் உதவி கேட்பது தவறு என்று உணராமல் போனேனே. எனது அழகான தோட்டம் அழிந்துவிட்டதே. ஒரு முயல் என்ன ஆயிரம் முயல்கள் பல நாள்கள் வந்திருந்தாலும் இப்படிப்பட்ட அழிவு ஏற்பட்டுஇருக்காதே. எனதுமுட்டாள்தனத்தால் பேரழிவைத் தேடிக் கொண்டேன்' என்று வருந்தினான் அவன்.

# பரீட்சையில் வெற்றி பெற...

1. அதிகாலையில் எழுந்து படித்தால் அது மனதில் அழுத்தமாகப் பதியும். தினமும் அதிகாலையில் குறைந்தது இரண்டு மணி நேரம் படிப்பதை வழக்கமாக்கிக் கொள்ளுங்கள்.
2. அமைதியான இடத்தில் வசதியாக அமர்ந்து படிக்க வேண்டும்.
3. படிப்பதை ஒரு முறை எழுதிப் பார்க்கலாம். இப்படி எழுதிப் பார்ப்பதால், பாடம் மனதில் மிகவும் ஆழமாகப் பதிந்து விடும்.
4. அன்றைய பாடங்களை அன்றே திட்டமிட்டுப் படித்து விடுங்கள். நாளை பார்த்துக் கொள்ளலாம் என்பது பின்னால் சுமையாகிப் போய் விடும்.
5. விடுமுறை நாள்களில் அனைத்துப் பாடங்களையும் ஒரு முறை திருப்பிப் படித்துக் கொள்ள வேண்டும்.
6. நண்பர்களுடன் உரையாடும்போது பாடங்கள் குறித்து அதிகமாகப் பேச வேண்டும். இதனால் எமக்குள் இருக்கும் சில சந்தேகங்கள் அகலலாம்.
7. பரீட்சை நாள்களில் மதிய உணவுக்குப் பின்பு இரண்டு மணி நேரம் தூங்கினால் நல்லது. இது புத்துணர்வை அளிக்கும்.
8. பரீட்சை நாள்களில் அதிக நேரம் படிக்கிறேன் என்று அதிகமான நேரம் கண்விழித்துக் கொண்டிருக்கக் கூடாது. அந்த நாள்களில் குறைந்தது ஐந்து மணி நேரமாவது தூங்க வேண்டும்.
9. இரவு படித்து முடித்து படுக்கைக்குச் செல்லும் முன்பு படித்ததை நினைவுக்குக் கொண்டு வர முயற்சிக்க வேண்டும்.
10.தலைப்புகளின்வழியேசிறு குறிப்புகள் தயாரித்து பரீட்சைக்கு முன்பு படித்துச் செல்லலாம்.
11.பரீட்சைமையத்துக்குஉரியநேரத்துக்கு முன்பே சென்று விட வேண்டும்.
12. வினாத்தாளை முதலில் முழுமையாகப் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டும். நன்கு தெரிந்த கேள்விகளுக்கு மட்டும் முதலில் பதில் அளிக்க வேண்டும். வினா எண், பக்கஎண் போன்றவைகளைச் சரியாக எழுதி விட வேண்டும்.
13. பரீட்சைக்கான முழு நேரத்தையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பரீட்சை நேரம் முடியும் முன்பு நாம் அளித்துள்ள பதில்கள் சரியாக இருக்கின்றனவா என்று ஒரு முறை சரி பார்த்துக் கொள்ள வேண்டும்.
14.பரீட்சைமுடியும்முன்புவிடைத்தாள்களைக் கட்டி மொத்தப்பக்கங்கள், கூடுதல் விடைத்தாள்கள் போன்றவைகளை சரியாக எழுத வேண்டும்.
15. உரக்கப் படி[illegible]யும்படி படிக்க [illegible].
16.பரீட்சைக்குச்செல்லும்போது சாப்பிடாமல் செல்லக்கூடாது. அதனால் ஏற்படும் களைப்பு பதில் அளிப்பதில் சிரமத்தை ஏற்படுத்தும்.
17. குறிப்பிட்ட வினாவுக்குப் பதில் அளிக்க அதிக நேரத்தை எடுத்துக் கொள்ளக் கூடாது.
18. பரீட்சை எழுதும் போது விடையளிப்பதில் மட்டுமே கவனமிருக்க வேண்டும். சுற்றிலும் பார்த்துக் கவனத்தை திசை திருப்பி விடக் கூடாது.
19. [illegible]ள் ஒழுங்குபடுத்தப்பட்ட [illegible] எழுத்துக்களை அழகாகவும், போதுமான இடைவெளி விட்டு தலைப்புகள் தனியே தெரியும்படி அடிக்கோடிட்டும் இருந்தால் விடைத்தாளைத்திருத்துபவர்கள் திருப்தியுடன் திருத்த வழி அமையும்.
20. விடைத்தாளில் வினாக்களுக்கு படங்கள் அவசியமெனில் படங்களை வரைந்து தேவையான வண்ணங்களைப்பயன்படுத்தி அழகான குறிப்புகளையும் எழுதுங்கள்.

இந்தக் குறிப்புகளை மட்டும் நீங்கள் கடைப் பிடித்துப் பாருங்கள்... உங்கள் பரீட்சை முடிவுகள் நீங்கள் எதிர்பார்ப்பதை விட நன்றாக இருக்கும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவற்குழியில் ரயில் மோதி ஒருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஒக். 6

நாவற்குழி ரயில் நிலையத்தில் ரயில் மோதியதால் இரண்டு கால்களும் சிதைந்த நிலையில் படுகாயமடைந்த நபர் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலையில்அவசரசிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்று இரவு 7.30 மணி அளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றது. குருநகரைச் சேர்ந்த குறித்த நபர் ரயில் தண்ட வாளத்துக்கு அருகாகச் சென்று கொண்டிருந்துள்ளார் என்று கூறப்பட்ட போதும் விபத்துக் குறித்துச் சரியான காரணம் தெரிய வரவில்லை. அவர் மது போதையில் சென்றாரா என்றும் சந்தேகம் எழுப்பப்பட்டுள்ளது.

அவர் ரயிலால் மோதுண்டு தூக்கி எறியப்பட்டதாகவும், அவ்வாறு மோதுண்டபோது கால்களே ரயிலில் அகப்பட்டதாகவும் கூறப்பட்டுள்ளது. இதனையடுத்து வாகனம் ஒன்றில் குறித்த நபர் உடனடியாக போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு சிகிச்சைபயனின்றிஉயிரிழந்தார்.

(த-4)


சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம்: 2682 திகதி: 2015-10-05

03 07 09 43 x 69 ரூ. 27,180,625/-


## பெயர் மாற்றம்

அகல்யா அம்பிகாபதி ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை பாத்திமா ஆலியா செய்பித் ருகுனுத்தீன் (FATIYMAR ARLEAYAH SSAIEEDH RUKUNU DEEN) என பெயர் மாற்றம் செய்துகொள்வதுடன் சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பமிடுவேன் என்பதை தெரிவிக்கிறேன்.

(65206)(10.17) பாத்திமா ஆலியா

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



உலக ஆசிரியர் தினமான இன்று
பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில்
கௌரவ ஜனாதிபதியிடம் சிறந்த ஆசிரியரிற்கான
"பிரதிபா பிரபா விருதினை" பெறும்
**திருமதி நிர்மலா சுதர்சன்** அவர்களை
பாராட்டி வாழ்த்துகின்றோம்

**வாழ்த்துவோர்**
**சகோதரர்கள்**
(moorthy Digital Cloer Lab)

## முதலாம் ஆண்டு நினைவு நாள் — 3ஆம் ஆண்டும் 8ஆம் மாத நினைவு கூறலும்

பிறப்பு 13.05.1950

இறப்பு 17.09.2015

திதி: 06.10.2015



பிறப்பு : 09.09.1958 இறப்பு : 22.02.2012

**அப்பையா செல்வரட்ணம்** — **செல்வரட்ணம் அருந்தவம்**

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவாரோ எம் மடியில். குறுகிய காலத்தில் எம்மையெல்லாம் தவிக்கவிட்டு எங்கு சென்றீர் இருவரும். வாடித் தவிக்கிறோம் உங்கள் உடன் பிறந்தோர், உறவுகள், குழந்தைகள்.

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை
வேண்டி நிற்கும்
உறவுகள், உடன்பிறப்புகள்
N. மகேந்திரன்

மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

(65219)(10.17)

## Granton Company யின் புதிய தொழிற்பயிற்சி பிரிவுகள் ஆரம்பம் (October)

உழைப்பின் மூலம் வாழ்வில் முன்னேற விரும்பும் எதிர்கால சந்ததியினர் இன்றே எமது நிறுவனத்துடன் இணைந்து தொழிற் பயிற்சி பெறுங்கள்.

பயிற்சியின் போது Earn 12000/= - 15,000/=
பயிற்சியின் பின் ETF, EPF அடங்கலாக 40,000/= மேல்
பயிற்சியின் பின் வேலை நிரந்தரமாக்கப்படும்.

077 4458 134,
076 728 0492 (65221)(10.17)

20 பேருக்கு மட்டும் முன்னுரிமை
அனுமதிகளுக்கு முந்துங்கள்

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 21 . 07 . 1933



மறைவு 06 . 09 . 2015

**அமரர் தம்பிஐயா குணநாயகம் (ராசு)**
(உரிமையாளர் குமரன் ஸ்ரோர்ஸ்-திருநெல்வேலி)

அன்புநிறை பண்புவழி வரம்பு தன்னில்
அனைவரதும் மனங்களிலே நிறைந்து நன்றே
நன்மையுறு நெறியினிலே பிள்ளை பேரர்
நம்மவர்கள் உறவினர்கள் சுற்றம் எல்லாம்
இன்பமுற இனியநல்ல சேவை செய்து
இறையடியை அடைந்த எங்கள் தந்தை
துன்பமற பரம்பொருளின் பாதப் பேற்றில்
தூய்மையுடன் நிறைந்திடவே இறைஞ்சுகின்றோம்.
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

86/6, பலாலி வீதி,
திருநெல்வேலி வடக்கு.

(65215)(10.17) குடும்பத்தினர்.

## பனை அபிவிருத்திச் சபை
## PALMYRAH DEVELOPMENT BOARD

மீள்குடியேற்றம், புனர்நிர்மாணம் மற்றும்
இந்துமத அலுவல்கள் அமைச்சு
Ministry of Resettlement, Reconstruction and Hindu Religious Affairs

### Invitation for Bids
### Palmyrah Development Board.

1) The Chairman for the Regional Procurement Committee Palmyrah Development Board, Jaffna. invites sealed bids from eligible and qualified bidders for the Construction and renovation works in the Schedule below.

| Work/ Service Details | Non refundable Deposit | Security Deposit | Validity Period (Days) | Approximate Direct Cost of the Work (Rs in Million) |
|---|---|---|---|---|
| Construction of toilet with plumbing work at Karainagar. | 500.00 | 15,000.00 | 61 | 1.47 |
| Aluminium partition work with internal Electrical work for Vavuniya Katpaham. | 500.00 | 10,000.00 | 61 | 1.00 |
| Rack fitting work for Madu Katpaham at Mannar. | 500.00 | 5,000.00 | 61 | 0.48 |
| Tube well with plumbing work Madu Katpaham at Mannar. | 500.00 | 1,500.00 | 61 | 0.15 |
| Renovation work for Model farm at Kudathanai. | 500.00 | 1,500.00 | 31 | 0.13 |
| Construction of fibre factory at Mulliyavalai | 500.00 | 25,000.00 | 61 | 2.5 |

2) Bidding will be conducted through National Bidding Procedure (NCB)

3) To be eligible for contract award, the successful bidder shall not have been black listed and shall be registered in the field building construction for grade given in the Schedule or above with the institute for Construction Training and Development. (ICTAD).

4) A complete set of bidding documents in English Language may be purchased by interested bidders. from Chairman, Palmyrah Development Board, NHDA Building, Kandy Road, Jaffna Productivity valid regulation book and receipt for the Cash Payment for the bid fee from 06-10-2015 to 18-10-2015 during office hours.

5) Sealed bids shall be delivered to the Address below at or before 10:00 AM on 20-10-2015. Late bids will be rejected. Bids will be open at Palmyrah Development Board, Head office, Jaffna soon after closing in the presence of bidders or their representative who choose to attend.

Chairman,
Palmyrah Development Board,
National Housing Secretariat,
Kandy Road,
Jaffna.

(C/19188)(10.17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதவியாளர் தேவை**

வயோதிப பெண் ஒருவரை பராமரிக்க பெண் ஒருவர் தேவை. (65216)(10.17)

தொடர்பு: 0777 360 353

**விடுதியில் சமையல்ஆள் வெற்றிடம்**

யாழ். நகரில் இயங்கும் பிரபல விடுதிக்கு யாழ். சமையல் தெரிந்த நபர் (ஆண்/பெண்) தேவை (65209) (10.17)

தொடர்பு: 0777 360 353

## முக்கிய அறிவித்தல்

காக்கைதீவு கல்லுண்டாய் வெளியில் கழிவுகள் கொட்டுவதற்கு தடை விதிக்கப்பட்டமையால் நல்லூர் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உக்கக்கூடிய கழிவுகள் எவையும் எக்காரணம் கொண்டும் நல்லூர் பிரதேச சபையினால் அகற்றப்படமாட்டாது என்பதுடன், உக்க முடி யாத கழிவுகளை Plastic பொருள்கள் வேறாகவும், ஏனைய வற்றை வேறாகவும், வகைப்படுத்தி வீடுகளில் வைக்கு மாறும், பிரதேச சபையின் உழவுயந்திரங்கள் மூலம் அகற்றப் படும் எனவும் வீதிகளில் வைக்க வேண்டாம் எனவும் அன்புடன் அறியத்தருகின்றேன்.

05.10.2015

செயலாளர்
நல்லூர் பிரதேச சபை,

(C/1919))(10.17)

## உளம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம் வளம் மலர்ந்து வாழ்க



06.10.2015 இன்று கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச அரங்கில் "குரு பிரதிபா பிரபா" விருது பெறும் திருவாளர்

**சுப்பிரமணியம் கனகரத்தினம்**
அவர்கள்
B.A.Dip in EDU. SLPS II
(அதிபர் யா/மண்டைதீவு மகா வித்தியாலயம்)


மதி ஒளி பரப்பிடும் மண்டைதீவெனும் பதிதனில்
நதிபோல் அறிவு மிளிர்ந்திடும் மகா வித்தியாலயம் தனிலே
ஆசிரியப் பணிதனை ஆர்ப்பரிப்பின்றி ஆற்றி
ஆளுமை மிக்க நல் அதிபராய் மலர்ந்து
ஒப்பரிய சேவைதனைச் செப்பனிட ஆற்றியே
தார்ப்பரியம் மிக்க தயவான சிந்தை கொண்டீர்
தகுதியுடன் நல் அதிபர் விருது கண்டீர்
கடமைதனில் கருத்துடனே கண்ணியமாய் நின்ற
உடமையுடை எம் உறவே! உளமார வாழ்த்துகின்றோம்.

Best Wishes

வாழ்த்துவோர்:
உறவினர்கள்.

(65208)(10.17)

## வடமாகாண சபை உறுப்பினர் பதவிப் பிரமாணம்



அகில இலங்கை சமாதான நீதவானும்
பிரபல தொழிலதிபருமான சதாசிவம் இராமநாதன் அவர்கள்
முன்னிலையில் நேற்று (05.10.2015) திங்கட்கிழமை
கட்சி அலுவலகத்தில்
**அகிலதாஸ் சிவக்கொழுந்து**
அவர்கள் வடமாகாண சபை உறுப்பினராக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி
யாழ் மாவட்ட காரியாலயம்
80 A, கோயில் வீதி, நல்லூர்.

(65220)(10.17)

## இனிய ஆசிரியர் தின நல்வாழ்த்துக்கள்

கிளிநொச்சி இராமநாதபுரம் ம.வி

*அறிவுக்கு வித்திட்ட எம் இனிய ஆசான்களே!*
*உங்கள் வழிகாட்டலில் வளர்ந்திட்ட*
*மாணவர்கள் நாம்*
*உங்களைப் போற்றி, ஒக்டோபர் 6 தனில்*
*உங்கள் சேவை தொடர்ந்திட*
*எம் இனிய மனமார்ந்த நல் வாழ்த்துக்கள்.*

Best Wishes

பழைய மாணவர் சங்கம் - 2015
கிளி/இராமநாதபுரம் ம.வி

(63520)(10.17)

## பாராட்டிவாழ்த்துகின்றோம்

**க.இரட்ணகுமார்** SLPS 1
(அதிபர். யா/யூனியன் கல்லூரி)

Best Wishes



2015.10.06 செவ்வாய்க்கிழமை கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இலங்கை ஜனாதிபதி அதிமேதகு மைத்திரிபால சிறிசேன அவர்களினால் "பிரதிபாபிரபா" விருதினை பெற்றுக் கொள்ளும் அதிபர் திரு.க.இரட்ணகுமார் அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
விளையாட்டுத்துறைசார்ந்த,
ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/யூனியன் கல்லூரி.

## யா/யூனியன் கல்லூரி தெல்லிப்பழை
## உலக ஆசிரியர் தினம்

200 ஆவது ஆண்டு விழாவை கொண்டாட இருக்கும் எமது பாடசாலையின் பல்துறைவளர்ச்சிக்கு அரும்பாடுபட்ட அதிபர் ஆசிரியர்களை உலக ஆசிரியர் தினத்தில் பாராட்டி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம் (தாய்ச்சங்கம்)
யூனியன் கல்லூரி
தெல்லிப்பழை.

(65205)(10.17)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



பத்தாண்டு ஆசிரியசேவையாற்றி மாணவர் பலரை சாதனையாளராக்கி ஆசிரியர்களுக்கே உதாரணமாக திகழும் எமது பாடசாலை ஆசிரியரும், உப அதிபரும் தேசிய மாணவர் படையணி அதிகாரியுமான

2 Lt. **நாராயணசாமி தவகுமார்**
ஆசிரியர் அவர்கள்

உலக ஆசிரிய தினத்துக்கு இணைவாக கல்வி அமைச்சு நடத்தும் "குரு பிரதிபா பிரபா" கௌரவிக்கும் விழா 06.10.2015 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும் நிகழ்வில் கலந்து சிறப்பித்து நல்லாசிரியர் விருது பெறுவதையிட்டு நாம் பெருமையடைகின்றோம். அவர் மேலும் பல பட்டங்களையும் விருதுகளையும் பெற பாராட்டி வாழ்த்துகின்றோம்.

நலன்புரி சங்கம்
கிளி/பளை றோ.க.த.க.பாடசாலை

(65218)(1017)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



Best Wishes

யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய அதிபர்

**சூசைப்பிள்ளை நோபேட் உதயகுமார்** (SLPSI)
(B.A PGDE, MED (Hons))

அவர்கள் 23.09.2015 ஆம் திகதி சங்கானை கோட்டக்கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றதையிட்டு எமது பாடசாலைச் சமூகம் பெரு மகிழ்வடைவதோடு பல பதவி உயர்வுகளைப் பெற இந்த ஆசிரியர் தினத்தில் வாழ்த்தி நிற்கின்றோம்.

யா/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்.

ஆசிரியர் ஊழியர் நலன்புரி கழகம்.

## தமிழரைச் சிங்கள மக்கள் புரிந்துகொள்ளவேண்டும்
### வடக்கு முதல்வர் சிங்களத்தில் உரை

யாழ்ப்பாணம், ஒக். 6

எமது விருப்புக்களை – எதிர்பார்ப்புக்களை – அபிலாஷைகளை – நோக்குகளைச் சிங்கள மக்கள் புரிந்து கொண்டால்தான் புரிந்துணர்வும் – நல்லிணக்கமும் இங்கு நிலைபெறும். அதற்குரிய ஒரு செயலாக இன்றைய நிகழ்ச்சியை மாற்றி இனியாவது ஒரு வரை ஒருவர் புரிந்து கொள்ள முன் வர வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், ஜனாதிபதி முன்பாகச் சிங்கள மொழியில் கோரிக்கை விடுத்துள்ளார்.

இரணைமடுவில், ஜனாதிபதி மைத்திரி தலைமையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் வரவேற்புரையாற்றும்போது, வடக்கு முதலமைச்சர் முதலில் தமிழ் மொழியில் உரையாற்றினார். பின்னர் சிங்கள மொழியில் சிறிது நேரம் உரையாற்றினார்.

'போரினால் பாதிக்கப்பட்டுப் பல்வித அச்சங்களுக்கும் அல்லல்களுக்கும் உள்ளாகியிருக்கும் வட மாகாண மக்கள் அனைவர் சார்பிலும் உங்கள் ஒவ்வொருவரையும் வரவேற்கின்றேன்.

நீண்ட நேரம் சிங்களத்தில் பேசக் கூடிய மொழியாற்றல் எனக்கில்லை. என்றாலும் இந்த நாட்டில் சகல மக்களிடையேயும் நல்லிணக்கமும் – புரிந்துணர்வும் ஏற்படவேண்டும் என்பதில் மிக ஆணித்தரமான உறுதியுடன் செயல்பட்டு வருபவன் நான்.

நாம் சிங்கள மக்களுக்கு எதிரி அல்ல என்பதை எடுத்துக் காட்டவே நான் சிங்கள மொழியில் ஒரு சில வார்த்தைகள் பேசத் துணிந்துள்ளேன். இதுவரையில் எமது நாட்டில் இருந்து வந்திருக்கும் இடர் நிலையை மாற்ற வேண்டும் என்றால் எம்மிடையே புரிந்துணர்வு அவசியம்.

எமது விருப்புக்களை – எதிர்பார்ப்புக்களை – அபிலாஷைகளை – நோக்குகளைச் சிங்கள மக்கள் புரிந்து கொண்டால்தான் புரிந்துணர்வும் – நல்லிணக்கமும் இங்கு நிலைபெறும். அதற்குரிய ஒரு செயலாக இன்றைய நிகழ்ச் சியை மாற்றி இனியாவது ஒரு வரை ஒருவர் புரிந்து கொள்ள முன்வர வேண்டும்.

எம்மைப் பொறுத்தவரை ஒரு விவசாயியின் மகனான ஜனாதிபதி மீது எமக்கும் பலத்த எதிர்பார்ப்புக்கள் உள்ளன. அவர் தலைமையின் கீழ் நாடு சமாதானமும் சுபமும் சுபீட்சமும் எய்த இறைவன் அருள் புரிய வேண்டும் – என்றார். (த–5–ரி3)

## முதலை சிக்கியது

காலிமுகத்திடல் கடற்பரப்பில் மக்களுக்கு அச்சுறுத்தலாக விளங்கிய முதலை நேற்று பிடிக்கப்பட்டது.

கடும் போராட்டத்துக்கு மத்தியிலேயே வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள், கரையோரப் பாதுகாப்பு அதிகாரிகள் ஆகியோர் இணைந்து அதை பிடித்தனர்.

ஆரம்பத்தில் கொள்ளுப்பிட்டிக் கடற்பரப்பில் முதலையொன்று தென்பட்டது. சுமார் ஒரு வாரத்துக்குப் பின்னர் அது உயிரிழந்தது. இந்நிலையில், காலிமுகத் திடலுக்கு அண்மித்த கடற்பரப்பில் முதலைகளின் பிரசன்னம் அதிகரித்துக் காணப் பட்டதால் மக்களுக்கு அச்சம் ஏற்பட்டது.

காலிமுகத்திடலுக்கு நாளாந்தம் ஆயிரக்கணக்கானோர் செல்வர். அங்கு செல்பவர்களுள் சிலர் கடலில் நீராடு வார்கள். எனினும், முதலை நடமாட்டம் இருந்ததால் அண்மைய நாள் களில் கடலுக்குள் இறங்குவ தற்கு அஞ்சினார்கள். அத்துடன், கடற்பரப்பில் காணப்பட்ட முதலையைப் பார்ப்பதற்கும் பலர் படையெடுத்திருந்தனர். இந்நிலையிலேயே நேற்று அது பிடிக்கப்பட்டது. (த)

## ஆசிரியர் தினவிழா

கரணவாய் மகாவித்தியாலய ஆசிரியர் தினவிழா இன்று செவ்வாய்க்கிழமை பாடசாலை அரங்கில் மு.ப. 10 மணிக்கு பழைய மாணவர்சங்கத்தலைவர் ம.செல்வ ராசா தலைமையில் நடைபெற வுள்ளது. பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற கோட்டக்கல்விப் பணிப்பாளரும் கரவெட்டிமத்தியஸ்த சபைத் தவிசாளருமான சி.நற்குணலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார். (த–35)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீடித்த-நிலைத்த அபிவிருத்தியில் இடர் முகாமைத்துவம் முக்கியம்

### யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஒக்.6

நீடித்த, நிலைத்த அபிவிருத்தியில் இடர் முகாமைத்துவம் முக்கிய பங்கு வகிக்கின்றது. எல்லா இடங்களிலும் முக்கியமானதாகவும் தேவையானதாகவும் இது இருக்கின்றது. வருடாவருடம் நாங்கள் பல இடர்களை எதிர்கொண்டு வருகின்றோம். குறிப்பாக ஒக்ரோபர் முதல் ஜனவரி மாதம் வரையிலான காலப்பகுதியில் அதிக மழை காரணமாக வெள்ளப்பெருக்கு, மண் சரிவு போன்ற அபாயங்களை எதிர்கொள்கின்றோம். இதே போன்று ஜனவரி முதல் ஒக்ரோபர் வரையான காலப்பகுதியில் ஏனைய இயற்கையின் இடர்களை எதிர்கொண்டு வருகின்றோம்.

இவ்வாறு யாழ்.அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

ஆசிய பசுபிக் பிராந்தியத்துக்கான இடர் முகாமைத்துவக் கட்டமைப்பின் பொதுசன தனியார் பங்கு இடர்களுக்கு மீள்திறனுடைய நிலைத்திருக்கும் அபிவிருத்தியை நோக்கிய பயணம் எனும் தொனிப் பொருளிலான கருத்தரங்கில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அபிவிருத்தி என்பதில் சூழல் மிக முக்கிய பங்கினைப் பெறுகின்றது. அதற்குச் சூழலைப் பாதிக்கின்ற விடயங்களை குறைக்கவேண்டும். அந்த வகையிலேயே எமக்கு நன்மை பயக்கக்கூடிய விடயமாக இந்த சர்வதேசக் கருத்தரங்கு அமைந்திருக்கின்றது. ஜப்பான் பல இடர்களை எதிர்கொண்ட நாடு. அவர்கள் தங்களுடைய அறிவு சார்ந்த, செயற்பாட்டு ரீதியான, அனுபவ ரீதியான விடயங்களை பகிர்ந்து கொள்ள வேண்டும். இடர்கள் நிகழும்போது இந்தப் பொதுசன தனியார் பங்கு இடர்களுக்கு மீள்திறனுடைய நிலைத்திருக்கும் அபிவிருத்தி என்பது முக்கியத்துவம் பெறுகின்றது. அதே போன்று எந்தவொரு அபிவிருத்திச் செயற்பாட்டிலும் தனியார் மக்கள் ஒன்றிணைப்பு என்பது மிகமுக்கியமானதாகவிளங்குகின்றது-என்றார்.

இந்தக் கருத்தரங்கு நேற்று திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் யாழ்ப்பாணம் ரில்கோ சிற்றி ஹோட்டலில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், இலங்கைக்கான தேசிய பிரதிநிதி மற்றும் மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பின் நிறைவேற்று இயக்குநர் ஜீவன் தியாகராஜா,இலங்கைக்கானஜப்பானிய தூதரகத்தின் அதிகாரி சுகனுமா கென்சி, இடர் முகாமைத்துவ நிலையத்தின் இயக்குநர் மேஜர் ஜெனரல் எல்.பி.ஆர்.மார்க், யாழ். வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்தின் தலைவர் விக்னேஸ் மற்றும் இந்தோனேசியாவின் தேசிய இடர் ஆபத்துக் குறைப்புஅமையத்தின் ஆலோசகர் மற்றும் ஆசிய பசுபிக் பிராந்திய இடர் முகாமைத்துவக் கூட்ட மைப்பின் முதல்வர் பைசல் டிஜாலால் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

மேலும், ஆசிய பசுபிக் பிராந்தியத்துக்கான இடர் முகாமைத்துவக் கூட்டமைப்பால் நடத்தப்பட்ட கட்டுரை,கேலிச் சித்திரம் மற்றும் புகைப்படப் போட்டிக்கான பரிசில்களும் இதில் வழங்கப்பட்டன.

கட்டுரைப் போட்டியல் முதலாம் பரிசைச் சுதாகரன் சிவானுஜனும், புகைப்படப் போட்டியிலே முதல் பரிசை செல்வி தனுஜா அருளம்பலமும் பெற்றுக் கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது அமர்வில் ஆசிய பசுபிக் பிராந்தியத்தின் இடர்களுக்கான மீள் திறனுடைய நிலைத்திருப்புக்கு தனியார் பங்கும் அவற்றின் அனுபவப் பகிர்வும் என்றகலந்துரையாடல் நிகழ்வும் இடம் பெற்றது. (த-ரி2)

## மகிந்த மீது இன்னமும் ஊடகங்களுக்கு அச்சம்

### அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல கருத்து

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மீது ஊடகங்கள் இன்னமும் அச்சம் கொண்டுள்ளதாக நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார் .

கண்டியில் நேற்றுச் செய்தியாளர்களுக்கு அவர் கருத்து தெரிவிக்கையில், மனித உரிமைகள் குறித்து உள்நாட்டு விசாரணைகளை நடத்த முதலில் இணங்கியவர் மகிந்த ராஜபக்சதான் என்று, ஒரு நாளிதழுக்கு அளித்திருந்த செவ்வியில் நான் குறிப்பிட்டிருந்தேன். அந்த நாளிதழ் செவ்வியின் அந்தப் பகுதியைப் பிரசுரிக்கவில்லை.

மகிந்த ராஜபக்சவின் பெயரைக் குறிப்பிட்டபோது சில ஊடகவியலாளர்கள் அவருக்கு எதிராக எதையும் கூறவோ, பிரசுரிக்கவோ பயப்படுவதாகத் தெரிவித்தனர்.

2009ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்த பின்னர், இலங்கைக்கு வந்திருந்த ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூனிடம், உள்நாட்டு விசாரணைகளை மேற்கொள்வதாக மகிந்த ராஜபக்ச இணங்கியிருந்தார் என்றும் அவர் குறிப்பிட்டார். (த-வ)


**வேலையாள் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் கடல் உணவு ஏற்றுமதி முன்னணி நிறுவனமொன்றுக்கு வாகனத்தில் நன்கு அனுபவமுள்ள (AD) சாரதி அனுமதிப்பத்திரமுள்ள வாகனப் பராமரிப்பாளர் உடன் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப் படும்.

(65164) (10.17)

தொடர்பு கொள்ள : 021 3003590

**வேலைவாய்ப்பு**

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் எமது Golden Group நிறுவனத்துக்கு சந்தைப்படுத்தல் துறையில் ஆர்வமுள்ள ஆண்/பெண் இருபாலாரும் நேரடியாக தொடர்புகொள்ளவும்.

நான்கு வகையான பதவிகள்

* விநியோகஸ்தர் * மேற்பார்வையாளர்
* உதவி முகாமையாளர் * அலுவலக பெண் உதவியாளர்

சூறிப்பு : அடிப்படைச் சம்பளம் அத்துடன் (கொமிசன்)

*தங்குமிடம், உணவு, இலவசம்

*அனுமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

* முகவரி: இல.08, 6ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

(65217)(10.17)

தொடர்புக்கு:

077 62 19 536, 077 99 87 699

**31ஆம் நாள் நீங்கா நினைவலைகள்**



மலர்வு 09.02.1947 உதிர்வு 06.09.2015

**அமரர் செல்வத்துரை குமரவேள்**

கடந்த 2015.09.06 அன்று இறைபதமெய்திய எனது அன்புச் சகோதரனின் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப்பிரார்தனையும் இன்று (06.10. 2015) செவ்வாய்க்கிழமை கந்தர்மடம் குமாரசாமி வீதியில் உள்ள சிவகுருநாதர் பீடம் மகாதேவா ஆச்சிரமத்தில் நடைபெறும். இந்த ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

128/6, பலாலி வீதி, திருநெல்வேலி. 077 4274695

திருமதி சோமநாதன் குடும்பம் (சகோதரி)

(65216)(10.17)


## பட்டதாரிகள் நியமனம்; கோரிக்கை சம்பந்தனிடம்

பட்டதாரிகள்நியமனம்தொடர்பான கோரிக்கை இரா.சம்பந்தனிடம் கையளிக்கப்பட்டுள்ளதுஎனவடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் சமூகம் கடந்த செப்ரெம்பர் மாதம் 22ஆம் திகதி மேற்கொண்ட கவனவீர்ப்பு நடவடிக்கையைத்தொடர்ந்துமாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் வேலையற்ற பட்டதாரிகளின் பிரதிநிதிகள் இணைந்து செயற்பாட்டு இணைப்புக்குழு உருவாக்கப்பட்டு அதன் இரண்டாவது சந்திப்பு ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி பேரவைச் செயலகத்தில் இடம்பெற்றிருந்தது. இதன்படி எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனின் கவனத்துக்கு இந்த விடயம் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும், பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கக்கூடிய-வடக்கு மாகாணசபையில் ஏற்கனவே வெற்றிடமாக உள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கான நியமனங்களை உடன் வழங்குவதற்கு வடக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழு அல்லது மத்திய பொது நிர்வாக அமைச்சு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும், வடக்குமாகாணசபைமேலதிகமாக உருவாக்கியுள்ள 851அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளுக்கான அங்கீகாரத்தைத் துரிதமாக முகாமைத்துவசேவைகள்திணைக்களம் வழங்க வேண்டும் எனவும் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் கூறினார். (த-ரி2)

# தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் விபத்தில் சாவு

யாழ்ப்பாணம், ஒக். 6

கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் பணிபுரியும் தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர், நேற்றுக் கடமை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது விபத்துக்குள்ளாகிச் சில நிமிடங்களில் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

அவர் கோப்பாய் பொலிஸ் நிலையத்திலிருந்து தனது மோட் டார் சைக்கிளில் வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது கோப்பாய் பூதர்மடம் பகுதியில் நேற்றிரவு இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

பருத்தித்துறை கற்கோவளத்தைச் சேர்ந்த சிவகுரு மணிமாறன் (வயது - 32) என்றதமிழ்பொலிஸ் உத்தியோகத்தரே அவ்வாறு உயிரிழந்தார். அவர் திருமணம் முடித்து 7 மாதக் குழந்தையின் தந்தை.

2010 ஆம் ஆண்டு பொலிஸில் இணைந்துபலபொலிஸ்நிலையங்களிலும் பணியாற்றி இறுதியாக யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அலுவலகத்தில் பணியாற்றி வருடாந்த இடமாற்ற அ[illegible] யில் கோப்பாய் பொலி[illegible] யத்துக்கு இடமாற் றம் பெற்றுச் சென்றிருந்தார். இந்நிலையில், அவர் பணியை முடித்துவிட்டு வழமைபோன்று கற்கோவளத்திலுள்ள தனது வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்த போது விபத்துக்குள்ளானார்.

விபத்தையடுத்து வீதியால் சென்றவர்கள் கோப்பாய் பிரதே வைத்தியசாலைக்கு அறிவித்துள்ள னர். அம்புலன்ஸ் சம்பவ இடத் துக்குச் சென்றுபடுகாயமடைந்தநிலையில் இருந்த அவரை யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று கொண்டிருக் கும்போது இடைவழியில் அவர் உயிரிழந்துவிட்டார் எனப் போதனா வைத்திய சாலையில்சேர்த்துப்பரிசோதனை மேற்கொண்டபோதுதெரியவந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மணிமாறனின் சடலம் தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. அவரது மனைவி யாழ்.கச்சேரியில் திட்டமிடல் பிரிவில் பணிபுரிகிறார். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார்மேற்கொண்டுள்ளனர். [illegible] பொலிஸ் உத்தியோகத்தர் இவர் என்று தெரிவிக்கப்படுகிறது.(த-4)


**மரண அறிவித்தல்**

**திருமதி அன்னலட்சுமி நவரட்ணம்**



தலையாழி யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னலட்சுமி நவரட்ணம் (இளைப்பாறிய ஆசிரியை- கொக்குவில் இந்துக் கல்லூரி, பெரியபுலம் மகா வித்தியாலயம்) நேற்று (05.10.2015) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சேக்ஸ்பியர் நாகலிங்கம் -சொர்ணலட்சுமி தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான கனகசபை-செல்லம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற Dr. நவரட்ணத்தின் அன்பு மனைவியும், திருமதி நித்தியலட்சுமி குணபாலசிங்கம், காலஞ்சென்றவர்களான Dr. யோகநாதன், இராமநாதன் ஆகியோரின் சகோதரியும், திருமதி சிவகுமாரி யோகநாதன், திருமதி கண்மணி ஞானசந்திரமூர்த்தி, சீவரத்தினம், அரியரத்தினம் காலஞ்சென்ற குணரட்ணம் ஆகியோரின் மைத்துனியும், Dr. பவானி, சின்னையா (எஞ்சினியர், அமெரிக்கா), மாலினி, Dr. காந்திஜி, பாமினி, வதனி சிவயோகன், சுதர்சினி, Dr. சஞ்ஞெயன் சிவாஜினி, சிவசங்கர், ராதபிரியா, Dr. சிவந்தன் வித்தியா ஆகியோரின் மாமியும், சக்திதரன், நந்தினி, வீரையா, சறோ ஆகியோரின் பெரியம்மாவும் ஆரூரன், அரவிந்தன், அபிராமி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.10.2015) புதன்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

958/31, கே.கே.எஸ். வீதி தலையாழி, யாழ்ப்பாணம். 021 222 0890

(65227) (10.17)

தகவல்: குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலமைப்பரிசில்

ஆணையாளர் டபிள்யு. எம்.என்.ஜே. புஷ்பகுமார தெரிவித்தார்.

பெறுபேறுகளை வெளியிடுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என குறிப்பிட்டுள்ள ஆணையாளர், ஏற்கனவே அறிவிக்கப்பட்டதன் பிரகாரம் எதிர்வரும் திங்கட்கிழமை பெறுபேறுகள் வெளியாகும் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, புலமைப் பரிசில் பரீட்சை விடைத்தாள்கள் திருத்தம் கடந்த செப்ரெம்பர் மாதம் 9ஆம் திகதி தொடக்கம் 14ஆம் திகதி வரை நடைபெற்றது. இப்பணிகளில் 6ஆயிரத்து 256 ஆசிரியர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். நாடு முழுவதும் அமைக்கப்பட்டிருந்த 2ஆயிரத்து 907 பரீட்சை மத்திய நிலையங்களில் 8 இலட்சத்து 40ஆயிரத்து 926 மாணவர்கள் பரீட்சை எழுதியமை குறிப்பிடத்தக்கது. (த-வ)

## இடியுடன்

பெறப்பட்டுள்ளது. இந்த வருட முடிவில் 700 - 1000 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது. இடப் பருவப் பெயர்ச்சி காற்றின் பருவம் ஆரம்பித்துள்ளதால் இடி மின்னல் பாதிப்புகளில் இருந்து மக்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும்படி அறிவுறுத்தப்படுகிறீர்கள்.

பிற்பகலிலும் இரவிலும் இதன் தாக்கம் அதிகமாக இருப்பதால் , மக்கள் எச்சரிக்கையுடன் செயற்படவேண்டும்.

நேற்றுமுன்தினம் சராசரி வெப்ப நிலையாக 26.6 பாகை செல்சியஸ் சும், நேற்றுக் காலை 8:30 மணி தொடக்கம் பிற்பகல் 2:30 மணிவரை சராசரி வெப்பநிலையாக 29.8 பாகை செல்சியஸ்சும் பதியப்பட்டன–என் றார். (த-ரி4)

## 3 ஆண்டுகளில்

கச் செலவு செய்கின்றோம். குரக்கன், சோயா போன்றவற்றை இப்பொழுதும் இறக்குமதி செய்வது குறிப்பிடத்தக்கது.

எமது நாட்டில் 23 வீதம் போசாக்கு குறைவான நோய்த்தாக்கம் உள்ளவர்கள் இருக்கின்றார்கள். எனவே இலங்கையை தன்நிறைவுள்ள விவசாய உற்பத்தி நாடாக மாற்றிச் சிறந்த போசாக்கு உள்ள சமூகத்தைக் கட்டியெழுப்பவேண்டும், மதுபானங்கள், போதைப்பொருள்கள் போன்றவற்றின் பயன்பாட்டையும் கொஞ்சம் கொஞ்சமாக இல்லாது ஒழிக்க வேண்டும். இன்றும் 3 ஆண்டுகளுக்குள் சிறந்த விவசாய நாடாக மாற்றவேண்டும்.

இந்தத் தேசிய உணவு உற்பத்தி வேலைத்திட்டத்தின் ஆரம்ப இடமாகக் கிளிநொச்சியைத் தெரிவு செய்தமை இங்குள்ளவர்களுக்கு வழங்கப்படும் கௌரவம். எந்தவொரு விவசாயம் செய்யக்கூடிய ஒரு சிறுதுண்டு நிலப் பரப்பையேனும் விவசாயம் செய்யாமல் வைத்திருக்கவிடமாட்டேன். காணி இருந்தும் விவசாயம் செய்ய முடியாதவர்கள் இருந்தால் வேறு ஒருவருக்கு விவசாயம் செய்ய வாய்ப்பளிக்க வேண்டும்.

நாம் சாதாரணமாகப் பூச் சாடியினுள் சிறு தானியவகைப் பயிர்களை வளர்க்க முடியும். தாம் இந்த வேலைத் திட்டத்தை நாடு முழுவதும் செயற்படுத்தவுள்ளோம். இந்தத் திட்டம் வெற்றி பெறுவதற்கு அனைவரும் ஒத்துழைப்புத் தரவேண்டும் –என் றார். (த-ரி3)

## உள்ளக

யிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஐந்து நாள் பயணமொன்றை மேற்கொண்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜப்பானுக்குச் சென்றுள்ளார். இதில் நேற்று ஜப்பான் வெளிவிகார அமைச்சரைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தினார்.

இதன்போது கருத்து வெளியிட்ட ஜப்பான் வெளிவிகார அமைச்சர், சர்வதேச சமூகத்தின் நன்மதிப்பை பெற்றுக் கொள்வதற்காக இலங்கையின் புதிய அரசு மேற்கொண்டு வரும் முயற்சி வரவேற்கப்பட வேண்டியது. இலங்கை நெருங்கிய நட்பு நாடு. இலங்கையைப் புதிய நாடாகக் கட்டியெழுப்ப ஜப்பான் அரசு பூரண உதவி வழங்கும்.

உங்கள் வருகையின்போது நடைபெற்ற பேச்சுக்கள் மூலம் நம் உறவு ஆழமாகும் என நான் நம்புகிறேன் என ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் புமியோ கிஸிடா குறிப்பிட்டார்.

இதேவேளை, தனது ஐந்து நாள் பயணத்தில் ஜப்பானுடனான ராஜதந்திர உறவை வலுப்படுத்துவேன் எனப் பிரதமர் ரணில் தெரிவித்தார். அத்துடன் ஐ.நா பாதுகாப்புச் சபையில் ஜப்பானுக்கு நிரந்தர இடம் கிடைக்க இலங்கை உதவும் எனவும் அவர் உறுதியளித்தார் என அதில் தெரிவிக் கப்பட்டுள்ளது. (த-வ)

## கிரிதல

துள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுவதாகவும் பொலிஸ் தலைமையகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஊடகவியலாளர்பிரகீத்எக்னெலிகொட கடத்தப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருந்தார் எனச் சந்தேகிக்கப்படும் கிரிதல படைமுகாமைச் சோதனையிடுமாறு சட்டமா அதிபரால் வழங்கப்பட்ட அறிவுரைக்கமைவாக நடந்த சோதனையின்போது மேற்படி படையினர் 11 பேரும் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன் கிரிதல படைமுகாமைச் சோதனை செய்யக் கடந்த 28 ஆம் திகதி ஹோமகம நீதவான் நீதிமன்று குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு அனுமதி வழங்கியது. இந்நிலையில் கைது செய்யப்பட்ட 11 படையினரும் கடந்த 3ஆம் திகதி முதல் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை கிரிதல படைமுகாமில் தடுத்து வைத்து விசாரணை செய்யப்படுவர் என அதில் தெரிவிக் கப்பட்டுள்ளது. (த-வ)

## ராணுவம்

மைத்திரிபாலவும் கமநல அமைச்சரும் வயலில் இறங்கி நாற்று நடுகையை ஆரம்பித்து வைத்தனர்.

ஜனாதிபதியின் செயலாளர் அபயக்கோன், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், கமத்தொழில் அமைச்சர் துமிந்த திஸநாயக்க, பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் நவீன் திஸநாயக்க, துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அலுவல்கள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க, அமைச்சர் மகிந்த சமரவீர, மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சர் ரிசாத் பதியுதீன், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், மாவட்ட அரச அதிபர்கள், பிரதேச செயலாளர்கள், அரச ஊழியர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (த-ரி3)

## தனித்து

சரித்திர ரீதியாக பன்னெடுங்கால மாகத் தமிழ் பேசும் வட - கிழக்கு மாகாண மக்கள் இந்தப் பிரதேசங்களில் பெரும்பான்மையின மக்களாகவே வாழ்ந்து வந்திருக்கின்றார்கள், வருகின்றார்கள். இரு மரங்கள் ஒருமித்து பக்கம் பக்கமாக வாழ்தலையே எமது மக்கள் விரும்புகின்றனர். பிறிதொன்றுக்குக் கொடியாக வளைந்திருக்க விரும்பவில்லை. இவ்வாறு வடக்கு முதலமைச்சர் குறிப்பிட்டார்.

உணவுப் பாதுகாப்பும் நிலையான விவசாயமும், தேசிய வேலைத் திட்டம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் இரணைமடுவில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் வரவேற்புரை நிகழ்த்துகையிலேயே, வடக்கு முதலமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

மைத்திரி ஆட்சி உதிக்க மனமுவந்து முன்வந்தவர்கள் எங்கள் மக்கள். முன்னைய ஜனாதிபதி தனது தோல்வி இந்த நாட்டின் சிறுபான்மையினரால் ஏற்படுத்தப்பட்டதென்று வெளிப்படையாகக் கூறியிருந்தார். எனவே மைத்திரி ஆட்சியில் நல்லிணக்கம் கொண்ட நிலையான நாட்டை உருவாக்க உத்தேசித்திருக்கும் எமது ஜனாதிபதியும் அவரின் அமைச்சர்களும், அலுவலர்களும், ஆதரவாளர்களும் எம்மால் வரவேற்கப்பட வேண்டியவர்கள்.

உள்நாட்டில் உற்பத்தியை ஊக்குவிக்கவும், சுயநிறைவை ஏற்படுத்தவும், சேதன உரத்தை வெகுவாக மக்கள் மத்தியில் அறிமுகப்படுத்தவும், உற்பத்தித் திறனை மேம்படுத்தவும் இன்னோரன்ன காரணங்களுக்காகவும் இந்த நிகழ்ச்சியை வரவேற்கின்றோம்.

பல வருட காலமாகப் பலரால் மறக்கப்பட்டிருந்த அல்லது மறைக்கப்பட்டிருந்த எமது மக்கள் மத்தியில் இருந்து தேசிய ரீதியான ஒரு நிகழ்வை இன்று முடுக்கி விடுவது, வருங்காலத்தில் பலமான தேசிய ஒருமைப்பாட்டையும் –நிலையான நிலைமைப் பாட்டையும் உண்டு பண்ண உதவும் என்று எதிர் பார்க்கின்றோம்.

வளைந்து கொடுக்க
விரும்பவில்லை

பெரும்பான்மையின மக்கள் மரமாகவும் சிறுபான்மையின மக்கள் கொடியாகவும் இணைந்து வாழ்வதே தேசிய ஒருமைப்பாடு என்ற எண்ணம் இந்த நாட்டில் பலர் மத்தியிலும் இருந்து வந்திருக்கின்றது. வட - கிழக்கு மாகாண மக்கள் அதை ஏற்கவில்லை. ஏற்கவும் முடியாது. காரணம் சரித்திர ரீதியாக பன்னெடுங்கால மாகத் தமிழ்ப் பேசும் வட - கிழக்கு மாகாண மக்கள் இந்தப் பிரதேசங்களில் பெரும்பான்மையின மக்களாகவே வாழ்ந்து வந்திருக்கின்றார்கள், வருகின்றார்கள்.

சென்ற நூற்றாண்டின் முதற் பகுதியில் சிங்களத் தலைவர்களாகிய சேர் ஜேம்ஸ் பீரிஸ், ஈ.ஜே.சமரவிக்கிரம ஆகியோர் இதை வலிந்து குறிப்பிட்டிருந்தார்கள். வடக்கு கிழக்கில் தமிழ் பேசும் மக்கள் எப்பொழுதுமே பெரும்பான்மையினராக வாழ்ந்து வந்துள்ளார்கள் என்று கூறியிருந்தனர். எனவே மதிப்புடனும் மரியாதையுடனும் எமது மக்கள் வாழவேண்டும் என்றால் எம்மை அவ்வாறான சிறப்பியல்புகளுடன் ஏற்கவேண்டும். இரு மரங்கள் ஒருமித்து பக்கம் பக்கமாக வாழ்தலையே எம்மக்கள் விரும்புகின்றனர். பிறிதொன்றுக்குக் கொடியாக வளைந்திருக்க விரும்பவில்லை.

அடிமைப்படுத்தும்
நடவடிக்கைகள்

உணவுப் பாதுகாப்பு கொடுக்கும்போது மக்கள் பாதுகாப்பும் அவர்களுக்குத் தேவை. இல்லையென்றால் வலிந்து வைத்து வாழ்வாதாரங்கள் வழங்குவது போல் ஆகிவிடும். பயத்தை ஏற்படுத்தி, வலிந்து தம்வசம் வைத்து, வாழ்வாதாரங்கள் கொடுத்து எம்மக்களை அடிமைகள் போல் நடத்தும் சந்தர்ப்பங்கள் அண்மைக் காலங்களில் எமது கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

இது வரை காலமும் எமது மக்களிடையே அவர்களின் தேவைகள் பற்றிய ஒரு முழுமையான சகல துறைகள் சம்பந்தமான மதிப்பீடு, சகல மட்டத்திலும், முக்கியமான சர்வதேச உதவி நிறுவனங்களின் உதவியுடன் செய்யப்படவில்லை. 2003 ஆம் ஆண்டில் இது நடைபெற்றது. உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்றவற்றின் உதவியுடன் ஐக்கிய நாடுகள் நிறுவனம் இதைச் செய்தது. ஆனால் அதன்பின் நடைபெறவில்லை.

இது நடைபெறவேண்டும். நாம் அண்மையில் ஐக்கிய நாடுகள் சபை யிடம் கேட்டதோ சகலதுறை - சகல மட்டத் தேவை பற்றிய ஆய்வறிக்கை. எமக்குக் கிடைத்ததோ மனித நல ஆய்வறிக்கை மட்டுமே. அதுவும் எம்மக்களின் சகஜ வாழ்வுக்கு முட்டுக் கட்டையாக இருக்கும் காரணிகள் பல திடமாக அதில் ஆராயப்படவில்லை.

மாகாணத்தை மத்தி
புறக்கணிக்கின்றது

எமது காணிகள் மற்றோரின் வசம், உரியவர்கள் உட்செல்ல முடியாத நிலை, வாழ்வாதாரங்கள் வழங்காத நிலை, போருக்குப் பின்னரான விரக்தி நிலை என்பன அதில் ஆராயப்படவில்லை. சமூகத்தில் போரின் தாக்கங்களைப் புரிந்துகொள்ள நாம் எத்தனிக்கவில்லை. வறுமை நிலை போக்க வழி வகைகள் ஆராயப்படவில்லை. மக்கள் பிரதிநிதிகளுடன் சேர்ந்து மக்கள் தேவைகளை ஆராய முற்படவில்லை. இது போர் முடிவடைந்த உடனேயே நடைபெற்றிருக்க வேண்டும்.

அதற்குப் பதிலாக மேலிருந்து தமக்கு உகந்ததைத் தரவே மத்திய அரசு விரும்புகின்றது. கீழ் மட்டத்தில் மக்களிடம் இருந்து எங்கள் தேவைகளை அறிந்துணர்ந்து செயற்பட விரும்பவில்லை. மக்கள் பிரதிநிதிகளைப் புறக்கணித்தே மக்கள் சேவையில் ஈடுபட மத்தியானது விரும்புகின்றது.

ஏமாற்றம்

2003 ஆம் ஆண்டில் நடைபெற்றது போல முழுமையான தேவைகள் சம்பந்தமான ஆய்வறிக்கைகளைப் பெற்று மாகாண அபிவிருத்திக்கான மேன்மைத் திட்டம் ஒன்றை உருவாக்கி மக்களின் கருத்துக்களைச் செவிமடுத்து அவற்றை நடைமுறைப் படுத்த விழைந்தால் நாம் அதற்கு ஒரு போதும் தடையாக இருக்கமாட்டோம். மாறாக எமது தற்போதைய நிலையை அறிய விரும்பாமல் எமது பாதிப்புக்களை பல மட்டங்களிலும் ஆய்வு செய்ய எத்தனிக்காமல், முழுமையான முன்னெடுப்புகளை முடுக்கிவிட மனம் இல்லாமல், மனித தேவைகளின் ஒரு அங்கத்தை மட்டும் வலியுறுத்தி இந்த நிகழ்வு நடைபெறுவது எமக்கு ஏமாற்றத்தை அளிக்கின்றது – என்றார். (த-5-ரி3)

## இலங்கையை

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது:-

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உலக நீதி இரண்டு தரிசனங்கள் கண்டது. ஒன்று, மில்லியன் கையொப்பமிடல் போராட்டத்தின் ஊடாக 1.4 மில்லியன் மக்கள், இலங்கை குறித்து தீர்மானத்தில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் அமைக்கக் கோரினர்.

வடக்கு மாகாண சபை, தமிழக சட்ட சபை மற்றும் நாடு கடந்த தமிழீழ அரசின் நாடாளுமன்றம் ஆகியன நிறைவேற்றிய தீர்மானங்களில், இலங்கையின் இடம்பெற்றது போர்க்குற்றங்கள் அதாவது மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலையை விசாரணை செய்வதற்குச் சர்வதேசப் பொறிமுறை அமைக்கப்படவேண்டுமென வலியுறுத்தப் பட்டது.

அத்துடன் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கையின் பொறுப்புக் கூறலில் உள்நாட்டுப் பொறிமுறை போதாது, சிறப்பு கலப்பு நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டுமெனப் பரிந்துரைத்தார்.

ஐ. நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் இலங்கை அரசுக்குச் சார்பான வகையில் அமைந்துள்ளது. நம்பகமான நீதிச் செயல்முறையில் சுயாதீன மற்றும் ஒருமைப்பாடு கொண்ட நீதித் துறையினரின் தலைமையில் உள்ள நீதிப்பொறிமுறை அமைக்கப்பட வேண்டும். அதில் பொதுநலவாய மற்றும் வெளிநாட்டு நீதிபதிகள், சட்டவாளர்கள், விசாரணையாளர்கள் மற்றும் புலனாய்வாளர்களை உள்ளடக்கிய விசேட சட்ட அலுவலகம் நிறுவப்பட்டு உள்ளடக்கப்படவேண்டும்

இலங்கையில் உள்ளக குற்றவியல் விசாரணை மற்றும் சட்ட நடைமுறை பக்கச் சார்பானதும் அரசியல் தலையீட்டுடன் கூடியதும் என்பது அனைவருக்கும் தெரிந்த விடயமேயாகும். இலங்கைக்கும் ஐ.நா. அமைப்புக்கும் இடையிலான இணக்கப்பாட்டின் அடிப்படையில் கலப்பு நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டியது அவசியமானது–என்றுள்ளது. (த-வ)

## உள்நாட்டு

இலங்கையின் ஒட்டுமொத்த நீதித் துறையிலும் குறைபாடுகள்– பிரச்சினைகள் காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் டெஸ்மன் டி சில்வா மேலும் தெரிவித்துள்ளதாவது:-

குற்றச் செயல்களை விசாரணை செய்யும் விசாரணைப் பிரிவு, சட்டமா அதிபர் திணைக்களம், நீதிமன்றக் கட்டமைப்பு ஆகியனவற்றில் பிரச்சினைகள் காணப்படுகின்றன. விசாரணை நடத்தி குற்றவாளி தண்டிக்கப்பட்டால் மேன்முறையீடு செய்ய வாய்ப்பு உண்டு. மேன்முறையீட்டு விசாரணை மேலும் காலத்தைக் கடத்தக்கூடிய செயற்பாடு.

உள்நாட்டு நீதிபதிகள் துரித கதியில் வழக்கு விசாரணை செய்து தண்டிக்க நாட்டம் காட்டுவார்கள் எனக் கருதப் பட முடியாது.

இலங்கை நீதிமன்றக் கட்டமைப்பு கலாசாரத்தில் துரித விசாரணை என்பதற்கு இடமேயில்லை. பொலிஸ் நிலையங்களில் சித்திரவதைகள் அதிகளவில் இடம்பெற்று வருகின்றன. சில அதிகாரிகளால் துன்புறுத்தல்களை மேற்கொள்ளாது விசாரணை நடத்த முடியாத நிலைமை காணப்படுகின்றது.

பலவந்த காணாமற்போதல்கள் இலங்கையில் குற்றச் செயலாக அறிவிக்கப்படவில்லை. சட்டமாக இயற்றப்பட்டு எதிர்காலத்தில் நடைமுறைப் படுத்தப்பட்டாலும் அந்தச் சட்டத்தின் ஊடாக கடந்த கால குற்றச் செயல்களைத் தண்டிக்க முடியாது.

இதனால் கடத்தப்பட்ட மற்றும் காணாமற்போனவர்களின் குடும்ப உறுப்பினர்கள் பாதிக்கப்படுவர். ஐ. நா மனித உரிமைகள் சபையின் தீர்மானம் இலங்கையின் நீதிமன்றத்துறையில் நிலவி வரும் சிக்கல்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணச் சிறந்த சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது –என்றார். (த-வ)

## நாணய

கான நிதி உதவிகளை அதிகளவில் பெற்றுக்கொள்ள இந்தப் பயணத்தைப் பயன்படுத்திக் கொள்ளப் போவதாக நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார். (த-வ)

## வடக்கு

ஜனாதிபதியுடன் பேசியதாக, வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் உதயன் பத்திரிகைக்குத் தெரிவித்தார்.

வடக்கு மாகாணம் உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடையவேண்டும் என்பதில் நாங்கள் விருப்பமாக இருக்கின்றோம் என்று ஜனாதிபதியிடம் தெரிவித்தேன். அதற்கு அவர், உதவி செய்வதாக உறுதியளித்தார். எங்களுடைய நிர்வாகப் பிரச்சினைகள் தொடர்பில் அவரது கவனத்துக்குக் கொண்டு சென்றேன். அதனைக் கவனத்தில் கொள்வதாக ஜனாதிபதி வாக்குறுதி வழங்கினார்.

குறிப்பிட்ட சில பிரதேச செயலாளர்கள் மற்றும் மத்திய அரசின் உத்தியோகத்தர்கள் தாம், வடக்கு மாகாண சபைக்குக் கடமைப்பட்டிருக்கவில்லை, மத்திய அரசின் கீழ் பணியாற்றுபவர்கள் என்ற எண்ணத்துடன் செயற்படுகின்றனர். அவர்கள் வடக்கு மாகாண சபையுடன் இணைந்து செயற்படுவதைப் புறக்கணித்து வருகின்றார்கள். இது நல்லதல்ல என்று ஜனாதிபதி தெரிவித்தார். எல்லோருமே மக்களுக்காகவே சேவை செய்கின்றனர். அவர்கள் ஒவ்வொரு வழியிலும் உங்களுக்கு உதவவேண்டும் என்று ஜனாதிபதி குறிப்பிட்டார்.

மேலும், எமது அமைச்சுக்கள் ஒவ்வொன்றினாலும் பல்வேறு கோரிக்கைகள் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டன. அதனைச் சம்பந்தப்பட்ட மத்திய அமைச்சுகளைப் பார்க்கச் சொல்வதாக ஜனாதிபதி குறிப்பிட்டார் என்று முதலமைச்சர் கூறினார். (த-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி வைத்தியசாலையில் தேக்கமடையும் கழிவுப் பொருள்

## அருகில் உள்ள குடியிருப்பாளர்கள் பெரும் சுகாதாரச் சீர்கேட்டால் சிரமம்

சாவகச்சேரி,ஒக். 6
சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் தினமும் சேரும் கழிவுகள் நீண்ட காலமாக அப்புறப்படுத்தப்படாமல் குவிக்கப்பட்டிருப்பதால் அவற்றிலிருந்து எழும் துர்நாற்றம் தாங்க முடியவில்லையெனவும், அவற்றை நாய்களும், பறவைகளும் எடுத்து வந்து தமது வீடுகளிலும் கிணறுகளிலும் போடுவதால் பெரும் சுகாதாரச் சீர்கேடு காணப்படுகின்றது எனவும் வைத்தியசாலைக்கு அருகில் உள்ள குடியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

விடுதிகள் மற்றும் வெளிநோயாளர் பிரிவு, பிரசவ விடுதி போன்றவற்றில் பயன்படுத்தும் இரத்தம் கலந்த பஞ்சுகள் மற்றும் துணிகள், வைத்தியத் தேவைக்குப் பயன்படுத்தும் பொருள்கள், பைகளில் கட்டப்பட்டு வைத்தியசாலை வளாகத்தில் ஓரிடத்தில் குவிக்கப்பட்டுக் காணப்படுவதால் அவற்றைக் கால்நடைகளும் பறவைகளும் எடுத்துச் செல்கின்றன. முன்னர் வைத்தியசாலை வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்த இவ்வாறான பொருள்களைத் தீயிட்டு அழிக்கும் எரியூட்டி கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக உடைந்து சேதமடைந்து காணப்படுவதால் சாவகச்சேரி நகரசபை வாகனங்களில் கழிவுகள் அப்புறப்படுத்தப் படுவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. எனினும் கடந்த சில மாதங்களாக நகர சபையினரால் அப்புறப்படுத்தப்படாமல் அவை மக்கள் குடியிருப்புக்களை அண்டிய பகுதிகளில் குவிக்கப்படுகின்றன. தற்போது மழைகாலம் ஆரம்பித்துள்ளதால் குவிக்கப்பட்டுள்ள கழிவுகளிலிருந்து எழும் துர்நாற்றம் தாங்க முடியாத அளவு உள்ளது என்றும் குடியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக வைத்தியசாலை நிர்வாகம், சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களம் மற்றும் சாவகச்சேரி நகரசபை, மாகாண சபை உறுப்பினர் அலுவலகம் போன்றவற்றில் முறையிட்டும் பயன் கிடைக்கவில்லையெனவும், இந்த விடயம் தொடர்பாக மாகாண சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாகச் சாவகச்சேரி வைத்தியசாலை நிர்வாகத்திடம் கேட்டபோது;
வைத்தியசாலை வளாகத்தில் சுகாதார திணைக்களத்தினால் அமைக்கப்பட்டு வழங்கப்பட்ட எரியூட்டி உடைந்து சேதமடைந்ததால் அதனைப் பயன்படுத்துவதில்லையென்றும், தினமும் சேரும் கழிவுகள் நகரசபையினரால் அப்புறப்படுத்தப்பட்டு வந்ததென்றும், தற்போது உக்கக்கூடிய கழிவுகளை மட்டும் அப்புறப்படுத்துவதாகவும், வைத்தியசாலைக் கழிவுகள் அப்புறப்படுத்துவதில்லையெனவும், இது தொடர்பாக உரிய அதிகாரிகளுக்குப் பல தடவைகள் அறிவித்தும் உரிய நடவடிக்கை எடுக்கவில்லையென்றும் தெரிவித்தனர்.

இவ்வாறான கழிவுகளை வேறு வைத்தியசாலைகளில் உள்ள வைத்தியசாலைகளின் எரியூட்டிகள் மூலம் அழிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளுமாறும் அல்லது வைத்திய சாலை வளாகத்தில் உரிய தொழில்நுட்ப முறையுடன் எரியூட்டி அமைத்துத் தருமாறும் அறிவித்தும் இதுவரை தீர்க்கமான முடிவு வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக சாவகச்சேரி நகர சபையுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, தற்போது திண்மக் கழிவு முகாமைத்துவத்தின் கீழ், நகரத்தில் சேரும் குப்பைகளைத் தனித்தனியாக வேறாக்கிப் பதப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. முன்னரைப் போல தினமும் சேகரிக்கப்படும் கழிவகளை எரியூட்டி அழிக்கும் செயற்பாடு நிறுத்தப்பட்டுள்ளது. வைத்தியசாலை வளாகத்தில் சேரும் விடுதிகள், வெளிநோயாளர் பிரிவு போன்றவற்றில் பயன்படுத்தும் ஊசிகள், சிறுசிறு போத்தல்கள் போன்றவை தவிர்ந்த குப்பைகள் மற்றும் சமையலறைக் கழிவுகள் தினமும் அப்புறப்படுத்தப்பட்டு வருகின்றன எனத் தெரிவித்தனர்.

இந்த விடயத்தில் வட மாகாண சுகாதார அமைச்சும், யாழ்.பிராந்திய சுகாதாரத்திணைக்களமும் விரைந்து நடவடிக்கை எடுக்கத் தவறின் அயலில் உள்ள பல குடும்பங்கள் சுகாதாரச் சீர்கேட்டை எதிர்நோக்கி பலவேறு கொடிய நோய்களுக்கு ஆளாக நேரிடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

(ஐ-9)

# என்னை அரசியலிலிருந்து ஒதுக்க அமைச்சர் ஒருவர் முயற்சிக்கிறார்

## கீதா குமாரசிங்க ஆதங்கம்



கொழும்பு, ஒக்.6
அமைச்சர் ஒருவர் தன்னை அரசியலிலிருந்து ஒதுக்க முயற்சித்து வருவதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

குறித்த அமைச்சர் நான் அரசியலில் ஈடுபடுவதை விரும்பவில்லை. நான் பொதுத்தேர்தலுக்காக வேட்பு மனுத்தாக்கல் செய்தபோது சுவிற்ஸர்லாந்து குடியுரிமை பற்றி கேள்வி எழுப்பியிருக்கவேண்டும். உண்மையில் தற்போது எனக்கு சுவிற்ஸர்லாந்தின் குடியுரிமை கிடையாது. சுவிற்ஸர்லாந்து குடியுரிமையை நீக்கிக் கொண்டேன்.

குடியுரிமையை நீக்க ஆவணங்களைச் சமர்ப்பித்த தினம் கடுமையான துயரம் ஏற்பட்டது, நான் சாப்பிடாமல் அழுது கொண்டிருந்தேன்.

நான் அரசியலில் ஈடுபடுவது பிடிக்காத அமைச்சர் என்னை எப்படியாவது வெளியேற்ற முயற்சிக்கின்றார் எனக் கீதா குமாரசிங்க தெரிவித்தார். (த)

# புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு சுதந்திரம் வழங்கியது நவ்று அரசு

யாரென், ஒக்.6
நவ்று தீவில் உள்ள இலங்கையர்கள் உள்ளிட்ட 600 புகலிடக் கோரிக்கையாளர்களின் விண்ணப்பங்கள் இந்த வாரத்துக்குள் பரிசீலிக்கப்படும் என்று நவ்று அரசு அறிவித்துள்ளது.

இந்த முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்கள் இனிமேல் நவ்று தீவு எங்கிலும் சுதந்திரமாகச் சென்றுவரக் கூடிய விதத்தில் அது திறந்த முகாமாகும் என்றும் நவ்று அதிகாரிகள் நேற்றுத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் ஏ.எப்.பி.செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளதாவது:-
ஆஸ்திரேலியாவுக்குப் படகுகள் மூலம் சட்டவிரோதமான முறையில் செல்லும் இலங்கையர்கள் உள்ளிட்ட ஆசியாவைச் சேர்ந்தவர்களை அந்தநாட்டு அரசு தனது பிராந்தியமான நவ்று தீவிலுள்ள அகதி முகாம்களில் தடுத்து வைக்கும். இங்கு பலர் பல ஆண்டுகளாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களைச் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கும் செயல்முறை நவ்றுவுக்கு ஒரு மைல்கல் என அந்தநாட்டு நீதி அமைச்சர் டேவிட் அடேங் தெரிவித்துள்ளார். இந்தத் திட்டம் கருணையுடையது. இதனைச் செய்வதற்கான எண்ணம் எப்போதோ எமது அரசிடமிருந்தது. முகாம்களிலுள்ள புகலிடக் கோரிக்கையாளர்களைச் சுதந்திரமாக நடமாட அனுமதிப்பதற்கு ஆஸ்திரேலியா ஆதரவு வழங்குகிறது. பொலிஸ் மற்றும் சுகாதார வசதிகளை அந்த நாடு எமக்கு வழங்கியுள்ளது. அத்துடன் புகலிடக் கோரிக்கையாளர்களுக்கு உதவிட சமூக நலன் அதிகாரிகளின் எண்ணிக்கை 135 இலிருந்து 320 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது என நவ்று நீதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை – நவ்றுவின் இந்தச் செயற்பாட்டை ஆஸ்திரேலிய அரசு வரவேற்றுள்ளதுடன் தொடர்ந்தும் தமது ஆதரவு நவ்றுவுக்குக் கிடைக்குமெனவும் குறிப்பிட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவிடம் புகலிடம் கோரி வருவோரை நாட்டுக்கு வெளியே தடுத்துவைக்கும் கொள்கைக்கு எதிராக அந்தநாட்டு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கொன்று விசாரிக்கப்படச் சில நாள்கள் உள்ள நிலையில் நவ்றுவின் இந்த அறிவிப்பு வெளிவந்துள்ளது. (த-வ)

# ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் இரு ஒப்பந்தங்கள் கைச்சாத்து

கொழும்பு, ஒக்.6
வடமேல், வடக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களில் உள்ள 80 ஆயிரம் விவசாயக் குடும்பங்கள் பயனடையும் வகையில் மகாவலி நீரைப் பயன்படுத்திக் கொள்ளும் அபிவிருத்தித் திட்டம் ஒன்றுக்காக ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் இரு ஒப்பந்தங்களில் நிதி அமைச்சு கையொப்பமிட்டுள்ளது.

90 பில்லியன் ரூபாவைக் ( 675 மில்லியன் அமெரிக்க டொலர்கள்) கொண்டு நடைமுறைப்படுத்தப்படும் பிரதான திட்டத்தின் கீழ் எலஹர ஆறு, வடமேல் ஆறு மற்றும் மினிப்பே இடதுகரை ஆறு ஆகிய புனர்நிர்மாணத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் நெறிப்படுத்தலின் கீழ் மகாவலி அதிகார சபை மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகியவற்றால் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

மகாவலி நீரைப் பேணிப் பாதுகாக்கும் செயற்றிட்டம் எனக் குறிப்பிடப்படும் இந்தத் திட்டத்தின் ஒப்பந்தத்தில் இலங்கையின் சார்பாக நிதி அமைச்சின் செயலாளரான கலாநிதி ஆர்.எம்.எஸ்.சமரதுங்கவும், ஆசிய அபிவிருத்தி வங்கியின் சார்பாக அந்த வங்கியின் வதிவிடப் பிரதிநிதியான திருமதி சிறிவிதோவதியும் கையொப்பமிட்டுள்ளனர். (த-22)

# கொலன்னாவை பிரதி மேயர் கைது

கொழும்பு, ஒக்.6
பொலிஸாரை அச்சுறுத்திய குற்றச்சாட்டில் கொலன்னாவை பிரதி மேயர் கைது செய்யப்பட்டு நீதி மன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளார்.

கொலன்னாவை நகரசபை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கட்டுப்பாட்டில் உள்ளது. இதன் பிரதிமேயராக பந்துல சுரேஷ் கோதாகொட பதவிவகிக்கின்றார். கடந்த 30ஆம் திகதி நபரொருவரைத் தாக்கிய குற்றச்சாட்டில் பிரதி மேயரின் சகோதரர் ஒருவரையும், இன்னொருவரையும் வெல்லம்பிட்டிய பொலிஸார் கைதுசெய்திருந்தனர்.

எனினும், இவர்கள் இருவரையும் நீதிமன்றத்தில் நிறுத்தவேண்டாம் என்று பிரதிமேயர் பொலிஸாரை அச்சுறுத்தியுள்ளார். தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து பொலிஸ் உயரதிகாரிகளின் அறிவுரையின்படி கொலன்னாவை பிரதி மேயர் கோதாகொட பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். (த)

# சுவிஸ் வங்கியில் பணம் பதுக்கியுள்ளோர் பயமின்றி இலங்கையில் முதலிட வாய்ப்பு

## *விசாரணைகள் நடத்தப்படமாட்டாது என்கிறார் நிதியமைச்சர்*

கொழும்பு, ஒக்.6
சுவிஸ் வங்கிகளில் இரகசியமாகப் பணத்தை வைத்திருப்பவர்கள் அதனை மீளவும் இலங்கைக்கு கொண்டுவந்து முதலீடு செய்யும் பட்சத்தில் சம்பந்தப்பட்டவர்களுக்குப் பொதுமன்னிப்பு வழங்கப்படும் என நிதியமைச்சர் ரவி கருணா நாயக்க தெரிவித்துள்ளார்.

நிதியமைச்சில் நடைபெற்ற ஊடகச் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையைச் சேர்ந்த பலர் சுவிஸ் வங்கிகளில் 10 – 15 பில்லியன் டொலர் நிதியை இரகசியமாக வைத்திருக்கின்றனர் – இவ்வாறு இரகசிய இலக்கங்களில் [illegible] வைத்திருப்போர் தமது பணத்தை மீண்டும் நாட்டுக்குள் கொண்டு வரும்போது அவர்களிடம் விசாரணைகள் எதுவும் நடத்தப்படமாட்டாது எனவும் அவர் தெரிவித்தார்.

வெளிநாட்டவர்களின் கணக்குகளை மூடிவிடுமாறு சுவிஸ் அரசு கோரியிருந்ததையடுத்தே இந்த அறிவிப்பை விடுத்திருப்பதாக அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார்.

வாகனக் குத்தகைக்கான அதிகபட்ச பெறுமதிக்கான கடன் 70 சதவீதத்தில் இருந்து ஒக்ரோபர் 5 ஆம் திகதிமுதல் 90 சதவீதமாக அதிரிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தநிலையில் சுவிஸ் வங்கிகளில் [illegible] கொண்டுவந்து முதலீடு செய்யுமாறு அழைப்பு விடுத்துள்ளதுடன் இந்திய முதலீட்டாளர்களும் இங்கு வந்து தாராளமாக முதலீடுகளை மேற்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (த)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.இந்து, மானிப்பாய் ஏஞ்சல் இறுதிக்குள் பற்றிக்ஸ், யாழ். மத்தி அணிகளை வீழ்த்தி



யாழ்ப்பாணம், ஒக். 6
கொக்குவில் இந்துக்கல்லூரியின் மாணவனும் கூடைப்பந்தாட்ட வீரனுமான அமரர் கீர்த்திகன் ஞாபகார்த்தமாகக் கொக்குவில் இந்துக் கல்லூரியினால் யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையில் நடத்தப்பட்டுவரும் கூடைப்பந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டங்களில் யாழ். இந்துக் கல்லூரி, மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை என்பன வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றன.

***சென்.பற்றிக்ஸ் எதிர் யாழ்.இந்து***

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற அரையிறுதியாட்டங்களில் முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். இந்துக் கல்லூரி அணி மோதியது. இதில் யாழ். இந்துக் கல்லூரி அணி 69:52 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

***ஏஞ்சல் எதிர் யாழ்.மத்தி***

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரி அணி மோதிக்கொண்டது. இதில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை அணி 56:49 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. யாழ். இந்துக்கல்லூரி அணிக்கும், மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை அணிக்கும் இடையிலான இறுதியாட்டம் இன்று மாலை 4 மணியளவில் கொக்குவில் இந்துக்கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நடைபெறவுள்ளது.

(ம–23)

## றோயலிடம் வீழ்ந்தது றேஞ்சர்ஸ்



மாங்குளம், ஒக். 6
வடமராட்சி மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தினால் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தப்பட்டுவரும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் உதைபந்தாட்டத் தொடர் குறித்த கழக மைதானத்தில் நடைபெற்று வருகிறது.
இந்தத் தொடரில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஆட்டமொன்றில் றோயல் அணியிடம் வீழ்ந்தது றேஞ்சர்ஸ் அணி.
ஆட்டம் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய றோயல் அணி முதல் பாதியின் முடிவிலேயே 2:0 என்று முன்னிலை வகித்தது.
முதல் பாதியைப் போல் இரண்டாம் பாதியிலும் மேலும் இரண்டு கோல்கள் றோயல் சார்பாக பதியப்பட முடிவில் 4:0 என்ற கோல் கணக்கில் அடுத்த சுற்றுக்கு தகுதிபெற்றது றோயல் அணி.

(ம–422)



## மகாஜனாவிடம் வீழ்ந்தது அருணோதயா

யாழ்ப்பாணம், ஒக். 6
அடுத்த வருடம் 15வயதுக்கு உட்பட்ட அணிகளில் இடம்பிடித்து சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தும் விதமாக வீரர்களைத் தயார்ப்படுத்தும் நோக்கத்துடன் தேசிய விளையாட்டு அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் தற்போதைய 13வயதுக்கு உட்பட்ட பெண்கள் அணிகளுக்கிடையில், மாகாண ரீதியாக நடத்தப்பட்ட வலைப்பந்தாட்டத் தொடரில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி சம்பியனாகியது.
கடந்த சனிக்கிழமை அல்வாய் மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியை எதிர்த்து அளவெட்டி அருணோதயக் கல்லூரி அணி மோதியது. மூன்று செற்களில் முதலிரு செற்களையும் 15:13, 15:10 என்ற அடிப்படையில் கைப்பற்றி சம்பியனாகியது மகாஜனக் கல்லூரி.

(ம–108)



## நாளைய மோதல்கள்

மாங்குளம், ஒக். 6
மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தினால் யாழ். மாவட்டத்திலுள்ள அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையே நடத்தப்பட்டு வரும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடர் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்றுவருகிறது. இந்தத் தொடரில் நாளை புதன்கிழமை மாலை 4மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணிமோதவுள்ளது.

(ம–422)

## உதைபந்தாட்டக் கலந்துரையாடல்

மாங்குளம். ஒக். 6
யாழ்.மாவட்ட பாடசாலைகளின் 16 வயதுக்கு உட்பட்ட இருபாலாருக்குமான உதைபந்தாட்டத் தொடர்கள் எதிர்வரும் 10ஆம், 11ஆம், 12ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.
குறித்த தொடர் தொடர்பாகக் கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை யாழ். கல்வி வலயத்தில் நடைபெறவுள்ளதால் பங்குபற்றும் பாடசாலைகளின் பொறுப்பாசிரியர்கள் குறித்த கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு வடமாகாணப் பாடசாலைகளின் உதைபந்தாட்ட இணைப்பாளர் காந்தரூபன் அறிவித்துள்ளார்.
(ம–422)

## நெடுந்தீவு உதைபந்தாட்டத் தொடர்

யாழ்ப்பாணம், ஒக். 6
நெடுந்தீவு மத்திய சனசமூக நிலையத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவையொட்டி குறித்த சனசமூக நிலையத்தால் உதைபந்தாட்டத் தொடர் ஒன்று நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.
நெடுந்தீவு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் ஏழு வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான இந்த உதைபந்தாட்டத் தொடர் எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகும் என்று ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது.

(ம–7)

# சென்.அன்ரனிஸ், இளைஞர் அணிகள் அடுத்த சுற்றுக்குத் தகுதி

கரணவாய், ஒக். 6
வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டத் தொடர், குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இந்தத் தொடரில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஆட்டங்களில் வெற்றிபெற்ற சென்.அன்ரனிஸ், இளைஞர் கழகங்கள் அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

**சென்.அன்ரனிஸ் எதிர் டயமன்ஸ்**

முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகமும் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. பல சவால்களுக்கும் எதிர்ப்புக்களுக்கும் மத்தியில் சென்.அன்ரனிஸ் சார்பாக ஆட்டத்தின் 17 ஆவது நிமி



டத்தில் முதல் கோல் ப[illegible] சயந்தனால் அடிக்கப்பட்[illegible] கோலே முதல்பாதியின் இறுதிக்கோலுமாக முடிவடைந்தது முதல் பாதி. [illegible] இரண்டாம் பாதியின் பதினேழாவது நிமிடத்தில் பதில் கோலையும் தமது முதல் கோலையும் பதிவுசெய்ய ஆட்டம் 1:1 என்று சமநிலையானது. மேலதிகமாகக் கோல்கள் எவையும் பதியப் படவில்லை. இதனால் சமநிலைத் தவிர்ப்பு உதைவரை ஆட்டம் நீடித்தது. சமனிலை தவிர்ப்பு உதையில் 4:2 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு தகுதிபெற்றது பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம்.

***இளைஞர் எதிர் கரவைச்சுடர்***

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகமும் கரவைச்சுடர் விளையாட்டுக் கழகமும் மோதின.
ஆரம்பம் முதலே திக்கம் இளைஞர் அணியின் தீபன் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அவரால் மட்டுமே ஐந்து கோல்கள் பதிவாக முடிவில் 6:0 என மிக இலகுவான வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது திக்கம் இளைஞர் அணி.

(ம–108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிண்ணம் பாகிஸ்தானிடம்

## மூன்றாவது ஆட்டத்தில் சிம்பாப்வேயை வீழ்த்தி



பாகிஸ்தான், சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின்மூன்றாவதும்இறுதியானதுமான ஆட்டத்தில் 7 இலக்குகளால் வெற்றிபெற்ற பாகிஸ்தான் தொடரையும் 2:1 என்ற அடிப்படையில் கைப்பற்றியது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான்முதலில்களத்தடுப்பைத் தீர்மானிக்க ஆரம்ப வீரர்களாக களமிறங்கிய சிப்கபா, முதும்பானி இருவரும் சிம்பாப்வேக்கு சிறந்த அடித்தளத்தை அமைத்துக் கொடுக்கவே செய்தனர். நடப்பு தொடரில் பாகிஸ்தானுக்கு எதிரான சிறந்த ஆரம்பம் இதுதான். இணைப்பாட்டமாக89 ஓட்டங்கள்பகிரப்பட்டிருந்த நிலையில் அரைச்சதத்தை இரண்டு ஓட்டங்களால் தவறவிட்டு முதலாவதாகஆட்டமிழந்தார்சிப்கபா.அரைச்சதம்கடந்தார் முதும்பானி. இவர்கள் இருவரைத் தவிர வேறெந்த மத்திய வரிசை வீரர்களும் நிலைக்கவில்லை. சைறி 4 ஓட்டங்களுடனும் வில்லியம்ஸ் 5 ஓட்டங்களுடனும் சிக்கும்புரா ஓட்டங்கள் எதனையும் பெறாமலும்ரசா2ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க தற்பொழுது சிம்பாப்வே 121-5. மறுமுனையில் நிலைத்துநின்ற முதும்பானியும் 67 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க முடிவில் சிம்பாப்வே 161 ஓட்டங்களில் சுருண்டது. பந்துவீச்சில் பாகிஸ்தான் சார்பாக பிலால் அசிப் 5 இலக்குகளை வீழ்த்தினார்.

300 பந்துகளில் 162 ஓட்டங்கள் என்ற இலகுவான இலக்கை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான், ஆரம்ப வீரர்களான பிலால் அசிப்பின் அதிரடியில் 11 ஆவது பந்துப்பரிமாற்றத்திலேயே 60 ஓட்டங்களை எட்டியது. 38 ஓட்டங்களுடன் அசிப் ஆட்டமிழக்க கபீஸ் வந்த வேகத்திலேயே பவிலியன்திரும்பினார்.சபிக்கும்மலிக்கும் தொடர்ந்தும்களத்தில்நிலைத்துநின்று ஆட்டத்தை வெற்றியுடன் முடித்து வைத்தனர். ஆட்டநாயகனாக பிலால் அசிப் தெரிவானார். (ம)

# இந்தியாவுக்கு நெத்தியடி

## தொடரை வென்றது தென்னாபிரிக்கா



இந்தியா – தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடரின் இரண்டாவது ஆட்டத்தில் 6 இலக்குகளால் வெற்றிபெற்று தொடரை 2:0 என்றஅடிப்படையில் கைப்பற்றியது தென்னாபிரிக்கா.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணித்தலைவர் பிளாஸிஸ் முதலில் களத்தடுப்பைத் தீர்மானிக்க இந்திய அணியின் ஆரம்ப வீரர்களாக ரோகித் சர்மா மற் றும் சிக்கர் தவான். தவான் பவுண்டரியுடன் இன்னிங்ஸை ஆரம்பித்தாலும் 11 ஓட்டங்களுடன் அவரைபவிலியனுக்குஅனுப்பினார் மொறிஸ். தேவையற்ற அழைப்பை ஏற்படுத்தி கோக்லியை ரண்அவுட் ஆக்கிய ரோகித் அடுத்த சில பந்துப்பரிமாற்றங்களில் தானும் ரண் அவுட் ஆனார். ரபட்டா வீசிய தாழ்வானபந்தில்டக்குடன்வீழ்ந்தார் ராயிடு. தற்பொழுது இந்தியா 45-4. களத்தில் டோனி மற்றும் ரெய்னா. தற்பொழுதும் இந்தியாவுக்கான வாய்ப்புக்கள் இருக்கத்தான் செய்தது. டோனியின் துடுப்பில் எதேச்சையாக பட்ட பந்தை முன்னோக்கி பாய்ந்து பிடித்தார் இலக்குக்காப்பாளரான வில்லியர்ஸ். தாகிரின் சுழலில் சிக்கினார் ரெய்னா இந்தியாவின் இறுதி நம்பிக்கையும் சென்றது. தற்பொழுது ஓரளவு துடுப்பாட்டம் தெரிந்த வீரர் என்றால் அது அஸ்வின் மட்டுமே. அவராலும் நீண்ட நேரம் தாக்குப் பிடிக்க முடியவில்லை. முடிவில் இந்தியா 92 ஓட்டங்களில் அனைத்து இலக்குகளையும் பறிகொடுத்தது. ரி-20 ஆட்டங்களில் இந்தியாவின் இரண்டாவது குறைந்தபட்ச ஓட்ட எண்ணிக்கை இதுவே.

அம்லா, வில்லியர்ஸ், பிளாஸிஸ், டுமினி, மில்லர், பெக்கார்டின் என்று துடுப்பாட்டப் படையே உள்ள தென்னாபிரிக்காவுக்கு இதெல்லாம் ஒரு இலக்கே இல்லை. களத்தில் ஆரம்ப வீரர்களாக அம்லாவுடன் வில்லியர்ஸ்.முதல்பந்துப்பரிமாற்றத்தில் 9 ஓட்டங்களை வாரி வழங்கினார் புவனேஸ்குமார். அடுத்த பந்துப்பரிமாற்றத்திலேயே அஸ்வினிடம் சிக்கினார் அம்லா. சிக்சர், பவுண்டரி என்று மாறிமாறி விளாசிய பிளாஸிசையும் வீழ்த்தி நெருக்கடியை ஏற்படுத்தினார் அஸ்வின். ஓரிரு பந்துப்பரிமாற்றங்களில் போல்ட்டானார் வில்லியர்ஸ். டுமினியும் பெக்கார்டினும் நிலைத்து நிற்க தென்னாபிரிக்கா வெற்றிக்கு அருகில் சென்றது. சில ரசிகர்கள் மைதானத்துக்குள் தண்ணீர்ப் போத்தல்களை வீசியெறிந்து அடாவடித்தனம் செய்தனர். இதனால் ஆட்டம் சில நிமிடங்கள் தடைப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு மீண்டும் ஆரம்பித்தது. விடைபெற்றார் பெக்கார்டின். வழக்கம்போல் இறுதிவரை களத்தில் நின்று ஆட்டத்தை வெற்றியுடன் முடித்து வைத்தார் டுமினி. (ம)

# முரளிகிண்ணத்தொடரின் ஆரம்ப நிகழ்வு இன்று

நடப்புவருடத்தின்முரளிக்கிண்ணத் தொடர் நாளை முதல் நடைபெறவுள்ள நிலையில் குறித்த தொடருக்கான ஆரம்ப நிகழ்வுகள் இன்று செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி மத்தியகல்லூரி மைதானத்தில் பிற்பகல் 2மணிக்கு நடைபெறவுள்ளன. இன்றை நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக சங்ககார கலந்து கொள்ளவுள்ளார். (ம-23)

# சொந்தத் தொடரை சொந்தமாக்கியது பிரண்ட்ஸ் விளையாட்டுக் கழகம்



யாழ்ப்பாணம், ஓக். 6

வவுனியா பிரண்ட்ஸ் விளையாட்டுக்கழகத்தின் 7ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு குறித்த கழகத்தினால் வடமாகாண ரீதியில் நடத்தப்பட்ட ரி-20 தொடரில் பிரண்ட்ஸ் அணி4இலக்குகளால்வெற்றிபெற்று சம்பியன் ஆனது.

நேற்றுமுன்தினம் வவுனியா நகர சபை மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் பிரண்ட்ஸ் அணியை எதிர்த்து யங்ஸ்ரார் அணி மோதிக் கொண்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய யங்ஸ்ரார் அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 160 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக தனுசன் 38 ஓட்டங்களையும், ரட்ணகுமார் 22 ஓட்டங்களையும் கிருசாந்தன் 22ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச் சில் பிரண்ட்ஸ் அணி சார்பில் பிரவீன், கெட்டி ஆராச்சி, டினோசன் மூவரும் தலா ஓர் இலக்கினையும் வீழ்த்தினர்.

161 ஓட்டங்களை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பிரண்ட்ஸ் அணியினர் 19.1 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 166 ஓட்டங்களைப் பெற்றனர். அதிகபட்சமாக சத்தியமூர்த்தி 39 ஓட்டங்களையும் சாந்தகுமார் 33 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் யங்ஸ்ரார் அணி சார்பில் தசிதரன் 3 இலக்குகளை வீழ்த்தினார். ஆட்டநாயகனாக பிரண்ட்ஸ் அணியின் சத்திய மூர்த்தியும் தொடராட்டநாயகனாக சுபாஸும் சிறந்த துடுப்பாட்ட வீரராக யங்ஸ்ரார் அணியின் தனுசனும் சிறந்த பந்துவீச்சாளராக அதே அணியின் தசிதரனும் சிறந்த களத்தடுப்பாளராக பிரண்ட்ஸ் அணியின் அஞ்சனும் தெரிவானார்கள்.

பிரதம விருந்தினராக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மஸ்தான் கலந்து கொண்ட அதே நேரம் சிறப்பு விருந்தினர்களாக வவுனியா மாவட்ட விளையாட்டுத் துறை அதிகாரி லலித் ஜெயசேகர, வவுனியா மாவட்டதுடுப்பாட்டச்சங்கதலைவர் றஜிபன், வவுனியா மாவட்ட துடுப்பாட்டச் சங்க செயலாளர் கமலன், வவுனியா மாவட்ட துடுப்பாட்ட நடுவர் சங்க தலைவர் சுதாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-23)

## PICTURE OF THE DAY



சிம்பாப்வே -பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் நேற்று நடைபெற்ற மூன்றாவது ஒரு நாள் ஆட்டத்தில பாகிஸ்தானின் வேகப் பந்து வீச்சாளர் இர்பானின் பவுண்சரால் தாக்கப்பட்ட சிம்பாப்வேயின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் முதும்பானி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் அணியில் எட்டு ஆண்கள்

## ஈரான் உதைபந்தாட்டத்தில் மீண்டும் பாலின சர்ச்சை


SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE

இம்முறை A/L, O/L எழுதியோர், பல்கலை புகுமுக மாணவர்கள் இளைஞர், யுவதிகள், தொழில்புரிவோர், இணைய முடியும்.

எமது 3 மாத பயிற்சி நிறைவில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியாது விடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம் வழங்கப்படும்.

சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் 10.10.2015 சனிக்கிழமை

1. காலை 08.00-10.00 3. பி.பகல் 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00

வார நாள் (திங்கள், புதன்) பிரிவுகள் ஆரம்பம் 12.10.2015
1. காலை 8.00-10.00 2. காலை 10.00-12.00

10.10.2015 இற்குமுன் பதிவுசெய்வோருக்கு சான்றிதழ் மற்றும் அனுமதிக்கட்டணம் என்பன இலவசம்!

SAAMSON Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர். 021 320 3313
கொழகாமம் வீதி, நெல்லியடி. 077 621 4567


ஈரான் தேசிய பெண்கள் உதைபந்தாட்ட அணியில் 8 ஆண்கள் விளையாடிவரும் தகவல் உதைபந்தாட்ட உலகில் பரபரப்பாக பேசப்படும் விடயமாக மாறியுள்ளது.

1976ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஈரான் பெண்கள் உதைபந்தாட்ட அணி கடந்த 2005ஆம் ஆண்டு மறுசீரமைக்கப்பட்டது. இந்த நிலையில் தற்பொழுது அந்த அணியில் இடம்பெற்றுள்ள நபர்களில் 8 பேர் ஆண்கள் என்றும், பாலின மாற்று அறுவை சிகிச்சை செய்து கொள்ள காத்திருக்கும் அவர்கள் அதற்கு முன்பாகவே பெண்கள் அணியில் விளையாடியதும் தெரியவந்துள்ளது.

கடந்த ஆண்டு ஈரான் பெண்கள் உதைபந்தாட்ட அணியில் 4 ஆண்கள் இருப்பது தெரியவந்ததை அடுத்து அவர்கள் அனைவரும் நீக்கப்பட்டதுடன் ஈரான் உதைபந்தாட்ட சம்மேளனத்துக்கு சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தால் (பிபா) கண்டனங்களும் விடுக்கப்பட்டன. இதை தொடர்ந்து பெண்கள் அணியில் உள்ள அனைவரும் கட்டாயம் பாலின சோதனை நடத்த ஈரான் அரசு உத்தரவிட்டது. அதன்படி கடந்த புதன்கிழமை நடத்தப்பட்ட பாலின சோதனையிலேயே தற்போதைய ஈரான் அணியில் 8 ஆண்கள் விளையாடியமை தெரியவந்துள்ளது. குறித்த விடயம் தொடர்பாக சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் இன்னமும் கருத்துத் தெரிவிக்க வில்லை. விரைவில் பிபாவின் கருத்தும் வெளியாகும் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. (ம)


Account's clerk தேவை

பிரபல தனியார் நிறுவனம் ஒன்றிற்கு Account's clerk தேவை. உங்கள் சுயவிபரக்கோவையை 10.10.2015 இற்கு முன்னர்
jaffnavacancy@gmail.com
என்ற மின்னஞ்சல் முகவரிக்கு
Or
விளம்பர இல. 1515
C/O உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் விலாசத்திற்கு அனுப்பவும்.





முகுருசா

## வீனஸ், முகுருசா இறுதியில் மோதல்

சீனாவில் நடைபெற்றுவரும் ரென்னிஸ் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவில் இறுதியாட்டத்துக்கு முன்னேறியுள்ளார் அமெரிக்க வீராங்கனையான வீனஸ் வில்லியம்ஸ்.

அரையிறுதி ஆட்டத்தில் வீனஸ் வில்லியம்ஸை எதிர்த்து மோதினார் இத்தாலி வீராங் கனையான வின்சி. இதில் வீனஸ் 5–7, 6–2, 7–6 என்ற செற்கணக்கில் இத்தாலி வீராங்கனை வின்சியைத் தோற்கடித்து இறுதிக்கு முன்னேறினார். இறுதியாட்டத்தில் வீனஸை எதிர்த்து நிற்கிறார் ஸ்பெயின் வீராங்கனை முகுருசா.

முகுருசா தனது அரையிறுதி ஆட்டத்தில் 6–4, 7–6 என்ற நேர் செற் கணக்கில் ஜேர்மனி வீராங்கனை ஏஞ்சலிக் கெர்பரை வீழ்த்தியிருந்தார். (ம)

## உடுவில் மகளிர், கொக்குவில் இந்து இறுதியாட்டத்தில் மோதத் தகுதி

யாழ்ப்பாணம், ஒக். 6

கொக்குவில் இந்துக்கல்லூரியின் மாணவனும் கூடைப் பந்தாட்ட வீரனுமான அமரர் கீர்த்திகனின் ஞாபகார்த்தமாக கொக்குவில் இந்துக்கல்லூரியினால் யாழ்.மாவட்ட பாடசாலை அணிகளுக்கு இடையில் நடத்தப்பட்டுவரும் இரு பாலருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரில் உடுவில் மகளிர் கல்லூரி, கொக்குவில் இந்துக்கல்லூரி என்பன இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றுள்ளன.

**உடுவில் மகளிர் எதிர் திருக்குடும்ப கன்னியர் மடம்**

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்துக்கல்லூரியின் கூடைப் பந்தாட்டத் திடலில் முதலாவதாக இடம் பெற்ற அரையிறுதியாட்டத்தில் உடுவில் மகளிர்கல்லூரி அணியை எதிர்த்து திருக் குடும்ப கன்னியர் மட அணி மோதிக் கொண்டது. இதில் உடுவில் மகளிர் கல்லூரி 60:49 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

**கொக்குவில் இந்து எதிர் யாழ். இந்து மகளிர்**

நேற்று இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியை எதிர்த்து யாழ். இந்து மகளிர் கல்லூரி மோதியது. இதில் கொக்குவில் இந்துக் கல்லூரி 69:39 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று இறுதி யாட்டத்துக்கு தகுதி பெற்றது. (23)




NEW SCIENCE HALL, JAFFNA
CHEMISTRY DAY CLASS - 2016 A/L

யாழ். கொழும்பு பிரபல ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகிறது.

| யாழ்ப்பாண ஆசிரியர் | கொழும்பு ஆசிரியர் |
|---|---|
| க.சிவத்திரன் | S.T உமாசங்கர் |
| B.Sc (Hons) | B.Sc (Che.Sp) M.Sc. |
| கடந்தகால வினாவிடை அலகுரீதியான மீட்டலுடன் நடைபெறுகிறது. | மாதிரி வினாவிடை அலகுரீதியான மீட்டலுடன் நடைபெறுகிறது. |
| Mon. Tue, Wed & Fridays 9.30 - 11.30 Sat & Sun 2.00 - 3.30 | Thursday 9.30 - 11.30 |

TUESDAYS EXAM - 9.30 - 11.30
குறிப்பு : Physical Chemistry theory classes
ஆரம்பம் : Sat (10.10.2015) 11.45 - 1.30
Sat & Sun by : K.Sivathiran
(65186)(10.17)

Jaffna Central College Education Care Trust
யாழ். மத்திய கல்லூரி கல்வி பராமரிப்பு நிதியம்

தரம் 6 முதல் A/L வரை தமது கல்வியைத் தொடரும் 20 மாணவர்களுக்கு அனுசரணை
யாழ் மத்திய கல்லூரி ஆரம்பித்து 200 ஆண்டுகள் பூர்த்தியை முன்னிட்டு இந்தத் திட்டம் எம்மால் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

- 2016 ஆம் கல்வி ஆண்டுக்கான புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டங்கள்
- நிலையத்தால் தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு பிரத்தியேக வகுப்பறைகள் வழங்கப்படும்.
- புலமைப்பரிசில் வெகுமதிகள் ஒவ்வொரு மாணவர்களுக்கும் மாதாந்தம் தலா 1200 ரூபா.
- விண்ணப்பதாரிகள் 170 புள்ளிகளுக்கு மேல் புலமைப்பரிசில் பரீட்சையில் பெற்றிருக்க வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி : 30.11.2015
தொடர்பு : S.Sukirathan - 021 222284
விண்ணப்பங்களை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பவும்
யாழ்.மத்திய கல்லூரி கல்வி பராமரிப்பு நிதியம்,
யாழ்.மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்.

ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்
IELTS
• Latest training materials. (BOOK 10)
• Skills development in all four categories.
• Personalised guidance and ample of opportunities to interact with the lecturer.
IELTS Life Skills
திருமணம் செய்து நிரந்தர விசாவில் UK செல்பவர்களுக்கானது, 2015 புதிய நடைமுறைக்கு அமைவாக இலகுவான முறையில் UK அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆங்கில பரீட்சை
British Council'S IELTS Registration Centre
Spoken English (Veta Fluency Diploma)
DMI INTERNATIONAL ENGLISH COLLEGE
யாழ்ப்பாணம் 021 222 4403 Hot Line :0777173517
நெல்லியடி 021 226 2470 | சாவகச்சேரி 021 227 0775 | சுன்னாகம் 021 224 1970 | கிளிநொச்சி 021 228 5655

OLIARAZI
மகளிர் மாத சஞ்சிகை
ஒளிஅரசி
ஒளி - 02 இதழ் - 10
பக்கங்கள் : 68 + viii
ஆசிரியர் தின சிறப்பிதழாக
ஆசிரியர் தினத்தை முன்னிட்டு இன்று வெளிவருகின்றது.
ஒக்டோபர் மாத இதழ்
பிரதிகளை நாளைமுதல் முகவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.10.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.